18 வது வருடத்தில்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
HOMELIFE HIGHER STANDARDS
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 18 பாலம் 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2008

# அழுகின்றது ஈழம்! கொந்தளிக்கின்றது தமிழகம்!



விமானத்தாக்குதல், எறிகணை தாக்குதல் என்று மகிந்த அரசின் யுத்தத்தால் ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை "பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தம்" என்று மகிந்த அரசு பிரகடனம் செய்துள்ளது.

இந்நிலையில் எமது இரத்த உறவுகளான தமிழக மக்கள் ஈழத்தமிழர் மீதான படுகொலைகளுக்கு எதிராக கொந்தளிக்கின்றனர்.

"எங்களுக்கு முக்கியத் தேவை உங்கள் ஒற்றுமைதான்! அதனை விடுத்து கவனம் திரும்பி, உங்களுக்குள் நடக்கும் யுத்தத்தை நோக்கி எல்லோர் கவனத்தையும் திசை திருப்பி விடாதீர்கள் என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சுகிறான் அந்த ஈழத் தமிழன்" என்று தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்த விகடன் தெரிவித்துள்ளது.

ஆனந்தவிகடன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "சிறிலங்கா அரசுக்கு ஆயுதமும் இராணுவ நுட்பமும் கொடுக்காதீர்கள்" என்ற குரலுக்கு, இந்திய அரசு நிம்மதியான ஒரு பதிலும் தராமல் போனதில் ஈழத் தமிழனுக்கு மிகப் பெரிய ஏமாற்றம்! அதைக்கூட தாங்கிக்கொள்ள முடிந்த அவனால், "தமிழர்கள் மீதான கொடூரத் தாக்குதலை உடனே நிறுத்துங்கள்" என்று உரக்கச் சொல்வதற்குக்கூட இந்தியா தயங்குவதைத்தான் பொறுத்துக்கொள்ளவே முடியவில்லை.

அவனுடைய ஒரே ஆறுதல், தமிழகத்திலிருந்து சகோதர பாசத்தோடு எழும் ஆதரவுக்குரல்கள் மட்டுமே. அதேசமயம், "ஆதரவுக் குரல்களே குயுக்தி குரல்களாக மாறி, தமிழக அரசியல் கட்சிகள் பரஸ்பரம் தங்களை வீழ்த்திக்கொள்ளும் ஆயுதமாவதை அவன் அதிர்ச்சியோடு கவனிக்கிறான். தமிழகத்தில் அரங்கேறும் கைதுகள் ஒருபோதும் தன் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை அவன் அறிவான்.

"சகோதர சொந்தங்களே... இந்த நேரத்தில் எங்களுக்கு முக்கியத் தேவை உங்கள் ஒற்றுமைதான்! அதைவிடுத்து கவனம் திரும்பி,

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

# பராக் ஒபாமா? அல்லது ஜோன் மக்கெயன்?

## பராக் ஒபாமா வெற்றி பெறுவார் என்பது கருத்துக் கணிப்பீடு!

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடக்கின்ற, உலக நாடுகள் யாவும் ஆச்சரியத்துடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்ற, உலக நாடுகளையே தமது கண்காணிப்பில், கட்டுபாட்டில் வைத்திருக்க வேண்டும் எதிர்பார்த்து அதன்படி தமது வெளிநாட்டு கொள்கையினை வகுக்கும் அமெரிக்காவின் 56வது ஜனாதிபதி தேர்தல் இம்மாதம், நவம்பர் 4ஆம் திகதி நடைபெற உள்ளது. கடந்த ஐம்பத்தைந்து ஜனாதிபதி தேர்தலையும் விட இம்முறை தேர்தல் என்பது சர்வதேசத்தின் பார்வையில் ஒரு விசித்திரமான, ஆச்சரியமான பார்வைக்குரிய தேர்தல் ஆகும். ஏனெனில் வெள்ளை இனத்துவேசம் கொண்ட ஒரு நாட்டின் அதி உயர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட கறுப்பின மனிதன் வெற்றி பெறும் நிலைமை உருவாகியிருப்பதே ஆகும்.

என்றுமே ஒரு வசீகரமான, ஆளுமையுள்ள சிரிப்புடன், வயதில் குறைந்த மெல்லிய உடல் கட்டு கொண்ட இக்கறுப்பு இனத்துடன் கலந்த, புதிதாக வருப்போகும் என எதிர்பார்க்கும் இவ் ஜனாதிபதி யார்? பராக் ஒபாமா (**Barack Obama**). ஆகஸ்ட் 04, 1961 ஆண்டு அமெரிக்காவில் ஹவாய் மாகாணத்தில் உள்ள ஹொனுலூயு (Honolulu) நகரில் பிறந்தார். இவரது தந்தை ஆபிரிக்காவில் உள்ள கென்யா (Kenya) நாட்டினை பூர்வீகமாக கொண்ட கறுப்பின முஸ்லீம் மதத்தினை சேர்ந்தவர்.

ஒரு வெளிநாட்டு மாணவனாக ஹவாய் பல்கலைக்கழகத்தில் படித்து கொண்டிருக்கும்போது அமெரிக்க வெள்ளை இனத்தினை சேர்ந்த பெண்ணை காதலித்து திருமணம் செய்து, இத்தம்பதிகளுக்கு கறுப்பின சாயலில் பிறந்தவரே பராக் ஒபாமா ஆவார். ஆனால் இவரின் பெற்றோர் இவருக்கு இரு வயதாக இருக்கும்போதே விவாகரத்து செய்து கொண்டனர். தந்தையார் பின்னர் தமது சொந்த நாடான கென்யாவுக்கு திரும்பிச் சென்று 1982

தொடர்ச்சி 03ஆம் பக்கம்

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

துரித பணமாற்றுச் சேவை
• 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

றிப்ளக்ஸ் REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS

MORTGAGES • Residential • Commercial • Line of Credit
• Low Interest • 40 Lenders • Pre-approval • Re-finance
• Debt Consolidation • Bad or No Credit OK • Self-employed OK
• New Immigrant OK • Private Funds also OK
We GET YOU GOOD MORTGAGE even if Banks say 'No'
STANDARD MORTGAGES INC.
ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520
Gold Coin Group Inc.
INSURANCE • All Insurance Companies • Life • Critical illness
• Disability • Health & Dental • Travel • Visitors • Mortgage
RESP • Govt. grants • Highest scholarships paid till now
RRSP • Excellent growth • Reduced taxes • Unrestricted
Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES
Email: anandap98@yahoo.com, Fax: 647-342-2399

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential & Commercial Properties
HomeLife/GTA Realty Inc. Real Estate Brokerage* *Independently Owned and Operated
1711 McCowan Rd., Suite #206, Scar, ON, M1S 2Y3
Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969

கதிர்
GTA Square SOLD OUT !
Last 7 Units Available
Middlefield & Finch
24hr. 416.856.6900
Office: 416.321.6969
Email: kathirs@rogers.com
Call me for a change
Don't Miss Out
Kathir S. Kathirkamanathan P.Eng.
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., #206, Toronto
Independently owned & operated

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

# உங்கள் நிதியமும் பணச்சந்தையும்

தொடர்ந்து பங்குச் சந்தையில் நிச்சயமற்ற நிலை தென்படுகின்றது. சிலமாதங்களுக்கு முன்பு ரொறொன்ரோ பங்குச் சந்தையின் விலை அளவு 15000 புள்ளிகளில் இருந்தது. கடந்த ஒருமாதமாக 9000 புள்ளிகளை ஒட்டியே இருந்து வருகின்றது. மொத்தத்தில் சுமார் 40 சதவீதம் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

முன்பு எல்லாம் பங்குச் சந்தையில் தடுமாற்றம் ஏற்படும் போதெல்லாம் தங்கத்தின் விலை ஏறுவது வழக்கம். தற்சமயம் தங்கத்தின் விலையிலும் வீழ்ச்சி தென்படுகின்றது. பெற்றோலிய பொருட்களின் விலையிலும் வீழ்ச்சி. எண்ணை உற்பத்தி செய்யும் நாடுகள், உற்பத்தியின் அளவைக் குறைக்கப் போவதாக அறிவித்துள்ளன. ஆனாலும் எண்ணை விலைகள் தொடர்ந்து விழுகின்றன.

'வானம் இடிந்து விழுந்து விடவில்லை. இன்னும் அங்கேயே, இன்றும் சூரியன் உதித்துக் கொண்டு தானிருக்கின்றான். கனடியப் தொடர்ந்து பங்குச் சந்தையில் நிச்சயமற்ற நிலை தென்படுகின்றது. சிலமாதங்களுக்கு முன்பு ரொறொன்ரோ பங்குச் சந்தையின் விலை அளவு 15000 புள்ளிகளில் இருந்தது. கடந்த ஒருமாதமாக 9000 புள்ளிகளை ஒட்டியே இருந்து வருகின்றது. மொத்தத்தில் சுமார் 40 சதவீதம் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

முன்பு எல்லாம் பங்குச் சந்தையில் தடுமாற்றம் ஏற்படும் போதெல்லாம் தங்கத்தின் விலை ஏறுவது வழக்கம். தற்சமயம் தங்கத்தின் விலையிலும் வீழ்ச்சி தென்படுகின்றது. பெற்றோலிய பொருட்களின் விலையிலும் வீழ்ச்சி. எண்ணை உற்பத்தி செய்யும் நாடுகள், உற்பத்தியின் அளவைக் குறைக்கப் போவதாக அறிவித்துள்ளன. ஆனாலும் எண்ணை விலைகள் தொடர்ந்து விழுகின்றன.

'வானம் இடிந்து விழுந்து விடவில்லை. இன்னும் அங்கேயே, இன்றும் சூரியன் உதித்துக் கொண்டு தானிருக்கின்றான். கனடியப் பொருளாதாரம் எப்போதும் போல இயங்கிக் கொண்டுதான் இருகின்றது.' இப்படியெல்லாம் சமீபத்தில் சொன்னவர் Bank of Canada கவர்னர் மார்க் கார்னி ஆவர். அவரும் கனடியப் பொருளாதாரம் சுருங்குகின்றது என்றுதான் கருதுகிறார். அவருடைய கருத்துகளில் சில கீழே தரப்பட்டுள்ளது.



- வேலை இழப்புக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எவ்வளவு இழப்பு ஏற்படும் என்று கணிக்க இயலாது.

- வரும் காலங்களில் புதிய வேலை அதிகரிப்புக்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவே.

- வீட்டு விலைகள் ஏற்கனவே குறையத் தொடங்கி விட்டன. மேலும் வீட்டு விலைகள் விழக்கூடும்.
- தனிநபர் சேமிப்புக்கள் மேலும் பாதிப்புக்கு ஆளாகலாம். அதனால் தனிநபர் செலவீனங்கள் குறையத் தொடங்கும். அதாவது மக்கள் செலவு செய்வதைக் குறைத்துக் கொள்வர்.

கனடிய அரசாங்கத்தின் வரவு செலவு பட்ஜெட் பல ஆண்டுகளாக உபரியில் இருந்து வந்துள்ளது. இந்த வருடம் பற்றாக்குறையில் இருக்கும் என்று நம்பப்படுகின்றது. ஒன்ராரியோ மாநிலம் ஏற்கனவே பாதிப்புக்கு ஆளாகி இருப்பதாக அறிவித்துள்ளது.

வங்கியில் வட்டி வீதங்களும் குறைகின்றன. தொடர்ந்து குறைவதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே தென்படுகின்றது. ஆனால் வீட்டுக்கடனுக்கு ஆன, நிலையான வட்டியில், பெரிய இறக்கம் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. மாறும் வட்டி வீதத்திலும், பெரிய நன்மை எதுவும் நடந்து விடவில்லை. முன்பு எல்லாம் வங்கிகள் மாறும் வட்டிவீதத்தைக் குறிப்பிடும் போது பிரைம் ரேட்டிலிருந்து 0.5 சதவீதத்திலிருந்து 0.95 வரைகுறைத்துக் கொடுப்பது வழக்கம். வீட்டுக்கடன் வட்டிவீதம் தற்போது பிரைம் ரேட்டிலிருந்து ஒருசதவீதம் வரை கூட்டிச்

**பெரி. முத்துராமன்**

சொல்லப்படுகின்றது.

சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காத கதை. Bank of Canada குறைக்கும் வட்டி வீதங்களின் முழுப்பயன் இன்றைக்கு வாடிக்கையாளரைச் சென்றடையவில்லை. அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. வங்கிகளின் பங்குகள் அடிமட்டத்தைத் தொட்டுள்ளன. இதுதான் அடிமட்டமா என்றும் தெரியவில்லை. உதாரணத்துக்கு சில மாதங்களுக்கு முன்பு 50 டொலராக இருந்த ஸ்கோஷியா வங்கியின் பங்குகள் தற்சமயம் (கட்டுரை எழுதும் நேரத்தில்) 39 டொலர்ருக்கு விற்கப்படுகின்றது. மற்ற வங்கிப் பங்குகளின் நிலையும் இதேதான். சப்பிரைம் போன்ற எந்தப் பிரச்சினையிலும் ஸ்கோஷியா வங்கி சம்பந்தப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் விலைகள் விழுந்திருக்கின்றன. ஆடிக்காற்றில் அம்மி பறந்து கொண்டிருக்கின்றது. அவ்வளவு தான். வேறு ஒன்றுமில்லை.

நண்பர் ஒருவர் சொன்ன கதையை இங்கே குறிப்பிடுவது பொருத்தம் என்று நினைக்கிறேன். 1994 இல் மெக்சிக்கோ நாணயம் பிரச்சினைக்கு உள்ளான போது, அங்கு பெருமளவில் நிலை கொண்டிருந்த ஸ்கோஷிய வங்கியின் பங்குகளும் பாதிக்கப்பட்டனவாம். விலை 28 சதவீதம் வீழ்ச்சியடைந்தது. 50ஆயிரம் டொலருக்கு வாங்கிய பங்குகளின் மதிப்பு 36 ஆயிரம் டொலர் ஆயிற்று. 1996 ஜுலை வரை அந்த 28 சதவீத வீழ்ச்சி மீட்கப்படவில்லை. தொடர்ந்து, வாங்கிய விலைக்கும் கீழாகவே இருந்து வந்தது. அதே பங்குகள் இன்றைக்கு, பங்குச்சந்தை விலைகள் வீழ்ந்திருக்கும் இந்தச் சமயத்தில், மதிப்பு 2,37,500 டொலர். இத்துடன் ஆண்டுதோறும் டிவிடெண்ட் தொகையும் கிடைத்திருக்கும்.

ஒக்ரோபர் மூன்றாவது வாரத்தில் மட்டும் ஸ்கோஷியா வங்கியின் பங்குகள் பத்து சதவீதம் விழுந்திருக்கின்றது. சரித்திரம் திரும்புகின்றதோ என்று தோன்றுகின்றது.

தற்போதைய ஆய்வுகளின் முடிவின்படி கனடிய வங்கிகள் உலகத்தில் சிறந்த நிலையில் இயங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் ஏறுமுகம் எப்போது ஆரம்பமாகும் என்று யாராலும் கணிக்க முடியவில்லை.

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லாம். மலிவு விலையில் பொருள்கள் விற்கும் போது மக்கள் பொருளை வாங்க அஞ்சும் ஒரே இடம் பங்குச் சந்தைதான். தற்சமயம் பங்குச் சந்தையில் 'சேல்' போய்க் கொண்டிருகின்றது.

வாரன்ஃபஸ்பேற் (Warren Buffet) போன்றவர்கள் சந்தையில் பங்குகளை வாங்க இது நல்ல நேரம் என்று வாங்கிக் கொண்டிருக்கின்றார்கள். வாரன்ஃபாப்பேற் சில வாரங்களுக்கு முன்பு சொன்னது, 'எல்லோரும் பேராசைப்படும் போது பயத்துடன் செயல்படு. எல்லோரும் பயத்துடன் செயல்படும் போது பேராசையோடு (நீண்ட காலத்துக்கு என) செயல்படு'. தற்சமயம் சந்தையில் பயத்துடன் மக்கள் செயல்படுகிறார்கள். உங்கள் அணுகுமுறை என்ன? இக்கட்டுரை ஆசிரியரிடம் ஆலோசனை பெற ஸ்கோஷியா வங்கி தொலை பேசி எண் - 416.439.3040 Ext 2010.



# அழுகின்றது ஈழம்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உங்களுக்குள் நடக்கும் யுத்தத்தை நோக்கி எல்லோர் கவனத்தையும் திசைதிருப்பி விடாதீர்கள்" என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கெஞ்சுகிறான் அந்த ஈழத் தமிழன். மறவாமல் அவன் வைக்கும் முக்கிய கோரிக்கை ஒன்று உண்டு - "எங்களுக்காகக் குரல் கொடுக்கும்போது உணர்ச்சி மேலீட்டில் நீங்கள் உதிர்க்கிற வார்த்தைகளில் மிகுந்த கவனம் கொள்ளுங்கள். இந்திய அரசும் உதவிக்கு வராத நிலையில், எங்களைத் தொடர்ந்து நசுக்கி வரும் சிற-லங்கா அரசின் ஆவேசத்தை மேலும் தூண்டிவிடாதீர்கள்.

இராமேஸ்வரம் நிகழ்ச்சியில்கூட ராஜபக்ச பற்றி உங்களில் சிலர் உதிர்த்த வர்ணனை வார்த்தைகளைத் தவிர்த்திருக்க வேண்டும். ஏற்கெனவே இரத்தவெறி பிடித்தவர்களின் ஆத்திரத்தை அது இன்னும் விசிறிவிட்டால், எங்களை நசுக்கித் தள்ளும் வேகமல்லவா இன்னும் கூடிவிடும்" என்று கவலையோடு கதறுகிறான் ஈழத் தமிழன்.

அர்த்தமுள்ள கதறல்தான்... வீரியத்தை விடவும் கார-ியம்தானே முக்கியம்! என்று ஆனந்த விகடன் கூறுகின்றது.

ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பிறகு தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத ஈழ ஆதரவு கரைபுரண்டு ஓடுகின்றது. அது மட்டுமல்ல உலகம் முழுவதும் இன்று ஈழத்தமிழர் பிரச்சனையை கரிசனையோடு கைகட்டி நின்று பார்த்துக் கொண்டுள்ளது.

ஈழத் தமிழர் மீதான சிறிலங்கா அரசின் தாக்குதலை நிறுத்தக் கோரி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் சார்பில் தமிழகம் முழுவதும் ஒக்டோபர் வெள்ளிக்கிழமை, 31 முழு கதவடைப்பு நடை-பெற்றது. தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் தலைவர் வெள்ளையன் அழைப்பு விடுத்திருந்த இந்த கதவடைப்பு போராட்டம் பெருவெற்றி கண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்றைய இந்த போராட்டத்தினால் சென்னை உட்பட அனைத்து நகரங்களிலும் கடைகள் அடைக்கப்பட்டன. பலசரக்கு கடைகள், தேநீர் கடைகள், காய்கறி கடைகள், புடவைக் கடைகள் உட்பட பல்வேறு வர்த்தக நிறுவனங்கள் முழுமையாக அடைக்கப்பட்டன.

பெரம்பூர், வியாசர் பாடி, மயிலாப்பூர், அடையார், கோடம்பாக்கம், திருவொற்றியூர், திருவான்மியூர் உட்பட நகரின் பல பகுதிகளில் உள்ள பலசரக்கு கடைகள், காய்கறிகள் கடைகள் அடைக்கப்பட்டன. ஒரு சிலர் காலை வியாபாரத்தை முடித்த பின்னர் கடைகளை அடைத்து விட்டனர்.

சென்னையில் மிகப் பெரிய காய்கறிச் சந்தையான கோயம்பேட்டில் நள்ளிரவு 12:00 மணி முதல் காய்கறி, பழக்கடைகள் மூடப்பட்டன. கோயம்பேடு சந்தைக்கு வழக்கமாக சரக்குகள் ஏற்றி வரக்கூடிய சுமையூர்திகள் நிறுத்தப்பட்டன. வெளி மாநிலம், மாவட்டங்களில் இருந்து காய்கறிகள் அங்கு கொண்டு வரப்படவில்லை. இதனால் காய்கறி-பழ வியாபாரம் அடியோடு பாதிக்கப்பட்டது.

பல்வேறு இடங்களில் இருந்து காய்கறிகள் வாங்க பல்வேறு வாகனங்களில் கோயம்பேடுக்கு வழக்கமாக வரும் சுமார் 1,000 வாகனங்களும் வராததால் சந்தை வெறிச்சோடி காணப்பட்டது. காய்கறி மொத்த-சில்லறை வியாபார கடைகள் மூடப்பட்டதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.

காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் மாவட்டங்களிலும் கடைகள் அடைக்கப்பட்டன.

வணிகர் சங்கங்களின் தலைவர் வெள்ளையன் நகரில் உள்ள சில கடைகளை அடைக்க வற்புறுத்தியதாக வந்த முறைப்பாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டார். காவல் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு சிறிது நேரத்தில் விடுவிக்கப்பட்டார்.

விளம்பரம்
VLAMBARAM
விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# பராக் ஒபாமா? அல்லது ஜோன் மக்கெயன்?

## நவம்பர் 04, 2008 அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வெற்றி யாருக்கு?

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இல் அங்கு வாகன விபத்து ஒன்றில் பலியாகிருந்தார்.

பெற்றோரின் விவாகரத்தினை தொடர்ந்து இவரது தாயார், இந்தோனேசியாவினை சேர்ந்த ஒருவரை அமெரிக்காவில் திருமணம் செய்து, இவர்கள் இந்தோனேசியாவில் 1967இல் குடியேறி, அந்நாட்டின் தலைநகரான ஜகற்றாவில் (Jakarta) வாழ்ந்து வந்த காலத்தில் பராக் ஒபாமா அவர்களுடன் வாழ்ந்து வந்து தமது பத்து வயதுவரை தனது கல்வியை பயின்று வந்தார். பத்துவயதின் பின்னர் அமெரிக்கா திரும்பி வந்து தமது தாயாரின் பெற்றோருடன் இருந்து தமது கல்வியினை தொடர்ந்தார். இந்தோனேசாவிலும், அமெரிக்காவிலும் மாறி மாறி தனது தொழில் காரணமாக வசித்துவந்த இவரது தாய் 1995 இல் புற்று நோய் வாய்பட்டு மரணமடைந்தார்.

தமது இளம் பிராயத்தில் மதுபோதை, புகைத்தல் போதைவஸ்து ஆகியவற்றுக்கு சற்று அடிமையாக இருந்து பின்னர் தம்மை மாற்றி கொண்டதாக பராக் ஓபாமா தமது கடந்தகால வாழ்க்கை பற்றி குறிப்பிடுவதுண்டு.

**சிவ பஞ்சலிங்கம்**

நியூஜோர்க் நகரத்தில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் குறிப்பாக 'சர்வதேச அரசியல் விவகாரம்' என்னும் தலைப்பில் சிறப்பு பட்டம் 1983 பெற்று சில காலம் சர்வதேச வர்த்தக கூட்டுஸ்தாபனம் ஒன்றில் பணி புரிந்தார்.

நியூஜோர்க் நகரில் சிலகாலம் வாழ்ந்த பின்பு சிக்காக்கோ நகரம் இடம் பெயர்ந்து அங்குள்ள அபிவிருத்தியடைந்து வரும் சமூகத்தின் ஆய்வு மையம் ஒன்றில் இயக்குனராக பணி புரிந்து வந்தார்.

தொடர்ந்து 1988இல் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்விகற்று சட்டத்துறையில் பட்டம் பெற்றார்.

1992ஆம் ஆண்டில் இருந்து பல வருடங்கள் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை மாணவர்களுக்கு 'அரசியல் அமைப்பு சட்டங்கள்' என்னும் பாடபிரிவின் விரிவுரையாளராக பணி புரிந்தார். அதேநேரம் சிவில் துறை வக்கீலாகவும் பணிபுரிந்தார்.

தொடர்ந்து 1997 - 2004 ஆம் ஆண்டு காலத்தில் அமெரிக்காவின் இலினோஸ் மாநில ஜனநாயக கட்சியின் சார்பில் சட்ட சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 2000 ஆண்டில் அமெரிக்க கீழ் சபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர், 2004ஆம் ஆண்டு மாநில சட்டசபை உறுப்பினராக இருந்து கொண்டு அமெரிக்க மேல் சபை தேர்தலில் போட்டியிட்டு



வெற்றி பெற்று உறுப்பினர் ஆனார். இக்காலங்களில் சட்ட துறையில் பல்கலைக்கழக விரிவுரையாளராக இருந்து ஏராளமான புத்தகங்கள், ஆய்வு கட்டுரைகளை எழுதி, இப்புத்தக விற்பனை வருமானங்கள் உட்பட, தமது தொழில் வருமானமும் சேர்ந்து 4.2 மில்லியன் டொலர்களை தனது வருட வருமானமாக பெற்று வந்தார். தமது சட்ட நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்த 'மிசல் ராவின்சன்' என்னும் கறுப்பினப் பெண்ணை காதலித்து ஒக்ரோபர் 03, 1992இல் திருமணம் செய்துகொண்டார். பத்து வயது, ஏழு வயதில் உள்ள இரு பெண் குழந்தைகளுக்கு தந்தையாகவும் உள்ளார்.

### இவருடன் போட்டியிடும் ஜோன் மக்கெய்ன் யார்?

1936ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29ஆம் திகதி பனமாநாட்டில் பனாமா கால்வாய் பகுதியில் உள்ள நகரில் பிறந்து இவர் ஸ்கொட்லாந்து, ஐரிஸ், ஆங்கில கலப்பின சந்ததியினை சேர்ந்தவர். இவரது தந்தை, தந்தையின் தந்தை ஆகியோர் அமெரிக்க கடல்படையில் பணி புரிந்தவர்கள். அந்த காலம் பனாமா கால்வாய் அமெரிக்கா கடல் படையின் கட்டுப்பாட்டில் இருந்த காலம். தந்தை தொழில் காரணமாக போகும் இடங்களில் உள்ள பல பாடசாலைகளில் படித்தார். திறமையான குத்துசண்டை வீரரான ஜோன் மக்கெய்ன் அவர்களும் அமெரிக்க கடற்படையில் பணிபுரிந்து பல யுத்தங்களில் சாதனை படைத்தவர். கடற்படை விமான ஓட்டுனராக சமுத்திரங்களில் தரித்து நிற்கும் விமானம் தாங்கி கப்பல்களில் இருந்து, தமது விமானங்களை ஓட்டி சென்று அமெரிக்க வியட்னாம் உட்பட ஏனைய நாடுகளில் யுத்தங்களை நடாத்தும் போது குண்டுமழை பொழிந்து விட்டு, சமுத்திரத்தில் தங்கி நிற்கும் கப்பலில் தளம் இறக்கும் திறமை படைத்த முன்னாள் போர்வீரன்.

1967இல் வியட்னாம் தலைநகரத்தில் குண்டுமழை பொழியப் போய், இவரது விமானம் சுடப்பட்டநேரம் விமானம் வெடித்ததன் காரணமாக அவர் பரசூட்டின் மூலம் தரையிறங்கி கடல்நீர் ஏரியில் வந்து விழுந்தபோது வியட்னாமியர்களால் பாதுகாக்கப்பட்டார். இவர் 1973ஆம் ஆண்டு வரை போர் கைதியாக இருந்து அடி உதை என்று சித்திரவதைக்கு உள்ளாகி, இன்றும் அதன் தாக்கங்களை தமது உடலில் கொண்டவர் ஆவார். அதாவது இச்சித்திரவதையால் இன்றும் தமது கைகளை உயரமாக தூக்க முடியாத நிலையில் இருப்பவர் ஆவார். இருதடவைகள் திருமணம் செய்த இவர் பிள்ளைகளில்லாத நிலையில் தத்தெடுத்து பிள்ளைகளை வளர்த்தார்.

1981 இல் கடற்படையிலிருந்து விலகி அரசியலில் சேர்ந்து, அரிசோனா மாகாணத்தில் இருந்து மேல் சபை உறுப்பினராக சேர்ந்து எடுக்கப்பட்டார். இன்று ஜோர் புஷ் அங்கம் வகிக்கும் றிப்பப்ளிக்கன் கட்சியில் இருந்து ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார்.



இங்கு வெற்றி யாருக்கு? கறுப்பின மனிதனா?, வெள்ளை இன மனிதனா?

கறுப்பின மனிதன் பராக் ஓபாமா தெரிவு செய்யப்பட்டால், உலகமே ஆச்சரியப்படும் அளவில் அமெரிக்கர்களின் சிந்தனையில், செயலில் ஒரு மாற்றம் வந்த மாதிரியே காணப்படும்.

EXPERT
BUILDING INSPECTIONS LTD
"Dedicated to Expert, Honest & Independent Inspections"
Tel: 905 940 0811 Fax 905 940 6108
Toll Free 1 866 373 3315
- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging
www.expertinspector.com
- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week
ASHI MEMBER
CAHPI Ontario

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL



# குழந்தைகளைப் பாருங்கள் வாழ்வைப் புதிதாய் தொடங்குங்கள்



சத்குரு ஜக்கி வாசுதேவ்

***நீங்கள் நினைத்துப் பார்க்கவும் அஞ்சிய விஷயங்களை உங்கள் குழந்தைகள் செய்து காட்ட வேண்டும்.***

குழந்தை வளர்ப்பில் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் என்னவென்றால் பழுதுபட்ட உங்கள் உள்ளங்களின் பாதிப்பு அவர்களுக்கும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதுதான். இதுதான் சிறந்த முறையில் குழந்தை வளர்ப்பதன் முதல்படி. பழுதுபட்ட தீய மனங்களின் பாதிப்பிற்கு அவர்கள் பின்னாளில் ஆளாவதற்கு வாய்ப்புக்கள் அதிகம்தான். ஏனெனில் அத்தகைய மனிதர்கள் உலகமெங்கும் இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து உங்கள் குழந்தைகளைத் தனிமைப் படுத்திவிட முடியாது. அப்படியென்றால் நீங்கள் கேட்கக்கூடும், நான் என்ன செய்வது? என் குழந்தையின் கல்வி எப்படி இருக்க வேண்டும்? என் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும்? என்று. புத்திசாலித்தனமாகவும், விழிப்புணர்வோடும் வளரும் விதமாக உங்கள் குழந்தகளை ஊக்குவியுங்கள். ஒவ்வோர் உயிருக்கும் தன் வாழ்வை நல்ல முறையில் வாழ்வதற்குத் தேவையான புத்திசாலித்தனம் தரப்பட்டிருக்கிறது. ஓர் உயிர், எறும்பாகப் பிறந்தாலும் கூட, அதன் வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான புத்திசாலித்தனம் அதற்குத் தரப்பட்டிருக்கிறது. நீங்கள் செய்கிற விஷயங்களையெல்லாம் அந்த எறும்பு செய்யாமல் போகலாம். ஓர் எறும்பாக வாழ்வதற்குத் தேவையான புத்திசாலித்தனம் அதனிடம் இருக்கிறது. இது ஒவ்வோர் உயிருக்கும் பொருந்தும். உங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழ்வதற்கான புத்திசாலித்தனம் உங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

இப்போது என்ன சிக்கல் என்றால், உங்கள் வழியில், உங்கள் புத்திசாலித்தனத்திற்கேற்ப குழந்தை வாழ வேண்டுமென்று நினைக்கிறீர்களே தவிர, உங்கள் குழந்தையின் புத்திசாலித்தனத்திற்கேற்ப வாழ வேண்டுமென்று நினைக்கவில்லை. உங்கள் குழந்தைக்கு தச்சுவேலை செய்வதில் தலைசிறந்து வரவேண்டுமென்கிற கனவு இருக்கக்கூடும். ஆனால் உங்களுக்கோ உங்கள் பிள்ளை ஒரு மருத்துவராக வர வேண்டும் என்று ஆசை. உலகெங்கும் மருத்துவர்களுக்கான தேவையிருக்கிறது என்கிற விழிப்புணர்வின் காரணமாகவோ, அல்லது நோய் வாய்ப்பட்டவர்களுக்கு நிவாரணம் தர வேண்டும் என்கிற கருணையின் காரணமாகவோ உங்கள் குழந்தையை மருத்துவராக அர்ப்பணிக்க வேண்டுமென்று நீங்கள் நினைக்கவில்லை. இந்த சமூகக் கட்டமைப்பில் மருத்துவர், பொறியியலா-ளர் என்று ஒரு குழந்தையை உருவாக்குவதுதான் கௌரவம் என்கிற முட்டாள்தனமான எண்ணம் உங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறது. என் குழந்தை மருத்துவர் என்று உலகெங்கும் பீற்றிக் கொள்ள உங்களுக்கு ஆசை. உங்கள் குழந்தையின் மூலமாக வாழ்க்கையை வாழ விரும்புகிறீர்கள். இது குழந்தைகளை பெருமளவில் பாதிக்கும். குழந்தைகளைப் பாழாக்க இத்தகைய அணுகுமுறை வழிவகுக்கும்.


தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org


நீங்கள் செய்ததையே உங்கள் குழந்தை செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. நீங்கள் செய்வதற்கு கனவிலும் துணியாத விஷயங்களை-யெல்லாம் உங்கள் குழந்தை செய்ய வேண்டும். உங்களால் எண்ணிப் பார்க்கக் கூட துணிச்சல் இல்லாத விஷயத்தை உங்கள் குழந்தை செய்து காட்ட வேண்டும். அப்போதுதான் இந்த உலகம் வளரும். சொல்லிக் கொள்ளும் விதமாக ஏதேனும் நிகழும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தன் வாழ்க்கையை முழுமையாக வாழுகிற புத்திசாலித்தனம் இயல்பாகவே இருப்பதால், உங்கள் மனதில் இருக்கின்ற அழுத்தங்கள எல்லாம் குழந்தையின் மனதில் திணிக்காமல், தன்னுடைய புத்திசாலித்தனத்திற்கேற்ப முழுமையாய் வளருவதற்குரிய சூழலை மட்டும் குழந்தைகளுக்கு உருவாக்கிக் கொடுங்கள். குழந்தையின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியர்களுக்கு ஒரு பங்கிருக்கும்; நண்பர்களுக்கு ஒரு பங்கிருக்கும். சமூகத்தின் பிற அங்கங்களும் குழந்தையின் மேல் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இதை நீங்கள் தடுக்க முடியாது. உங்கள் குழந்தைக்கென்று ஒரு தனி சரணாலயத்தை நீங்கள் உருவாக்க முடியாது என்றாலும் கூட ஒரு பெற்றோர் என்ற முறையில் அந்தக் குழந்தையின் புத்திசாலித்தனம் மலர்வதற்கு ஒரு முக்கியப் பங்காற்ற முடியும்.

ஒரு குழந்தை பிறந்த உடனேயே, அதற்கு ஏதாவது சொல்லித்தர வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் அதுவே அந்தக் குழந்தையைப் பாழ்படுத்தும். ஒரு குழந்தை உங்கள் வாழ்க்கைக்குள் வருகிறதென்றால், அதனிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்வதற்கான நேரம் வந்திருக்கிறது என்று அர்த்தம். ஏனென்றால் உங்கள் உள்ளம் பல்வேறு வகைக-ளில் திசைமாற்றப்பட்டு வாழ்வின் உயிர்த்தன்மையை பெருமளவு இழந்திருக்கிறது. ஒரு குழந்தை இப்போதுதான் வாழ்க்கையைப் புதிதாகப் பார்க்கிறது. அந்த குழந்தையோடு சேர்ந்து நீங்களும் வாழ்க்கையைப் புதிதாகப் பாருங்கள். உங்கள் குழந்தைக்கு நீங்கள் தரக்கூடியதெல்லாம் அன்பும், உறுதுணையும் மட்டுமே. அப்படி இருந்தால் அதனுடைய புத்திசாலித்தனம் தானாக வளரும். அந்தப் புத்திசாலித்தனம் இயல்பாகவே மலர்வதற்குரிய அன்புமயமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுங்கள். அதுபோதும்.

குழந்தையை அன்பாக வளர்ப்பது என்றால் அந்தக் குழந்தை கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுப்பது என்று சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். புத்திசாலித்தனத்தோடு உங்கள் குழந்தையைப் பார்த்தால் அது கேட்பதையெல்லாம் வாங்கித் தருவது முட்டாள்தனம் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த முட்டாள்தனத்திற்கு நீங்கள் 'அன்பு'' என்று பெயர் கொடுத்திருக்கிறீர்கள். எந்தச் சூழல் இருந்தாலும் ஆனந்தமாக வளருவதற்குரிய மனநிலையோடு உங்கள் குழந்தையை உருவாக்க வேண்டுமே தவிர கேட்டதையெல்லாம் வாங்கித் தந்து கொண்டிருக்கக் கூடாது.

உங்கள் குழந்தையை நன்றாக வளர்க்க விரும்பினால், முதலில் நீங்கள் ஆனந்தமானவராக இருக்க வேண்டும். உங்களுக்கே ஆனந்தமாக வாழ்வது எப்படி என்று தெரியவில்ல. உங்கள் வீட்டில் பதட்டம், கோபம், அச்சம், பொறாமை, படபடப்பு போன்ற குணங்கள் ஆட்சி செய்கின்றன. இவற்றையே உங்கள் குழந்தையும் பார்க்க நேர்ந்தால் இதைத்தான் அந்தக் குழந்தை கற்றுக் கொள்ளும். ஒரு குழந்தையை நன்றாக வளர்க்க வேண்டுமென்று நீங்கள் முடிவு செய்தால், முதலில் உங்கள் வாழ்க்கை முறையை மாற்ற வேண்டும். உங்கள் வாழ்க்கையையே முன்னேற்ற முடியாத நிலையில் ஒரு குழந்தையை வளர்ப்பது என்ப எப்படி சாத்தியம்?

---

# பேரண்டக் கதை



பேரண்டக்கதையின் இரண்டாம் பகுதியின் முதல் நாயகன் போலந்து நாட்டின் மதகுருவாகிய நிக்கலஸ் கொப்பநிக்கஸ் என்பவராவர். இவர்தான் நவீன வானவியலின் கதவுகளைத் திறந்து வைத்தவர் என்றால், அது மிகையாகாது. வான் பரப்புப்பற்றிய, பேரண்டம் பற்றிய அக்காலக் கருத்தில் ஒரு சிறிய மாற்றத்தினை கொப்பநிக்கஸ் செய்துவிட, அதுவும் பயந்து பயந்து செய்துவிட, மெதுமெதுவாக வானவியல் வளரத்தொடங்கி இன்று நாமெல்லாம் ஆச்சரியப்படத்தக்க அளவில் பிரமாண்டமாகி நிற்கின்றது. அதுசரி, அது என்ன பயந்து பயந்து மாற்றம் செய்தார் எனக் கேட்கின்றீர்களா? அதற்கான விளக்கத்தினை நிக்கலஸ் கொப்பநிக்கஸ் என்ற தலைப்பில் எழுதுகின்றேன்.

நிக்கலஸ் கொப்பநிக்கஸ்

1473ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதியில் பிறந்தவர் கொப்பநிக்கலஸ். 1543ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதிவரை இப்பூவுலகில் வாழ்ந்தவர். இவர் வாழ்ந்த காலப்பகுதியின் பின்னணியைக் கொஞ்சம் பார்ப்போம். இவர் வாழ்ந்த பகுதியில் றோமன் கத்தோலிக்கத் திருச்சபையானது மிகவும் செல்வாக்குடனும், பலத்துடனும் இருந்தது. அரிஸ்ரோற்றலின் வழியேயான தொலமியின் பிரபஞ்ச வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டே சகலமும் அவதானிக்கப்பட்டு வந்தது. அதனைத்தான் கத்தோலிக்கத் திருச்சபையும் வலியுறுத்தி வந்தது. பெரும்பாலான கல்வித்திட்டங்கள் மதவாதிகளின் கண்காணிப்பிலேயே அமைக்கப் பட்டு கல்வியானது கற்பிக்கப்பட்டது. புதிய புதிய ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் என்பன இவர்களது அனுமதியின் பின்னரே தொடரப்பட்டன, வெளிவிடப்பட்டன.

திருச்சபையின் கருத்துகளுக்கு முரணான கண்டுபிடிப்புகள் மறுக்கப்பட்டன. ஆராய்ச்சிகள் கூட நிறுத்தப்பட்டன. எதிர்த்து யாராவது கூறினால், ஆராய்ச்சிகள் செய்தால், அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டு, விசாரணையின்பின் தண்டிக்கப்படுவர். மதக்கருத்துக்களை நிந்திக்கும் வகையிலோ அல்லது அதற்கு எதிரான முறையிலோ யாராவது கருத்துக் கூறினால் பொதுவாகவே அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது. அதுவும் மரத்தில் கட்டி உயிருடன் பொதுமக்களின் பார்வையில் எரிக்கப்படுவார்கள். இந்தப் பின்னணியில் உள்ள காலத்தில்தான் கொப்பநிக்கலஸ் வாழ்ந்தார். அதுவுமல்லாது கத்தோலிக்க திருச்சபையின் மதகுருவாகவும் கடைசிவரை இருந்திருக்கின்றார்.

## பிரபஞ்சம் - 27

பல்துறை விற்பன்னரான கொப்பநிக்கஸ் இளமையிலேயே தனது பெற்றோரை இழந்திருந்தார். மிகவும் வைராக்கியம் நிறைந்த, மிக மதப்பற்றுள்ள உறவினரான மதகுருவினால், அவரின் கண்காணிப்பில் வளர்ந்த கொப்பநிக்கஸ் இளமையிலேயே அறிவுமிக்கவராக, புத்திசாலியாகத் திகழ்ந்திருந்தார். கணிதம், மருத்துவம், வானவியல், பொருளாதாரம் போன்றவற்றில் பட்டம் பெற்ற கொப்பநிக்கஸ் இராணுவ உயர் அதிகாரியாகவும் கூடக் கடமையாற்றியிருக்கின்றார். வான் பொருட்களின் இயக்கங்களும், அவற்றின் நிலைகளும் இவை எல்லாவற்றிலும் இவரை மிகவும் ஈர்த்துக் கொண்டது.

அக்கால வழக்கின்படியே, கொப்பநிக்கஸ் உம் வைத்தியப் பட்டப்படிப்பின் போது சோதிடத்தை ஒரு பாடமாக எடுக்க வேண்டி வந்தது. அதன் காரணமாகவோ அல்லது சுய ஈடுபாட்டின் காரணமாகவோ வான்பொருட்களின் நிலைகளையும், அசைவுகளையும் அவதானிக்க வேண்டி வந்தது கொப்பநிக்கசுவிற்கு. அவர் ஒரு சோதிடராகப் பரிணமிக்கவில்லை. ஆனாலும் வான்பொருட்களின் நிலைகள், இயக்கங்கள் என்பன தொலமி எதிர்வு கூறியபடியோ அல்லது தொலமியின் பின்னராக வந்த அரேபியர்கள் கூறியபடியோ அல்லது அவர்களது அட்டவணைகளில் ஒன்றின்படியோ காணப்படவில்லை. இங்கு இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். தொலமியின் பின்னராகப் பலமுறைகள் வான்பொருட்களின் நிலைகளுக்கான அட்டவணைகள் பலரால் திருத்தியமைக்கப்பட்டிருந்தன.

இந்த வான்பொருட்களின் நிலைகளில் ஏற்பட்டுக்கொண்டுவரும் பிசகுக்கு என்ன காரணம் என்பது அறியப்படவேண்டும் என்ற


**தொடர்ச்சி 23ஆம் பக்கம்**

# புதிய குடிவரவாளர்களும் கனடிய தொழிற்சந்தையும்

**கடந்த இதழ்தொடர்ச்சி**

## கனடாவிற்கு குடிவந்தவர்களில் 37% (12 லட்சம்) பேர்கள் பட்டதாரிகள் & 900,00 பேர் டிப்ளோமாகாரர்கள்.

இந்த ஆராய்ச்சி இத்தொடரில் நான்காவதாக மேற்கொள்ளப்பட்டதாகும். குடிவரவாளர்களின் தொழிற்துறை நுழைவில் பெற்ற அனுபவங்களை நன்றாக அறிந்துகொள்ளும் முகமாக 2006 ஆண்டு தையில் 15 வயதிற்கு மேற்பட்ட தொழில் புரிபவர்களிடமிருந்து தகவல்களை சேகரித்தோம்.

கனடாவிற்கு எப்போ வந்தார்கள்? எந்நாட்டில் பிறந்தார்கள்? எங்கே கல்வியில் உயர் பட்டம் பெற்றார்கள்? என அறியவும், ஆராய்ச்சிக்கு தகுதியானவர்களை அடையாளம் காணவும் 5 கேள்விகள் கேட்கப்பட்டன. இம்முயற்சியில் Human Resources & Social Development Canada வும், Citizenship & Immigration Canada பங்காளர்கள்.

இத்தொடரின் முதலாவது அறிக்கை 2007ம் ஆண்டு செப்ரெம்பர் 10ந் திகதி வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை 2006ல் கனடிய தொழிற்சந்தையில் புதிய குடிவரவாளர்களின் நிலை பற்றிய மேலோட்டமாகும். இரண்டாவது அறிக்கை: குறிப்பிட்ட சில நாடுகளில் பிறந்து கனடா வந்த குடிவரவாளர்கள் கனடிய தொழிற்சந்தையில் எப்படி செயற்பட்டார்கள் என்பதாகும். 3ம் அறிக்கை 2007 ஐ அடிப்படையாக வைத்து குடிவரவாளர்களின் நிலை பற்றி மேம்படுத்த பட்ட அறிக்கையாகும். இறுதி அறிக்கை 2008 இலையுதிர் காலத்தில் வெளிவரும். இதில் தொழிற்துறை மற்றும் காரியாலய வேலை, வேதனம், பணிபுரிந்த சராசரி நேரங்கள், தொழிற்சங்கங்களில் அந்தஸ்து, முழு அரை நேரவேலை, வேதனம் அளிக்கப்படாத மேலதிக வேலைநேரம் பற்றிய ஆய்வுகளைக்கொண்டதாக அமையும்.

அண்மையில் குடிவந்து கனடிய பட்டம் பெற்றவர்களின் தொழில் பெறும் விகிதாசாரம் பரவாயில்லை 2002 க்கும் 2007 க்கும் இடையில் கனடா வந்த மைய வயதுடைய 28,000 பேர் உயர் பட்டம் பெற்றிருந்தும் அவர்கள் தொழில் பெற்ற விகி தாசாரம் 75.3% மாத்திரமே. இது இவர்களை ஒத்த கனடாவில் பிறந்து படித்து பட்டம் பெற்றவர்களின் தொழில் பெற்ற 90.7 விகிதாசாரத்துடன் ஒப்பிடும்போது குறைவானதே. வயதும் பாடசாலை செல்லும் காலமும் தொழில் பெறுதலில் செல்வாக்கை செலுத்துகின்றது. வயதும் பாடசாலையில் கல்விகற்கும் காலமும் தொழில் பெறுதலில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஆராய்ச்சிகள் காண்பிக்கின்றன. 2007ல் அதற்கு முந்தைய 5 வருடத்துனுள் வந்து கனடாவில் கற்று பட்டம் பெற்றவர்களின் சராசரி வயது அதே வருடம் கனடாவில் பட்டம் பெறுபவர்களிலும் பார்க்க 5 வயது குறைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். கனடா வந்து குறைந்த காலம் வசித்ததும், குறைந்த வயதும், அதன் காரணமாக போதிய கனடிய வேலை அனுபவம் அல்லது முழுமையான வேலை அனுபவம் இல்லாது இருக்கலாம் என கருதப்படுகிறது.

2007ல், அதற்கு முந்தைய ஐந்தில் ஆண்டுகளில் குடிவந்த பட்டதாரிகளுக்கும் கனடாவில் பிறந்து பல்கலைக்கழகத்தில் படித்தவர்களுக்கும், இடையில் கல்விச்சாலைகளுக்கு சென்ற காலங்களில் வித்தியாசம் காணப்படுகிறது. அநேகமாக ஐந்தில் ஒரு குடிவரவு பட்டதாரிகள், பட்டம் பெற்றிருந்தும் மீண்டும் 2007 ல் கனடாவின் கல்விச்சாலைகளுக்கு சென்றார்கள். ஆனால் இவர்களை ஒத்த கனடாவில் பிறந்த சகபாடிகள் 15 ல் ஒருவரே மீண்டும் கல்விக்கு சென்றார்கள்.

மீண்டும் கல்விக்கு செல்லும் கனடா வந்த குடிவரவு பட்டதாரிகளில் பலர் வேலைக்கு செல்வதுமில்லை, வேலை தேடுவதுமில்லை. அதே நேரத்தில் கனடிய பட்டதாரி மாணவர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள் அல்லது வேலை தேடினார்கள். பாலும் ஒரு காரணம். 2002- 2007 காலப்பகுதியில் குடிவந்த பட்டதாரிகளில் பாதிப்பேர் பெண்களாவர். இவர்கள் தொழிற்துறையில் பங்காளர்களாவது குறைவு. குறிப்பாக ஆசியாவில் படித்த அல்லது பிறந்த பெண்கள்.

குடிவரவு பட்டதாரிகள் நீண்டகாலம் தங்கியிருக்கும்போது தொழில் பெறும் விகிதாசார அதிகரிக்கின்றது. பத்து வருடத்தின் முன் குடிவந்த பட்டதாரிகளில் 60% பேர் கனடிய பல்கலைக்கழக பட்டம் பெற்றுள்ளார்கள். இவர்கள் தொழில் பெறும் விகிதாசாரம் 2007ல் கனடாவில் பிறந்த பட்டாதாரிகளுடன் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. இவர்களது வயதும் கனடிய சகபாடிகளின் வயதிற்கு நெருங்கியதாகவுள்ளது.நீண்டகாலம் தங்கியிருந்ததும் அதனால் கிடைக்கும் வேலை அனுபவமும், கூடிய வயதும் வேலை பெறுவதில் அதிக சந்தர்ப்பத்தை அளிக்கிறது. இருந்தும் வேலை பெறும் விகி தாசாரத்தில் சிறிது வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. உ.ம்: ஆசியாவில் பட்டம் பெற்று 1997 ற்கு முன் குடிவந்த 108,000 பேர் 2007ல் வேலை வாய்ப்பு பெற்றமை 7.1% கனடிய சகபாடிகளிலும் பார்க்க குறைவானதே.

கனடிய பட்டம் பெற்ற குடிவரவாளர்கள் ஒன்ராரியோவிலும் பிறிட்டிஷ் கொலம்பியாவிலும் அதிக வேலை வாய்ப்பையும் கியூப்பெக்கில் குறைவாகவும் பெற்றுக்கொள்கின்றார்கள்.

டிப்ளோமா தராதரமும் வேலைவாய்ப்பும் 2007 ல் 900,000 அல்லது 29% பேர் போஸ்ற்செகண்டரி சர்டிபிகற் அல்லது டிப்ளோமா தராதர பத்திரம் வைத்திருந்தார்கள். சில விதிவிலக்கை தவிர இத்தராதரமுடைய குடிவரவாளர்கள், எப்போ வந்திருந்தாலும், எங்கு கல்வி கற்றிருந்தாலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கனடாவில் பிறந்த சகபாடிகளிலும் பார்க்க மிகுந்தளவு குறைவாகவே இருந்தது. இதில் குறிப்பிடத்தக்க விதிவிலக்கு 1997ன் முன் டிப்ளோமாவுடன் குடிவந்து பின் கனடாவில் போஸ்ட்செகண்டறி டிப்ளோமா பெற்றுக் கொண்டவர்கள் கனடாவிற்கு டிப்ளோமாவுடன் குடிவந்தவர்களில் பாதி பங்கை பிரதிநிதிபடுத்தும் இப்பிரிவினரின் வேலைவாய்ப்பு விகிதாசாரம் கனடாவில் பிறந்த சகபாடிகளோடு ஒப்பிடக்கூடியதாக உள்ளது.

இது சம்பந்தமான முழு ஆராய்ச்சி அறிக்கையை வாசிக்க கீழ்க்காணும் இணையத்தளத்திற்கு செல்லவும்.

http://www.statcan.ca/Daily/English/080718/d080718b.htm

மேலதிக தொடர்புகட்கு: jey.dharmaraj@statcan.ca
(416) 954-5976

ஆதாரம்: Statistics Canada

# யோகா சக்தி ஓர் அற்புதம்

## பிராணாயாமம் (Breathing Technique)

நமது உடலுக்கு தேவையாகிய உயிர் சக்தியாகிய பிராணவாயுவை அளவின்றி அள்ளித் தந்து நமது உடலையும் மனதையும் ஒளிவீசிப் பிரகாசிக்கச் செய்யும் ஓர் அற்புதமான பயிற்சிதான் பிராணாயாமம் என்பது.

'பிராணான்' என்றால் உயிர்சத்து.
'யாமம்' என்றால் கட்டுதல் என்று பொருள். நமக்குத் தேவையான உயிர் சக்தியாகிய பிராணாவாயுவை நமக்குள் கட்டிவைத்துக் கொள்ளுதல் என்று பொருள் கொள்வோம். இது நமது சுவாச மண்டலம் சம்பந்தமான ஒரு பயிற்சி. எனவே நமது சுவாச மண்டலத்தைப் பற்றியும், அது இயங்கும் விதம் பற்றியும் சுருக்கமாக அறிந்து கொள்வோம்.

### மூச்சு மண்டலம்

நாம் சுவாசிக்கும் வெளிக்காற்று இரண்டு மூக்குத் துவாரத்தின் வழியாக உள்ளே சென்று நுரையீரலை (Lungs) அடைகிறது. நமது நுரையீரல் இரு பகுதிகளைக் கொண்டது.

1. இடது பகுதி - இதில் இரு அறைகள் உள்ளன. அதில் காற்று நுண் அறைகளும் அவைகளைச் சூழ்ந்து மிகவும் சிறிதான வலைப் பின்னல்களும் உள்ளன. காற்று அறைகளுக்கும், நுண்ணிய வலைப்பின்னல்களுக்கும் இடையே வாயுப் பரிமாற்றம் நடைபெறுகிறது.

2. வலது பகுதி - இதில் மூன்று அறைகள் உள்ளன. சுவாசம் இரண்டு வகைப்படும்.

1. உட்சுவாசம் 2. வெளிச்சுவாசம்

உட்சுவாசம் - நாம் மூச்சை உள்ளே இழுக்கும்போது வெளிக்காற்றில் உள்ள பிராணவாயு காற்றறைகளை நிரப்பி அங்கிருந்து அதன் சுவர்கள் வழியாக இரத்தத்தில் கலக்கிறது.

வெளிச்சுவாசம் - நுரையீரல் சுருங்கி உட்காற்றை வெளியே தள்ளுகிறது. இந்த நேரம் இரத்தத்தில் உள்ள அசுத்தங்கள் கார்பன் டை ஆக்சைடு மற்றும் நீராவி போன்றவை காற்றறைகளுக்குள் வந்து வெளியேற்றப்படுகிறது.

நாம் சுவாசிக்கும் போது பொதுவாக 16" காற்று உட்செல்ல முடியும். ஆனால் நுரையீரலின் அடிப்பாகத்திலுள்ள அசுத்தங்களால் சுமார் 12" (அங்குலம்) அளவே உட்செல்கிறது. அதில் சுமார் 8" அளவைத்தான் நுரையீரல் பயன்படுத்திக் கொள்கிறது. மிகுதி 4" பெரும்பாலும் வீணாகிறது.

பிராணாயாமம் பயிற்சியின் மூலம் நாம் 16" காற்றை நுரையீரலுக்குக் கொண்டு சென்று அதிக அளவில் ஒக்சிசன் எனப்படும் பிராணவாயுவை இரத்தத்திற்கு அளிக்க முடியும்.

### பிராணாயாமம் எப்படி பயிற்சி செய்வது.

நேரம் அதிகாலை 5 - 6 மணிவரை காலைக் கடன்களை முடித்து சிறிதளவு தண்ணீர் பருகி விட்டுப் பயிற்சியை ஆரம்பிக்கலாம்.

செய்முறை
1. கிழக்குத் திசை நோக்கி பத்மாசனத்திலோ வஜ்ராசனத்திலோ அமரவும்.
2. கண்களை மூடிக்கொண்டு மனக்கண்ணால் புருவ மத்தியை உற்றுப் பார்த்தபடி இருக்கவும்.
3. இப்போது வலது மோதிர விரலால் இடது நாசியை மூடவேண்டும். திறந்திருக்கும் வலது நாசி வழியாக மெதுவாக நிதானமாக ஆழமாக 'ஓம்' என்ற ஒலியை மனதில் சொல்லியபடி மூச்சை உள்ளே இழுக்க வேண்டும்.
4. உடனே வலது கட்டைவிரலால் வலது நாசியை மூடிக்கொண்டு மோதிர விரலை இடது நாசியில் இருந்து எடுத்துவிட்டு இடது நாசி வழியாக மெதுவாக மூச்சை வெளியே விடவேண்டும். மூச்சு உள்ளே இழுக்கும் வேகத்தைவிட வெளியே விடும் வேகம் மெதுவாக இருக்கவேண்டும்.
5. இடது நாசி வழியாக முழுவதுமாக மூச்சை வெளியே விட்டபின்பு உடனே அதே மூக்கின் வழியாக மறுபடி ஓம் என்ற ஒலியுடன் காற்றை உள்ளே இழுக்க வேண்டும்.
6. பின்பு அந்த இடது மூக்கினை மறுபடி மோதிர விரலால் மூடிக் கொண்டு வலது மூக்கிலுள்ள கட்டை விரலை எடுத்து விட்டு வலது நாசி வழியாக மிக மிக மெதுவாக மூச்சை வெளியே விடவேண்டும்.

இது ஒரு பிராணாயாமம்
இது போல் 10 முறை செய்யவும்.

பின்பு சற்று நேரம் ஓய்வு எடுத்து மூக்கை மூடாமல் இரண்டு நாசிகள் வழியாகவும் ஓம் என்ற ஒலியுடன் மெதுவாக ஆழமாக மூச்சை உள்ளே இழுத்துப் பின் மெதுவாக நிதானமாக மூச்சை வெளியே விடவேண்டும். இதையும் 10 முறை செய்யவும். இந்தப் பயிற்சியை நீங்கள் முடிக்கும் போது உடல் வெப்பமாகி ஓர் இனம் புரியாத சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் ஏற்படுவதை உணர்வீர்கள். இறுதியாக உதடுகளைக் குவித்து வாய் வழியாக முடிந்த அளவு காற்றை உள்ளே இழுத்து பின் வாயை மூடிக்கொண்டு மூக்கின் வழியாக மெதுவாக காற்றை வெளியேற்றுங்கள். இது இதயத்திற்கு வலுவூட்டுகிறது. இதையும் 10 முறை செய்யுங்கள். பின் கண்களை மூடிக்கொண்டு புருவ மத்தியை பார்த்தபடி சிறிது நேரம் அமைதியாக இருந்து எழுத்து பயிற்சியை முடித்துவிடுங்கள்.

என்றுமில்லா புத்துணர்ச்சியோடும் மகிழ்ச்சியோடும் சிறிதும் களைப்பின்றி பூரண நலத்துடன் அன்று முழுவதும் காணப்படுவதனை உணர்ந்து நீங்களே வியப்பில் ஆழ்ந்து விடுவீர்கள்.


**YOGA - MEDITATION CLASSLESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***
***Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687***



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
***416.289.2033 after 7:00pm***

# விளையாட்டுத் தகவல்கள் 248

# கங்காருக்கு மரண அடி

மொகாலி ரெஸ்ரில் இந்திய அணி இமாலய வெற்றி பெற்றது. ஜாகிரின் அனல் பறக்கும் பந்துவீச்சு கைகொடுக்க, அவுஸ்திரேலியாவை 320 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் ரெஸ்ற் அரங்கில் தனது மிகப் பெரும் வெற்றியை பதிவு செய்த இந்திய அணி, தொடரில் 1 - 0 என்ற முன்னிலை பெற்றுள்ளது. இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி நான்கு போட்டிகள் கொண்ட ரெஸ்ற் தொடரில் விளையாடி வருகிறது. பெங்களூரில் நடந்த முதல் ரெஸ்ற் 'சமநிலையில்' முடிந்தது. இரண்டாவது ரெஸ்ற் மொகாலியில் நடந்தது. முதல் இன்னிங்சில் இந்தியா 469, அவுஸ்திலியா 268 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் 3 விக்கெட் இழப்புக்கு 314 ஓட்டங்கள் குவித்து 'டிக்ளே' செய்த இந்திய அணி, அவுஸ்ரேலியாவுக்கு வெற்றி இலக்காக 516 ஓட்டங்களை நிர்ணயித்தது.

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணி, நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 141 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மைக்கேல் கிளார்க் (42), ஹாடின் (37) அவுட்டாகமல் இருந்தனர். நழுவிய 'ஹாட்ரிக்' கடைசி நாள் ஆட்டம் நடந்தது. ஜாகிர்,பந்துவீச்சில் அனல் பறந்தது. நான்கு பந்துகளில் மூன்று விக்கெட்டுகள் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணியை ஆட்டம் காண வைத்தார். முதல் ஓவரின் கடைசி பந்தில், ஹாடினை (37) கிளீன் போல்டாக்கினார். தொடர்ந்து மிரட்டிய ஜாகிர், தனது அடுத்த ஓவரின் இரண்டாவது பந்தில் ஒயிட்டை (1) வெளியேற்றினார். மூன்றாவது பந்தில் பிரட்லீயை டக் அவுட்டாக்கினார். இதையடுத்து 'ஹாட்ரிக்' வாய்ப்புகாத்திருந்தது. ஆனால் ஜான்சன் தடுத்து ஆட, வாய்ப்பு நழுவியது. 144 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டை இழந்து தத்தளித்தது அவுஸ்திரேலியா.

**கிளார்க் ஆறுதல்** - ஜான்சன், கிளார்க் ஜோடி பொறுப்புடன் ஆடியது. தனிநபராக போராடிய கிளார்க், ரெஸ்ற் அரங்கில் தனது 9வது அரைசதத்தை கடந்தார். மறுமுனையில் ஜான்சன் சிக்கிய பந்துகளை பவுண்டரிக்கு விரட்டினார். இந்த ஜோடி 9வது விக்கெட்க்கு 50 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஜான்சனை (26) அவுட்டாக்கினார் மிஸ்ரா, அவுஸ்திரேலியாவுக்கு ஆறுதல் அளித்து வந்த மைக்கேல் கிளார்க்கும் (69) மிஸ்ரா சுழலில் சிக்க, இந்திய வெற்றி உறுதியானது.

**அபார வெற்றி** - அனைத்து விக்கெட்டுக்களை யும் இழந்த அவுஸ்திரேலிய அணி, 195 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி 320 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் ஜாகிர், ஹர்பஜன் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட ரெஸ்ற் தொடரில் இந்தியா 1 - 0 என முன்னிலை பெற்றுள்ளது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரெஸ்ற் வரும் 29ஆம் திகதி டில்லியில் நடைபெற்றது.

**ஆட்ட நாயகன்** - வெற்றிக்கு சிறப்பான வியூகம் அமைத்த தோனி, இப்போட்டியின் மூலம் தன்னை சிறந்த ரெஸ்ற் அணித்தலைவனாகவும் வெளிப்படுத்தி உள்ளார். முதல் இன்னிங்சில் 92, இரண்டாவது இன்னிங்சில் 68 ஓட்டங்கள் குவித்த இவர், ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார். ரெஸ்ற் கிரிக்கெட்டில் முதல் முறையாக இப்பெருமை பெற்றுள்ளார் தோனி.

**தீபாவளி பரிசு - கவாஸ்கர்** - மொகாலியில் இந்திய அணி அதிக ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று சாதித்துள்ளது. ரொசில் தோற்றபோதே பாண்டிங்கிற்கு சிக்கல் ஆரம்பமானது. சேவக், காம்பிர் அருமையான துவக்கம் தந்து, அவுஸ்திரேலிய அணியை எப்போதும் தலைநிமிர விடாமல் பார்த்துக்கொண்டனர். மிடில் ஆர்டரில் வந்த சச்சினும், கங்குலியும் கலக்கினர். அமித் மிஸ்ரா அறிமுகபோட்டியில் அசத்தினார். ஜாகிரும், இஷாந்தும் துவக்க ஆட்டக்காரர்களை வெளியேற்றி, சுழல் வீரர்களின் பணியை எளிதாக்கினர். 5வது நாள் காலையில் ஜாகிர் வேகத்தில் மிரட்டினார். அமித் மிஸ்ரா வெற்றியை அணித்தலைவர் தோனிக்கு விரைவில் கொடுத்தார். தனது அணித்தலைவர் திறமையை மீண்டும் ஒருமுறை நிரூபித்தார் தோனி. இதன் மூலம் இந்திய ரசிகர்களுக்கு தீபாவளி பரிசு கொடுத்துள்ளார். கும்ளே காயம் குணமடைந்தால், டில்லி ரெஸ்ரில் யாரை தேர்வு செய்வது என்ற குழப்பம் தேர்வாளர்களுக்கு நிச்சயம் ஏற்படும்.

**7வது வீரர் -** இப்போட்டியின் 2 இன்னிங்சிலும் 7விக்கெட் வீழ்த்திய அறிமுக பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா. இந்த இலக்கை எட்டும் 7வது இந்திய வீரர் என்ற பெருமை பெற்றுள்ளார். இதற்கு முன் ஹிர்வானி (16விக்), திலீப் தோஷி (8), சிவ்லால் யாதவ் (7), முனாப் படேல் (7), அபித் அலி (7) மற்றும் வி.வி குமார் (7) ஆகியோர் அறிமுகமான முதல் ரெஸ்ற் போட்டியில் 7 மற்றும் அதற்கு மேல் விக்கெட் வீழ்த்தியுள்ளனர்.

**சபாஷ் அணித்தலைவர்** - மொகாலி ரெஸ்ரில் வெற்றியை எட்டியதன் மூலம், அணித்தலைவர் பொறுப்பேற்ற முதல் இரண்டு ரெஸ்ற் போட்டிகளிலும் சாதித்துக்காட்டியுள்ளார் தோனி. இதற்கு முன் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம், தென்ஆபிரிக்காவுக்கு எதிரான கான்பூர் ரெஸ்ரில், தோனி தலைமையிலான இந்திய அணி, 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

**அவுஸ்திரேலியா, மோசம்** - தோனி - அவுஸ்திரேலிய அணி இவ்வளவு மோசமாக விளையாடிதை பார்த்ததில்லை என இந்திய அணித்தலைவர் தோனி தெரிவித்தார். இவர் கூறுகையில், முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலிய அணி 13 ஓவரில் 2விக்கெட் இழப்புக்கு 22ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்த மோசமான ஆட்டம் பற்றி டிராவிட்டிடம் குறிப்பிட்டேன். அமித் மிஸ்ரா தன்மீதான நம்பிக்கையை பூர்த்தி செய்தார். கங்குலியின் ஆட்டம் என்னை பெரிதும் கவர்ந்தது. இப்போட்டியில் சொற்போர் எல்லை தாண்டியதா என்பதை போட்டி நடுவர் முடிவு செய்வார், என்றார்.

**17வது வெற்றி** - இரண்டாவது ரெஸ்ரில் வெற்றி பெற்றதன் மூலம், அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 17வது வெற்றியை பதிவு செய்துள்ளது இந்திய அணி. இதுவரை 74 ரெஸ்ற் போட்டிகளில் அவுஸ்திரேலியாவுடன் மோதியுள்ள இந்திய அணி, 17 வெற்றி, 34 தோல்வி, 22 சமநிலை பதிவு செய்துள்ளது. ஒருபோட்டி கைவிடப்பட்டது.

**பாண்டிங் பிரட்லீ மோதல்** - அவுஸ்திரேலிய அணியில் பிளவு ஏற்பட்டுள்ளது. தனக்கு உரிய வாய்ப்பு அளிக்கவில்லை என அணித்தலைவர் பாண்டிங் மீது பிரட் லீ புகார் கூறியுள்ளார். மொகாலி ரெஸ்ரில் பிரட்லீயின் வேகம் சுத்தமாக எடுபடவில்லை. இதையடுத்து இவரை பாண்டிங் புறக்கணித்தார். நான்காம் நாள் ஆட்டத்தில் வாட்சன், ஒயிட், ஜான்சன் போன்றவர்களுக்கு வாய்ப்பு அளித்தார். ஒருகட்டத்தில் மைக்கேல் ஹசியை கூட பந்துவீச அழைத்தார். இதனால் பிரதான பந்துவீச்சாளரான பிரட்லீ மிகுந்த ஆத்திரமடைந்துள்ளார். தனது எதிர்ப்பை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். இது குறித்து பாண்டிங் கூறுகையில், 'பிரட்லீயுடன் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. அவுஸ்திரேலிய அணி 5 ஓவர்கள் தாமதமாக பந்து வீசியது. இதனால் தான் நான்காம் நாள் ஆட்டத்தில் அவரை பந்து வீச அழைக்கவில்லை. இதனை மீடியா பெரிதுபடுத்தி விட்டன. வரும் போட்டிகளில் இந்திய அணிக்கு பதிலடி கொடுப்போம்' என்றார்.

**ஜாகிருக்கு 80 சதவீத அபராதம்**

மொகாலி ரெஸ்ற் போட்டியில் ஹைடனை அவமரியாதை செய்த விவகாரத்தில், இந்திய வீரர் ஜாகிர் கானுக்கு போட்டி சம்பளத்தில் இருந்து 80 சதவீதம் அபாரதமாக விதிக்கப்பட்டுள்ளது. இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய 2வது ரெஸ்ற் போட்டி மொகாலியில் நடந்தது. இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலிய துவக்க வீரர் ஹைடன், ஹர்பஜன் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யு முறையில் அவுட்டானார். அப்போது ஜாகிர் கான், ஹைடனுக்கு குறுக்கே சத்தமிட்டு ஓடினார். ஜாகிரின் செயலை ஹைடனும், நடுவரிடம் சுட்டிக் காட்டினார். இது குறித்து மேட்ச போட்டி நடுவர் கிறிஸ் பிராட் கூறுகையில், 'ஜாகிரின் செயலை ஏற்றுக்கொள்ள முடியாது. ஹைடனை அவமரியாதை செய்யும் நோக்கில் ஜாகிர் நடந்து கொண்டுள்ளார். இது ஐ.சி.சி விதிகளுக்கு புறம்பானது. இதனால் அவருக்கு போட்டி சம்பளத்தில் 80சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது' என்றார். அடுத்து 24மணி நேரத்திற்குள் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்ய ஜாகிருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**எல்லை மீறினர்** - மொகாலி ரெஸ்ரில் இந்திய அணி எல்லை மீறியது என்கிறார் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பாண்டிங். இது குறித்து பேட்டி அளித்த பாண்டிங் கூறுகையில், போட்டியின் போது லேசான மோதல்கள், சொற் போர் நிகழ்வதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இந்திய அணி எல்லை மீறிய செயல்களில் ஈடுபட்டது. அதனால் தான் நடுவர்கள் குறுக்கிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஹைடன் விடயத்தில் ஜாகிரின் செயல் இவ்வகையைச் சார்ந்தது, என்றார்.

**பொறுப்பற்ற கில்கிறிஸட்**

'என்னை பற்றி அவருக்கு தெரியாது. வாய்க்கு வந்தபடி பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். தன்னை விமர்சித்த கில்கிறிஸ்டுக்கு சச்சின் சரியான பதிலடி கொடுத்துள்ளார். அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் கில்கிறிஸ்ட் இவர் 'ட்ரூ கலர்ஸ்' என்ற பெயரில் தனது சுயசரிதையை எழுதியுள்ளார். இதில் சிட்னி ரெஸ்ற் போட்டியின் போது இந்தியாவின் 'மாஸ்டர் பேட்ஸ்மேன்' சச்சின் நேர்மையில்லாமல் நடந்து கொண்டதாக புகார் கூறியுள்ளார். இப்பிரச்சினை பெரிதாக, சச்சினிடம் போனில் மன்னிப்பு கேட்டார்.

**இந்த விவகாரம் பற்றி சச்சின் கூறியது**

கில்கிறிஸ்ட் குற்றச்சாட்டு மிகுந்த ஆச்சரியம் அளித்தது. போட்டி முடிந்ததும் எதிரணி வீரர்களுடன் கைகுலுக்க நான் வருவதில்லை என்ற அவரது புகார் பற்றி கனவில் கூட நினைத்து பார்க்க முடியாது. கிரிக்கெட்டை எப்போதும் நேசிப்பவன். என்னை பற்றி அவருக்கு அதிகமாக தெரியாத நிலையில், பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளார் என நினைக்கிறேன்.

**முதல் ஆள் -** சிட்னி ரெஸ்ரில் நாங்கள் தோல்வியடைந்து இருந்தோம். அப்படிப்பட்ட சிரமமான நேரத்திலும், போட்டி முடிந்ததும் முதல் ஆளாக நான்தான் அவுஸ்திரேலியவீரர்களுக்கு கைகொடுத்தேன் என்பதை அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் எப்போதும் விளையாட்டு உணர்வுடன் தான் நடந்து கொள்வோம். சவால்களை கண்டு அஞ்சமாட்டோம். ஹர்பஜன் சைமண்ட்ஸ் சர்ச்சையில் என்னைப் பற்றி தெரிவித்து இருப்பது, அவரது சொந்த கருத்து. என்னைப் பொறுத்தவரை ஹர்பஜன் விவகாரம் முடிந்து போன விடயம். இவ்வாறு சச்சின் கூறியுள்ளார்.

**பாண்டிங்கின் கனவு!**

ரெஸ்ற் தொடரில் மீதமுள்ள போட்டிகளில் சிறப்பாக செயல்படுவோம் என அவுஸ்திரேலிய அணித்தலைவர் பாண்டிங் நம்பிக்கை தெரிவித்து உள்ளார். காயம் குணமடைந்த ஸ்டூவர்ட் கிளார்க் டில்லி ரெஸ்ரில் பங்கேற்க இருக்கிறார்.

பார்டர் - கவாஸ்கர் தொடரில் பங்கேற்க அவுஸ்திரேலிய அணி, இந்தியா வந்துள்ளது. முதல் ரெஸ்ரில் சமநிலையில் முடிந்தது. மொகாலியில் நடந்த இரண்டாவது ரெஸ்ரில் இந்தியா வென்று தொடரில் 1 - 0 என முன்னிலையில் இருக்கிறது. டில்லியில் 3வது ரெஸ்ற் வரும் 29ஆம் திகதி தொடங்கியுள்ளது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய தூதரகத்தில் விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாண்டிங் கூறுகையில் 'இந்தியாவின் சூழ்நிலைக்கு ஏற்ப மாறி வருகிறோம். தொடரில் மீண்டு வருவதற்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டுள்ளோம். அடுத்த இரண்டு போட்டிகளிலும் சிறப்பாக செயல்படுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது, என்றார். பாண்டிங் மீதமுள்ள இரு ரெஸ்ற்களிலும் வெற்றி பெற வேண்டும் என அவுஸ்திரேலிய தூதரகத்தின் உயர் அதிகாரி ஜான் மெக்கர்த்தியும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

**டில்லியில் ஸ்டூவர்ட்** - இதனிடையே மொகாலி போட்டியில் முழங்கை காயம் காரணமாக அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் கிளார்க் பங்கேற்கவில்லை. தற்போது காயம் முழுமையாக குணமடைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதனால் இவர் டில்லி ரெஸ்ரில் பங்கேற்க இருக்கிறார். இது பாண்டிங்கிற்கு உற்சாகத்தை அளித்து இருக்கிறது.

**இந்திய பந்துவீச்சை விளாசுவேன்! ஹைடன் சபதம்**

முதல் இரண்டு ரெஸ்ற் போட்டிகளில் செய்த தவறை திருத்தி கொண்டேன். டில்லி ரெஸ்ரில் இந்திய பந்துவீச்சை அதிரடியாக எதிர்கொள்வேன், என்கிறார் ஹைடன்.

அவுஸ்திரேலியாவின் அதிரடி துவக்க வீரர் ஹைடன் வழக்கமாக இந்தியாவுடனான போட்டிகளில் சூப்பர் ஆட்டத்தை வெளிப்படுத்தும் இவர் இம்முறை அளித்து வருகிறார். முதல் இரண்டு ரெஸ்டுகளின் முடிவில் வெறும் 42 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இதில் இரண்டு முறை ஜாகிர் கான் வேகத்தில் முதல் ஓவரிலே பெவிலியன் திரும்பியுள்ளார். இந்நிலையில் விரைவில் பார்முக்கு திரும்புவேன். டில்லி ரெஸ்ரில் இந்திய பந்துவீச்சை ஒருகை பார்ப்பேன் என்கிறார்.

**இது குறித்து அவர் அளித்த பேட்டி** - காலில் காயம் ஏற்பட்ட காரணமாக முதல் ரெஸ்ரில் பங்கேற்க முடியுமா என்ற சந்தேகம் இருந்தது. குணமடைந்த போதிலும் முழு திறமையை வெளிப்படுத்த இயலவில்லை. எனது ஆட்ட நுணுக்கங்களை மாற்றி கொள்ளப்போவதில்லை. மொகாலி ரெஸ்ரில் இரண்டாவது இன்னிங்சில் அதிரடியாக விளையாடினேன். 20 பந்தில் 29 ஓட்டங்களை எடுத்து மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ஆக்ரோஷம் டில்லி ரெஸ்ரிலும் தொடரும். பெங்களூர் மற்றும் மொகாலியில் செய்த தவறுகளை திருத்தி கொண்டுள்ளேன்.



**எஸ். கணேஷ்**


Raphael Maharaja

Barrister, Solicitor & Notary Public

கனேடியத் தமிழ் வழக்கறிஞர்



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



Tel: 416-847-7077 Fax: 416-847-7088

# வீட்டுச்சந்தை: கனடா vs அமெரிக்கா

கனடிய வீட்டுப் பொருளாதாரம், அமெரிக்காவுடன் ஒப்பிடும்போது சீராகக் காணப்படுகின்றது. ஆனால் வீட்டின் விற்கும் விலையில் கடந்த சில மாதங்களில் இறக்கம் ஏற்பட்டது யாவரும் அறிந்ததே. இது ரொறொன்ரோவில் மட்டுமல்லாமல் கனடா முழுக்க பொருந்தும். இதற்கு, கனடிய அடிப்படைப்பொருளாதாரத்தின் நிலைப் பாட்டைக் காரணமாகக் கொள்ளலாம். அமெரிக்காவில் வீட்டுச்சந்தையில் நடைபெற்றுவரும் கவலைக்குரிய விடயங்கள், கனடாவில் இருப்பவர்களிற்கு பயத்தை ஏற்படுத்துவது நியாயமானது. இருந்தும், இந்த பயத்தினால் வீடு வாங்குபவர்கள், சிந்தித்து வாங்க எத்தனிக்கிறார்கள். இதனால் வீட்டுச்சந்தையில் விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கை குறைவடைவதைக் காணலாம். ஏற்கனவே வீடு வாங்கியவர்களின் வீடுகள் விற்பதற்காக, ஏற்கனவே சந்தைக்கு வந்திருந்தால் அல்லது வர இருந்தால் அவர்களிற்கு தமது வீடுகள் விற்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதனால் குறைந்த விலைக்கும் விற்க எத்தனிக்கலாம். பொதுவாக சராசரி வீட்டு விலையில் இறக்கத்தை காணக்கூடியதாகவும் இருக்கும். மேலும் கடந்த பத்து வருடத்திற்கு மேலாக விலை அதிகரித்து வந்துள்ளது. பொதுவாக ஐந்து - ஆறு வருடத்திற்கு ஒரு தடவை வீட்டு விலையில் இறக்கத்தை காணக்கூடியதாக இருக்கும். இந்த தடவை நிலைமை வித்தியாசமாக இருந்ததால், அதாவது பத்து வருடத்திற்கு மேலாக விலை அதிகரித்தும், விற்கப்படும் வீடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வந்ததால் விலை இறக்கம் தவிர்க்க முடியாததே? இருந்தும், Sub Prime மோட்கேஜ் பிரச்சினை இங்கு கனடாவில் இல்லாதபடியால், அமெரிக்காவில் ஏற்பட்ட பயங்கர விலை இறக்கத்தை எதிர்பார்க்க முடியாது என்பது எனது எண்ணம். மற்றும் கனடாவின் மக்களின் அதிகரிப்பினால் வீட்டுத் தேவை தொடர்ந்து அதிகரித்தே வரும் என்பதும் உண்மை. எனவே விலை குறைந்த வீடுகளிற்கு அல்லது முதல் தடவை வீடு வாங்குபவர்களிற்கு வீட்டுத்தேவை இருந்து கொண்டே இருக்கும். அண்மையில் வெளிவந்த பொருளாதார அறிக்கைகளின்படி, G7 நாடுகளில் (கனடா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஜப்பான்) போன்ற நாடுகளிலே கனடாவின் சனத்தொகை வளர்ச்சியே அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்கு புதிய குடிவரவாளர்களே முக்கிய காரணமாகும்.

கனடாவில் ஒரு கரையிலிருந்து மற்றைய கரை வரை (Coast to Coast) உள்ள எல்லாப்பகுதியிலும், தொழி புரிபவர்களின் எண்ணிக்கை (Employment Rate), பொருளாதார ஸ்திரநிலை, மோட்கேஜ் கொடுக்கும் நிலை என்பன சாதகமாகவே காணப்படுவ-தால் அமெரிக்காவில் ஏற்பட்ட நிலை ஏற்படாது எனக் கொள்ளமுடியும்.

பொதுவாக Winnipeg, Regina, Saskatoon, St-Johns போன்ற நகரங்களில் மக்கள் தொகை அதிகரிக்கும் வீதம் கூடுதலாகக் காணப்படு கின்றது. இந்த நகரங்களில் விலையின் இறக்கம் பெரிதாக எதிர்பார்க்க முடியாது. கனடாவில் அல்பேட்டாவில் தொழில் புரியாதவர்களின் (Unemployment rate) எண்ணிக்கை மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. இங்கு கல்கறி, எட்மென்ரன் போன்ற நகரங்களில் அண்மைக்காலங்களில் வீட்டு விலையில் இறக்கம் அடைந்து வருவதைக் காணலாம். இதற்கு கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட அதீத விலை அதிகரிப்பு காரணமாகக் கொள்ளலாம்.



அண்மைக் காலங்களில் கனடிய நிதி நிறுவனங்கள் மோட்கேஜ் கொடுப்பதில் மிகவும் இறுக்கமாக இருக்கிறார்கள். அத்துடன் ஏற்கனவே இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்த, Variable Mortgage இப்பொழுது வட்டி வீதத்தை அதிகரித்து இறுக்கமாக்கப்பட்டுள்ளது. புதிதாக Variable rate இல் மோட்கேஜ் எடுப்பவர்கள் முதன்மை வட்டி வீதம் Plus 1% என்ற நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு முதன்மை வட்டி வீதம் Minus 1% வரை பெறக்கூடியதாக இருந்தது.

ஒக்ரோபர் 29, 08 அன்று அமெரிக்க மத்திய வங்கி மேலும் ½% இனால் வட்டி வீதத்தைக் குறைத்து இப்பொழுது வட்டி வீதம் 1% ஆகக் காணப்படுகின்றது. கடந்த 50 வருடங்களில் இதுவே அமெரிக்காவில் குறைந்த வட்டி வீதம் ஆகும். அத்துடன் Appraisal பெறுவதில் மிகவும் கவனமாக ஆராயப்பட்டே வழங்கப்படுகிறது. அனேகமான சந்தர்ப்பங்களில் தகுந்த பெறுமதியை (Market Value) விட (வாங்கி விற்கப்படுகின்ற விலையை) விட குறைவாகவே கொடுக்கப்படுகின்றது. மோட்கேஜ் பெறுபவர்கள் சகலவழியிலும் கவனமாக ஆராயப்படுகிறார்கள். உதாரணமாக வருமானம், தொழில் செய்யும் காலம், ஆரம்ப முதலீடு.... போன்றனவற்றை கொள்ளலாம். கடந்த காலங்களில் இவ்வளவு கெடுபிடி இருந்திருக்கவில்லை. அத்துடன் Appraisal பெறுமதி உண்மையாக விற்கப்படும் விலையை விட குறைவாக கொடுக்கப்படுகின்றது. இந்நிலைமை வாங்குபவர்களிற்கு பயத்தையும் அதாவது சரியான விலையை விட கூடிய பெறுமதி கொடுத்து விட்டதான நினைப்பும் ஏற்படலாம் என்பது துர்அதிஷ்டம். இதற்கு உதாரணமாக அண்மையில் நடந்த சம்பம் ஒன்றைக் கூறலாம். ஒரு குறிப்பிட்ட கட்டிடத்தில் ஒரே மாதிரியான அலகுகள் (Condominium Units) குறிப்பிட்ட விலையில் விற்கப்படுகின்றது. இந்தக் கட்டிடம் விற்கப்பட்ட விலையிலும் பார்க்க, Appraisal நிறுவனத்தினால் தரப்பட்ட பெறுமதி $60,000 குறைவாக காணப்பட்டது. இதுதான் இன்றைய நிலைமை. நிதி நிறுவனங்கள் தங்களை பாதுகாப்பதற்காக தகுந்த முன்னேற்பாடுகள் எடுப்பதனை இந்த நிலைமை காட்டுகிறது. பொதுவாக ஊடகங்களில் இருப்பவர்கள் தகுந்த, சரியான தகவல்களை மக்களிற்கு வழங்க வேண்டும் அல்லது அதில் நிபுணத்துவம் பெற்ற பொருத்தமானவர்களின் ஆலோசனையிலிருந்து சரியான தகவல்களைப் பெற்று மக்களுக்கு வழங்குதல் வேண்டும். இதுவே சிறந்தது.

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 285**


ஸ்காபரோ, மிசிசாக இரு இடங்களில், 100இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**
145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

**GTA Square**
**Business Space for Sale / Lease**
*Suitable for Optician / Optometrist / Air Travels / Restaurant ( Dine - In / Take Out) Dentist & much more... Rent starts $1100. Sale Price starts $144,900 (Finch / Middlefield )*

**Condo. for sale**
- Neilson & Mclevin
- 2 bedroom
- corner unit
- One of largest
- 2 parking
- Asking $164,900

**Brand New Condo. for sale**
- Kennedy & Denison
- 2 bedroom
- about 1000 sqft
- Price $284,800

**Detached house for sale**
- Morningside & Sheppard
- 4 bedrooms Brick house
- 1 bedroom bsmt apt.+ Sep. ent.
- 4 washrooms
- Close to mall, U of T, TTC, HWY 401, etc.
- $314,900.00

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931
COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# பிள்ளையார்

## வேண்டற் பதிகம்

நல்லதை நினைக்க வேண்டும்
நல்லதைப் பேச வேண்டும்
நல்லதை எழுத வேண்டும்
நல்லதைச் செய்தல் வேண்டும்
நல்லவை நடப்ப தற்கு
நன்குகை கொடுத்தல் வேண்டும்
நல்லவர்க் குதவு மென்வி
நாயகா அருள்செய் வீரே.

அன்புடன் எழுதல் வேண்டும்
அன்புடன் தொழுதல் வேண்டும்
அன்புடன் பழக வேண்டும்
அன்புடன் உழைக்க வேண்டும்
அன்புடன் உதவ வேண்டும்
அன்பர்கள் கூட்டம் வேண்டும்
அன்பினை வளர்க்க எந்தன்
ஐங்கரா அருள்செய் வீரே.

அறஞ்செய விரும்ப வேண்டும்
அறஞ்செயத் துணிய வேண்டும்
அறஞ்செய உழைக்க வேண்டும்
அறப்பணிக் குதவ வேண்டும்
அறஞ்செயத் தூண்ட வேண்டும்
அறவழி நடக்க வேண்டும்
அறமுறை உலகை யாள
ஐங்கரா அருள்செய் வீரே.

வஞ்சமில் லாத எண்ணம்
வஞ்சமில் லாத பேச்சு
வஞ்சமில் லாத செய்கை
வஞ்சமில் லாத நட்பு
வஞ்சமில் லாத நெஞ்ச
வாழ்க்கையை வாழ வேண்டும்
குஞ்சரப் பிள்ளை உம்மைக்
கும்பிட்டு வேண்டு வேனே.

மனத்தினை அடக்க வேண்டும்
மாசுகள் துடைக்க வேண்டும்
நினைத்தவை கிடைக்க வேண்டும்
நேர்மையில் நடக்க வேண்டும்
சினத்தினைக் கடக்க வேண்டும்
சிறந்தவை படைக்க வேண்டும்
அனைத்தையும் அருள வேண்டும்
ஐங்கரப் பிள்ளை யாரே.

எப்பொருள் எவர்சொன் னாலும்
அப்பொருள் இயல்பை யாய்ந்து
மெய்ப்பொருள் அறிய வேண்டும்
விடாப்பிடி யாளர் நாட்டும்
பொய்ப்பொருள் விளைக்குந் தீமை
போக்கிடுந் துணிவும் வேண்டும்
ஒப்பரும் ஞான மேனி
ஓம்முகா அருள்செய் வீரே.



கவிஞர் வி. கந்தவனம்

# கவிஞர் சேரனின் 'கறுப்பு ஆடி' (*Black July*) நாடகம்

ஐப்பசி பதினொன்று 2008 சனிக்கிழமை அன்று Front / Parliament சந்திக்கு அண்மித்த 55 – Mill வீதியில் அமைந்துள்ள நாடக மன்றத் தொகுதி ஒன்றில் சேரன் குழுவினரின் மேற்படி நாடகம் ஆங்கில உரையாடலில் நிகழ்த்தப் பட்டது. ஆக்கம் சேரனுடையது. துசி ஞானப்பிரகாசமும் சேரனும் சேர்ந்து இயக்கியுள்ளனர். ஏறத்தாழ இருபத்திமூன்று கலைஞர் முயற்சியில் பங்கெடுத்துள்ளனர். பிற்பகல் ஒரு மணிக்கு, நான்கு மணிக்கு, ஆறு மணிக்கு என மூன்று காட்சிகள் நடைபெற்றன. நாடகம் ஒரு மணித்தியால நீட்சியைக் கொண்டது. கனடியத் தமிழ்க் காங்கிரசின் 'கறுப்பு ஆடி' ஆண்டாண்டு நினைவின் ஒரு பகுதியாக இந்நாடகம் அரங்கேறியுள்ளது.

இலங்கை, பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து 1948 இல் சுதந்திரம் பெற்றது. தற்போது 2008 ஆம் ஆண்டு நடைபெறுகிறது. இவற்றுக்கு இடையிலுள்ள 60 ஆண்டுகளில் சிங்கள தமிழ் உறவுகளுக்குள் ஏற்பட்ட விரிசல் இந்நாடகத்தில் காட்டப்பட்டது. உயர் உத்தியாக 1983 ஆடிமாத இனக்கலவரம், அது ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது, விளைவு என்ன? சாதகமா பாதகமா? அதைத்தொடர்ந்து இற்றைவரை நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழ் இன அழிப்பு, ஆகிய செய்திகளை பார்ப்போரின் நெஞ்சைத் தொடும்வகையில் நிகழ்த்திக் காட்டப்பட்டது. 'இரத்தம்' என்ற சொற்பதம் பல தடவை பாவிக்கப்பட்டது. சிறைச்சாலையினுள் தமிழரின் கண்ணைத் தோண்டி எடுப்பதன்மூலம் நேரிடையாகவும் இரத்தம் காட்டப்பட்டது.

நாடகத்தின் தொடக்கமும் கனடாவின் அகதி விசாரணை மன்றத்தில் தொடங்குகிறது. நிறைவும் அகதி விசாரணை மன்றுடன் முடிகிறது. நாடகம், கவிதை முதலிய ஆக்கங்களில் காட்டப்படுவது சொல்லப்படுவதற்கு அப்பாலும் சில செய்திகள் மௌனமாக நிற்கும். அவற்றைக் கண்டறிவது நுகர்வோரின் 'ஆழ அகலத்தைப்' பொறுத்தது.

இலங்கை மக்களில் ஒரு தொகையினருக்கு கனடா இரண்டாவது தாயகமாக மாறிவிட்டது. அதில் தமிழ் பேசும் மக்கள்தான் மிக அதிகமாகக் காணப்படுகின்றனர். இந்த நாடகத்தின் மூலம் பேராசிரியர் சேரன் இங்குள்ள ஈழத் தமிழர்களினதும் மேலும் வந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர்களினதும் 'இருப்பை' உறுதிப்படுத்துகிறார்.

அகதிவிசாரணை அது, இது, என்று இழுத்தடிப்பது, சிலரை நிராகரிப்பது, மேன்முறையீடு செய்யச் சொல்வது, இப்படியெல்லாம் காலத்தைக் கடத்தாமல், பலவித தடைகள் தாண்டிவந்து சேரும் தமிழ் அகதிகளை எதுவித இடர்பாடுமின்றி, கனடா உள்வாங்க வேண்டும் என்று கனடிய அகதிச்சபையின் ஊடாக, கனடா அரசை வேண்டி நிற்பதாக நாடகத்தின் 'அடிக்கரு' அமைந்துள்ளது.

உண்மையிலேயே ஈழத்தில் தமிழ் மக்களுக்கு உயிர் உத்தரவாதம் இல்லை என்பதை ஆங்கில மொழி புரியும் பிற இனத்தவருக்கும் நம்மவருக்கும் நிகழ்த்திக் காண்பித்தமை பாராட்டுக்குரியது. நாடகம் என்பதுவும் ஒரு ஊடகம்தானே. இந்நாடகம் பல்லாயிரம் ஆங்கிலப் பார்வையாளர்களைத் தொலைக்காட்சியின் மூலம் சென்றடைய வழிசெய்வது சாலச்சிறந்தது என எண்ணத் தோன்றுகிறது.

இறுதியாக, இக்கலைஞர்களின் மதிப்புமிக்க கடும் உழைப்புக்கு உரிய ஊதியம் கிடைத்துள்ளதா? என்னும் வினாவும் எழுகிறது...



க. முத்துராஜா

# கற்பக நிழல் பரப்பிய தமிழ்வேள்



தமிழ் வேளென் றெல்லோரும்
தகவே மதிப்போ டழைத்துவந்த
கமழும் புகழார் சான்றோர்நம்
கந்த சுவாமி மறைந்தனரோ?
தமிழ்தன் மகனை இழந்திடினும்
தமிழர் புலம்பிக் கதறிடினும்
அமரர் மகிழ்ந்து வரவேற்பார்
அமுதம் வானுக் கிவரென்றே!

சின்னத் தம்பிப் புலவர்தனைச்
செந்தமி ழுக்குத் தந்தபதி
மன்னும் புகழார் இணுவிலிலே
வந்து பிறந்த தவச்செல்வர்
தன்னே ரில்லா ஆசிரியர்
தன்மா னத்தால் முன்னின்று
கன்னல் தமிழின் தொல்மரபைக்
கட்டிக் காத்த மூதறிஞர்!
கொழும்புத் தமிழ்ச்சங் கப்பணிகள்
குறைவில் லாது தொடர்ந்திடவே
தொழும்பாய்த் தொண்டு புரிந்துதமிழ்
துலங்கச் செய்த பெருமகனார்
கொழுகொம் பாகப் பலர்தங்கிக்
கொழும்பில் வாழவும் உதவியவர்
பழம்பண் பாட்டின் தனிச்சிறப்பைப்
பாருக் குணர்த்த இனியதரோ?

நாமகள் கலங்க நாவலர்கள்
நாக்களும் இரங்கத் தமிழ்வழங்கும்
பூமகள் தானும் பொலிவிழக்கப்
புத்தெழில் காட்டித் தேன்சொரிந்த
தாமரை ஒன்று வாடியதோ
தண்ணா றொன்று வற்றியதோ
காமுறு கொழும்புத் தமிழர்களின்
கற்பக நிழலும் சாய்ந்ததுவோ?

- வி. கந்தவனம்

தமிழவேள் திரு. க.இ.க. கந்தசுவாமி அவர்கள் தமிழீழம் இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் மூலம் தமிழ் வளர்ச்சியில் நீண்ட காலம் ஈடுபட்டவர். தமிழ் மரபைப் பேணுவதில் அதிக அக்கறை கொண்டவர். ஈழத்துத் தமிழ்ப் புலவர் மகாநாடு நடத்தியவர். இணுவை சின்னத்தம்பிப் புலவர் பாடிய பஞ்சவன்னத் தூது என்ற அரிய நூலுக்கு விளக்கவுரை எழுதி அதன் மகிமையைத் தமிழுலகம் அறியச் செய்தவர். அந்த நூலுக்கு இணுவில் திருவூர் ஒன்றியம் கனடாவில் கடந்த ஆண்டு அறிமுக விழா நடத்தியமையும் குறிப்பிடத் தக்கது.







# வாழ்க்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elagupplai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225 Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**9 th / 16th**



**$309,900**
Never lived in Brand New Freehold 3Br 3 Bath,Cornell Community,Excellent Mattamy Open Concept Design, Huge Master With Ensuite & W/I Closet.

**Mccowan / Steeles**



**$399,000**
Excellent Opportunity to Own Absolutely Gorgeous & Upgraded Executive Home. Newer Windows, hardwood flooring and Oak Stairs. Outstanding New Roof and CAC

**Greenhalf/Pickering Beach**



**$284,900**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3, Within Walking Distance To Parks,Schools

**Bovaird & Creditview**



**$304,900**
Detached 2 story, Bed rooms 3, Washrooms 3, Brand New Hardwood Flooring Throughout The Living Room / Dining Room

**Brimley/ Denison**



**$316,800**
Link 2 Story, , Bedrooms 3, Washrooms 2 , Lots Of Upgrades; Excellent Condition;Remodeled Kitchen W/Extra Cupboards

**Mccowan / Denison**



**$329,000**
Link 2 Story, Bedrooms 3+1 Wasroom 3, New Paint, New Shingles, New Windows, Too Many Upgrades To List., Walk To Good Schools

**9th/ 16th**



**$339,900**
Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3,Beautiful 5 Yrs New Detached Home Hardwood Floor,Direct Access From House To Garage

**Markham & Denison**



**$348,000**
Link 2 Story, Bed rooms 3 Washrooms 3, Close To Schools, Churches, Shopping, Public Transportation And Hwy 407

**Staines/Steeles**



**$349,000**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms2 Well Appointed All Brick 3 Bedroom House, Clean, Sun Detached Home

**Finch & MorningsideRd**



**$349,900**
Detached 2 Story, Bed rooms 3, Washrooms 3 Immaculate Detached Brick Home With Many Upgrades Hardwood Flooring

**Dennison/Middlefield**



**$369,900**
Link 2 Story, Bedrooms 4+1 Washrooms 4, 2000 Sq Ft Plus Prof Fin Bsmt, Some Newer Windows, French Doors & Parquet Flooring.

**Markham & Steeles-**



**$389,000**
Detached 2 Storys, Bed rooms 3+1, Washrooms 3, 4 Yrs Old Home, Upgraded Throughout House. Gorgeous Eat-In Kitchen

**Markham / Denison**



**$389,800**
Detached 2 Story, Bedrooms 3+1, Washrooms 4, Fully Upgraded Home, Upgraded Bathrooms,Large Profesion-

**Mccowan/14th**



**$389,900**
Link 2 Story, Bedrooms 3 Washrooms 3, Newly Renovated Kitchen, New Windows Throughout The Home,Basement Has Separate Enter-

**Kennedy / Denison**



**$399,900**
Link 2 Story, Bedrooms 4+2 Washrooms 5 Close To Denison Plaza,Pacific Mall, Library,High School Finished 2 Br Basement

**Steeles / Staines**



**$399,000**
Detached 2 Story, Bedrooms 4, Washrooms 3, Thousands Of $$ Upgrades Breakfast Area Great Room And Dining Room Hardwood Floors

**Mccowan/14th Ave**



**$429,900**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 4, Professionally Finished Basement, Dir Access From Gar To The House,

**9th Line/14th Ave**



**$508,000**
Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Fully Loaded 2Yrs New Home-Beautiful Kitchen W/Granite Counter Tops

**9th Line/14 Avenue**



**$1,380,000**
Detached 2 Story, Bed rooms 5+1 Wasrooms 7 Beautiful 6 Yrs Old Custom Built Home, Large W/O Entertainment Room

**Markham/Lawrence**



**$269,990**
Detached Bungalow, Bed rooms 3+2, Washrooms 3, New Kitchens, New Closets, New Basement, New Washroom,

**Sale Of Business**



**$259,000 for sale**
Sale Of Business Without Property Gas Stations Self-Serve Petro Canada Gas Station With Convenience Store

**Vacant Land**



**$189,900**
100 Acres - 65 Acres Workable/Clear Land-35 Acres 30 Minute Drive From The Bruce Nuclear Plant

**Sale Of Business**



**$1,650,000**
New Look Petro Canada Gas Station With Country Style Donuts And Residential Apartment Located In Heart Of Hamilton

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
Independently Owned and Operated
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# வாகன விபத்தில் தங்கள் தப்பு இல்லாத நிலையில் வாகனத்தின் பாதிப்புக்கு நட்டஈடு கோரல்

*(No fault accident claim)*

## காப்புறுதி தகவல் தொடர்

**வாகன விபத்தில் தப்பு என்பது தங்கள் பக்கம் இல்லையேல்....தங்களின் வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு**
**1. காப்புறுதியில் எந்த பிரிவில் இருந்து நட்டஈடு வழங்கப்படும்?**
**2. எவ்வளவு தொகை வரை நட்டஈடு வழங்கப்படும்?**
**3. இப்பிரிவில் இருந்து நட்டஈடு கோரும் போது, பின்னர் மாத கட்டுப்பணம் அதிகரிக்கும் சந்தர்ப்பம் உள்ளதா?**

ஒன்ராரியோ வாகன காப்புறுதி சட்டத்தின் 263ஆம் பிரிவில் (Ontario Automobile Insurance Act Sect 263) விபத்தில் தங்கள் பக்கம் தப்பு என்பது எந்த விகிதத்தில் இல்லையோ (No Fault) அந்த விகிதத்தில், வாகனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்டஈட்டினை தங்களின் வாகன காப்புறுதி கம்பனியே நேரடியாக இப்பிரிவின்கீழ் வழங்குகின்றது. இந்நிலையில் தங்களின் வாகனங்களிற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தங்களின் வாகன காப்புறுதி கம்பனியிலிருந்து நேரடியாகவே நட்டஈட்டினை பெற்று கொள்ளலாம்.

இதனை 'செலவில்லாத காப்புறுதி நட்டஈடு' (No Cost Coverage) என குறிப்பிடப்படுவதுண்டு. ஏனெனில் தங்கள் பக்கம் விபத்தில் தப்பு இல்லாது, தங்களின் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நட்டஈடு கோரும்போது, இதன் காரணமாக எந்த கட்டத்திலும், தங்களின் வாகன காப்புறுதி கட்டணம் அதிகரிக்கமாட்டாது.

**வாகன காப்புறுதியில் ஒப்பந்த பிரிவுகள்**
**அடிப்படைப்பிரிவுகள்**
1. மூன்றாம் நபர் பொறுப்பு காப்புறுதி (Third Part Liability Coverage)
2. உடல் காயங்களுக்கான நட்டஈட்டு பிரிவு (Accident Benefits)
3. தப்பு எதுவும் இல்லாத நிலையில் வாகனத்தின் பாதிப்புக்கு வழங்கும் நட்டஈட்டு பிரிவு (Direct Property Compensation - no fault Coverage)
4. காப்புறுதியில்லாத வாகனத்துடன் ஏற்பட்ட விபத்தில் நட்டஈடு (Uninsured & Unidentified Coverage)

**மேலதிக பிரிவுகள்**
a. Collision Coverage (தங்கள் தப்பினால் தங்களின் வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு.)
b. Comprehensive Coverage (விபத்துகள் இல்லாது வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நட்டஈடு.

ஆனால் தொடர்ந்து தங்களின் வாகனக்காப்புறுதி பதிவுகளில் மட்டும் 'தப்பில்லாத நட்டஈடு கோரல்' (Claim - no fault) என இருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்டது போல காப்புறுதி ஒப்பந்த பிரிவில், அதாவது தங்களின் காப்புறுதி ஒப்பந்தச்சான்றிதழில் இப்பிரிவு பற்றி தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கும். ஆனால் இங்கு ஒரு விபத்து நடக்கும் போது இவ்விபத்துகளில் சரி? பிழை? என்பது எப்படி தீர்மானிக்கப்படுகின்றது என்பதனையும் காப்புறுதி சட்டங்களே (Accident Fault Determination Rules & Regulation) தீர்மானிக்கின்றது.

தினமும் நடக்கும் விபத்துகளில் சுமார் நாற்பது வகையான விபத்துகளை வாகனங்களின் படங்களை வைத்து வரைபடமாக உருவாக்கி எந்தெந்த மாதிரி விபத்துகள் நடந்தால், எப்படி சரி, பிழை என்பது முடிவு செய்யப்படுகின்றது என்பதனை தெட்ட தெளிவாக விளக்குகின்றது.

சிலநேரங்களில் விபத்தில் இருபக்கமும் 50%க்கு 50% தப்பு எனவோ அல்லது 75%க்கு 25%வீதம் தப்பு எனச் சட்டத்தின் அடிப்படையில் முடிவு பண்ணும்போது நட்ட ஈடு வழங்கலும் அதே அடிப்படையில் தப்பு இல்லா விகிதத்தில் வழங்கப்படும். இங்கு நட்டஈடு வழங்கலை தீர்மானிக்கும் போது பின்வரும் விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

1. விபத்தில் இரு பக்கமும் வழங்கும் முறைப்பாடுகள்
2. புலன் விசாரணைகள் செய்யும் அதிகாரிகளின் முடிவுகள்
3. வாகனத்தில் சேர்ந்து பிரயாணம் செய்யாது உள்ள வெளியாரின் சாட்சிகள்

ஆகியவற்றினை வைத்தே காப்புறுதி கம்பனிகள் விபத்தில் சரிபிழையினையும் இப்பிரிவின் கீழ் நட்டஈடு வழங்கலையும் முடிவு செய்கின்றது.

உதாரணமாக சில சம்பவங்களை இங்கு குறிப்பிடலாம்.

உதாரணம் (1)
விபத்து ஒன்றில் தங்கள் பக்கம் தப்பு எதுவும் இல்லை. தங்கள் வாகனத்திற்குரிய பாதிப்பு என்பது $12,000 டொலர் என மதிப்பிடப்பட்டது. இதில் தங்களின் கொடுப்பனவு (Deductible) $300 என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

தங்களின் வாகன காப்புறுதி கம்பனி தங்களின் இப் பிரிவில் இருந்து $300 டொலரினை கழித்து கொண்டு $11,700 டொலர் வழங்குவார்கள்.

தொடர்ந்து தங்களின் வாகன காப்புறுதி கட்டணமும் உயரமாட்டாது.

உதாரணம் (2) - விபத்து ஒன்றில் தப்பு என்பது 50%க்கு 50% வீதம் என முடிவு செய்யப்பட்டது. வாகனத்தின் பாதிப்புக்குரிய திருத்த செலவு $12,000 டொலர்.

இதில் தங்களின் தப்பு இல்லாத விகிதத்தின்படி $6000 டொலர் வரையே இப்பிரிவில் இருந்து வழங்குவார்கள். அதிலும் தங்கள் கொடுப்பனவு (Deducible) என ஏதாவது தொகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்தால் அதிலும் 50% கழித்து கொண்டே வழங்குவார்கள். மிகுதி பணம் தங்கள் சொந்த பணத்திலேயே கொடுத்து திருத்த வேண்டிவரும். அல்லது மேலதிக நட்டஈட்டு பிரிவு (Collision Coverage) இருந்தால் அதிலிருந்து நட்டஈடு பெறலாம். இப்பிரிவில் இருந்து நட்டஈடு பெறும் போது பின்னர் மாத கட்டுப்பணம் அதிகரிக்கும்.

பொதுவாக காப்புறுதி கம்பனிகள் காப்புறுதி ஒப்பந்தத்தின் பிரிவுகளில் உள்ள சட்ட விதிகளின் கீழ் நட்ட ஈடுகளை தத்தமது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி விட்டு, பின்னர் சரி, பிழை எந்தப்பக்கம் என்ற அடிப்படையில் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வார்கள். எனவே தான் இப்பிரிவில் நட்டஈடு பெறுதல் என்பது விபத்து ஒன்று ஒன்ராரியோ மாகாணத்தினுள் அனுமதிப்பத்திரம் எடுத்து இயங்கும் காப்புறுதி கம்பனிகளில் ஒப்பந்தம் வைத்திருக்கும் வாகனங்களுக்கிடையே நடைபெறும் போதே இப்பிரிவில் இருந்து செலவில்லாத இந்நட்டஈடு பெறுதல் என்பது சாத்தியப்படும். ஒன்ராரியோ மாகாணத்திற்கு வெளியே கனடாவின் ஏனைய மாகாணத்தில் அல்லது அமெரிக்காவில் உள்ள ஒரு மாகாணத்தில் உள்ள காப்புறுதி கம்பனியில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு வாகனத்துடன் மோதல் ஏற்பட்டால் அந்த மாகாணமும், ஒன்ராரியோ மாகாணமும் இவ் ஒப்பந்தத்தில் நட்டஈடுகளை பரிமாறும் உடன்படிக்கை கைச்சாத்திட்டால் மட்டும் சாத்தியப்படும்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


(அனேகமாக கனடா, அமெரிக்கா மாகாணங்களுக்கிடையே உள்ள காப்புறுதி கம்பனிகளின் சார்பில் மாகாண நிதி அமைச்சுகளினால் இத்தகைய ஒப்பந்தங்கள் இருப்பது வழமையாகும்)

இவ்வாறு உடன்படிக்கை இல்லாத கம்பனியாக தப்புக்கு உரியவரின் வாகன காப்புறுதி கம்பனி இருந்தால் பாதிக்கப்பட்டவர் அவரது கம்பனிக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்கு தாக்குதல் செய்யலாம். இதேபோல தமது கம்பனியின் நட்டஈடு வழங்கல், சரி பிழையின் தீர்ப்பு என்பது திருப்தியாக இல்லையாயினும் தமது கம்பனிக்கு எதிராகவும் வழக்கு தாக்குதல் செய்யலாம். விபத்தினை உருவாக்கி தமது அடையாளத்தினை காட்டாது தப்பி ஓடிவிட்டால் இச் செலவில்லாத நட்டப்பிரிவில் இருந்து எதுவிதமான நிவாரணமும் பெறமுடியாது.

(எனவேதான் வாகனம் செலுத்துபவருக்கு எப்போதும் ஒரு பேனாவும் வீதிகளில் விபத்துகளை தருபவர்களின் இலக்கத்தினை துரித கதியில் இரகசியமாக குறித்து கொள்ள ஒரு கடதாசியும் எந்த நேரமும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும் என அறிவுரை வழங்குவது வழமையாகும்)

இந்த நிலையில் விபத்தினை உருவாக்கியோர் அடையாளம் தெரியாது தப்பியோடிவிட்டால் பாதிக்கப்பட்டவர் வேறு பிரிவில் இருந்தே நட்டஈடு பெறுதல் வேண்டும். வேறு பிரிவில் இருந்து நட்டஈடு பெறும் போது அது பின்னர் மாத கட்டுபணத்தினை அதிகரிப்பது தவிர்க்க முடியாததாக போய்விடும்.




# கடன்... பணம்

**கடன் பிரச்சினையில் மூழ்கித் தவிக்கிறீர்களா?**
**நிதிப் பிரச்சினைக்கு தீர்வு காண நாடுங்கள்**

- Bankruptcy - செய்து கொடுத்தலும் இலவச ஆலோசனையும்
- Debt Consolidation
- Line Of Credit
- Personal Loan
- Business Loan
- Indian Visa Arrangement
- Students Loan Amount Reduced
- Credit Rehabilitation [ Answer within 24 hours ]
- Mortgage Problems & Refinancing
- Any Immigration Problems with Free Advice
- Are you under Deportation? Call Us
- Are You New To Canada - Call Us
- Have You Problem With Your Car Loan Payment
- Have You Been Laid Off Unfairly?
- Any Kind Of Legal Services
- Mortgage - கட்டமுடியாமல் உங்கள் வீட்டை Bank எடுக்கின்ற நிலைமையா?
- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா? காயமடைந்து விட்டீர்களா? உங்களுக்கு பெரிய நிதியை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்று தருவோம்.
- உங்களின் உரிமைகளை எங்களின் மூலம் வெல்லுங்கள்.



**Credit Score** குறைவு என்ற கவலை வேண்டாம்.

*We help our community*

முற்றிலும் இலவச ஆலோசனைகளுக்கும் சேவைகளுக்கும்
அழையுங்கள் சுரேஸ்: 416-662-9860

# Served Over 15 Years In Toronto
# Now in Richmond Hill

# NTE AUTO INC.

## New Trade Engineering

MS7

**346 Newkirk Road, #16, Richmond Hill Tel: 905-770-2575**

## Quality Work... For Less $$$

**"Fully Licensed Class "A" Mechanics on Duty"**

Repairs To All Makes & Models

- **Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars**
- **BMW service & Maintenance**
- **Mechanical, Auto Electrical Repairs**
- **Mechanical Safety Inspection & Certification**
- **FREE ESTIMATES**




# MS7

# Quality Used Car Sales

# 905-770-2575

# 416-399-6640

# ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்’’

## தேனின் தெளிவான விளக்கமும் அதன் பலாபலனும்

### தேன் (Honey)

தேன் - இந்து சமயத்தவர் வணங்கும் விநாயக பெருமானுக்கு உகந்த பொருட்களில் ஒன்றாகும். இதனை அருள் மொழி பொழியும் ஔவையாரின் விநாயகர் துதியில்

‘பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா’

எனக் கூறும்போது, பாலையும் தேனையும் முதன்மையாக எடுத்துக் கூறுகின்றார். எனவே இவை இரண்டும் உயிர்வாழ்வதற்கு இன்றியமை யாதவை. இதில் குறிப்பிடுகின்ற அமிர்த நிலைகொண்ட தேன், சுவையில் இனிப்பும், சீதவீரியமும், மதுரவிபாகமும் கொண்டது. எவரும் வெறுப்பின்றி விரும்பக் கூடிய பொருளாகும்.

எப்பொழுதும் கெடுதல் இல்லாத தேன் மூலிகைச் செடிகளில் காணப்படும், பூக்களில் இருந்து பெறப்படும், மகரந்தம், பிசின், வச்சிரம் (Glue) இலகுவாக ஆவியாகக்கூடிய எண்ணை முதலிய இவற்றில் இருக்கின்றன. ‘மகரந்தம்’ எனக்கூறப்படுவது நேர்த்தியான பொடியாகும். (தூள் தன்மை)

தேன் குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் மிகவும் சிறந்ததாகும். அவர்களுக்கு கொடுக்கப்படும் உணவுடன் 1/4, ½, தே.கரண்டி (வயதிற்கு ஏற்ப) தேன் சேர்த்து கொடுத்து வந்தால் தசைகள் உறுதியாக இருதயம் வலுப்பெற்று இரத்தம் சுத்தமாகி அழகும், பொலிவும், நிறைந்து காணப்படுவார்கள்.

தேனில் அனேகவித சர்க்கரைப் பதார்த்தங்களும் காணப்படுகின்றன. அவற்றில் டெக்ஸ்ட்ரோஸ், சுக்ரோஸ், லெவூலோஸ், டெக்ஸ்டிரிஸ் என்பன முக்கியமானவையாகும். டெக்ஸ்டிரிஸ் என்பது செடிகளில் இருக்கக் கூடியது. தேனில் உள்ள சர்க்கரையாவும் ஒரு தடவை மாத்திரம் சேகரிக்கப்பட்டதாகும். ‘சுக்ரோஸ்’ என்பது வெளுப்பான கலப்பட வஸ்தாகும். கரும்பு, பீட்ரூட், மேபில் முதலியவற்றில் உள்ள சர்க்கரை போன்றது. மக்னீசியா, பொஸ்பரஸ், திரவம், இரும்பு, சுண்ணாம்பு என்பன சிறிதளவுண்டு. கரிநீரகைகளும் (Carbohydrates) காணப்படும்.

தேனானது இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்தி, மச்சை, சுக்கிலம் ஆகிய சப்த (7) தாதுக்களினால் ஆனது. உடல் நிலையில் மனதைத் தேற்றுவதுடன் இருதயத்தையும் துப்பரவாக்கி வலிமையையும் கொடுக்கக்கூடிய அருமருந்தெனவும் கூறலாம்.

சிறியோர் தொடக்கம் முதியவர்வரை தேனைப் பாவித்து வருவதினால் கெடுதியில்லை. இத்தேனை Herbal வைத்தியர்கள் அதாவது சித்த, ஆயுர்வேத வைத்தியர்கள் சில வியாதிகளுக்கு மருந்துகள் கொடுக்கும் போது தேனை அனுமானமாக தனித்தோ, அன்றிச் சில மூலிகைவகைச் சாற்றுடன் சேர்த்தோ கொடுத்து பலரை நோய்களில் இருந்து காப்பாற்றி உள்ளனர் என்பதை நாம் நன்கு அறிவோம்.

பெரும்பாலும் தேனைத் தனிமையாக எடுப்பதைவிட, பால், பழவர்க்கம், பழரசங்கள் என்பவற்றுடன் சேர்த்துப் பாவித்தால் மனப்பூரிப்புடன் வலுப்பெற்று வாழமுடியும்.

ஒருவருக்கு நோய் நிலையில் வைத்தியர்கள், நோயாளிக்கு வயிற்றோட்டம் (Diarrhea) தொடர்ந்து காணப்பட்டால் நோயை நன்கு நிதானம் (Diagnosis) செய்து, கொடுக்கும் மருந்தினால் குணம் கிடைக்கும் எனத் தோன்றினால் தேனுடன் வேறு மூலிகைச் சாற்றின் துளிகளும் விட்டு கொடுத்து அல்லது தேனைத் தனிமையாக அனுமானமாகக் கொடுத்தோ, தொடர்ந்த வயிற்றோட்டத்தை நிற்பாட்டி சுகநிலை அடைய செய்திருக்கின்றார்கள். அப்படியான சிறந்த மருந்துகளை வைத்தியர்கள் கையாண்டு பெயரும் புகழும் பெற்று இருக்கின்றார்கள். எதற்கும் நோயின் நிதானமே முக்கியம். ஒருவருக்கு சளி, முட்டு, இருமல் என்பன கூடுதலாக இருந்தாலும் அதாவது முத்தாதுக்கள் என்கின்ற வாதம், பித்தம், கபம், இதில் சளி, முட்டு மூச்சுக்கஸ்டம், ஏற்பட்டு கஸ்டப்படுவ துண்டு. இந்த வேளையில் காரணத்தை நன்கு அறிந்து, தீர்க்கமாக தீர்மானித்து, தகுந்த மருந்துடன் தேனைத் தனிமையாகவோ அல்லது தகுந்த மூலிகைச் சாற்றுடனோ கலந்து கொடுப்பதினால் பயன் கிடைக்கும் எனக்கண்டால் கொடுத்துச் சுகப்படுத்தலாம். இல்லையேல் வேறு வழிமுறைகளைக் கூறி ரோகியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். எதற்கும் வைத்தியர்களின் உதவி முக்கியமாகும்.

தேனைப் பாவிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியது யாதெனில் அதிகமாகத் தேனை எடுத்தால் மலத்தைக் கட்டும் தன்மையுண்டு. எனவே வைத்தியர்கள் கூறும் அளவின் படி பாவித்து வருவதினால் எதுவிததீங்கும் ஏற்படாது.

அமிர்தமாகப் போற்றப்படும் தேனில் முட்டை, மஞ்சள் நிறம் பொருந்திய முள்ளங்கி இவைகளில் உள்ள சத்துத் தன்மையுண்டு.

வயதிற்கு ஏற்ப 1 cup பாலுடன் 1 தே.கரண்டி தேனும் கலந்து பாவித்து வந்தால் நரம்பு தளர்ச்சி, பெலவீனம் அற்று நீண்டகாலம் வாழமுடியும் அத்துடன் உச்சமாக ஆற்றலையும் ஏற்படுத்தி வலுவை உண்டாக்கி விந்து (Sperm) விரைவில் வெளியேறுதலை கட்டுப்படுத்தி




மகிழச்சியை ஏற்படுத்தும்.

முத்தாதுக்களில் ஒன்றான பித்தம் விகாரப்பட்டு வியாதி நிலை தோன்றி இருந்தால் நன்கு நோயை நிதானப்படுத்தி (Diagnosis) சாதாரண நிலையானால் துப்பரவான இஞ்சியை எடுத்து தோல்நீக்கி, சாறு சிந்தாமல் மெதுவாக துப்பரவான பாத்திரத்தில் தட்டி எடுத்து, நல்லதேன் கூட்டி, குலுக்கி குப்பியில் (போத்தல்) வைத்து அதாவது இஞ்சியும் & தேனும் ஒன்றாகச் சேரும்படி ஒவ்வொருநாளும் குலுக்கி, 1 கிழமை சென்ற பின் காலை வேளை சா.முன் 1, 2 துண்டுகள் எடுத்து மென்று கொள்வதுடன் கலக்கப்பட்ட (இஞ்சிச்சாறு & தேன்) திரவத்தில் ½, 1 தேக்கரண்டி வயதிற்கு ஏற்ப பாவித்து வந்தால் பித்தமயக்கம் மற்றும் தன்மைகள் நீங்கி சுகம் பெறமுடியும்.

சாதாரண வயிற்று வலி (Stomach Ache) ஏற்படும் போது வெந்நீருடன் தேன் 1 மே.கரண்டி சேர்த்துக் கொடுக்க வலி அகன்றுவிடும். எதுவித தீங்கும் ஏற்படாது.

இத் தேனைப் பின்வரும் பொருட்களுடன் பாகம் செய்து நோயின் நிலை கண்டு பாவித்து வரலாம். நன்மை பெறுவீர்கள்

| | |
|---|---|
| 1. உள்ளி | 2. இஞ்சி |
| 3. பேரீச்சம்பழம் | 4. பால் |
| 5. பழம் & பழரசம் | 6. தேன் & தினை மா |

அடுத்து நாம் பாவிக்கும் தேன் நல்ல தேனாக இருக்க வேண்டும். இதனைக் கண்டு கொள்ள பின் வருவனவற்றைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

தனிப்பட்ட மணம் சுவை உடையது. நிறத்தில் வெள்ளை, கறுப்பு நிறம் கொண்ட தேன் மிக நன்றாகும். தேனில் உள்ள மணம் எந்த மலரில் இருந்து பெறப்பட்ட மகரந்தத்தின் பொடியோ அதன் மலர் மணம் கமழும். பளிங்கு போன்ற முகம் பார்க்க கூடிய தேனாகில் சொற்ப நேரம் குலுக்கி வைத்துப் பார்த்தால் வெள்ளை நிறம் காட்டும். இதுவே சிறந்த தேனாகும்.

நிறம் மஞ்சள் கொண்டதாக இருந்தால் அது காடுகளில் காணப்படும் மூலிகைச் செடிகளில் மலரும் பூக்களில் இருந்து பெற்ற மகரந்தத்தின் வர்க்கத் தேனாகும்.

எனவே பொதுவில் காலையில் சுத்தமான இளம் சூடான 1 கப் பாலுடன் 1 தே.கரண்டி தேன் சேர்த்துப் பாவித்து வந்தால் அதன் வலுவைப் பெற்று மகிழ்ச்சி அடைவதுடன் வீரியத் தன்மையும் நன்கு புலனாகும். நீண்ட ஆயுளும் கிடைக்கும்.

இத்தேனை நடுத்தர வயதுடையோர் (ஆண் + பெண்) இரவு படுக்கைக்குச் செல்லும் போது பாலுடன் சேர்த்து பாவித்து வந்தால் அதன் வலுவைப் பெற்று மகிழ்ச்சி ஏற்படுவதுடன் தளர்வு, சோர்வு ஏற்பட்ட எவரோ, அவர் சுகநிலை அடைவார்.

தேன் சிறந்த மதிக்கக்கூடிய உணவு என்று கூறிய போதிலும் நீரிழிவு இதனை சலரோகம், மதுமேகம் (Diabetes) எனக் கூறப்படும் வியாதி உடையவர்கள் இதனை இனிப்பு சுவை எனக்கருதி எடுப்பதற்கு தயங்குவார்கள். எனவே அவர்கள் தவிர்த்துக்கொள்வது சாலச்சிறந்தது. எதற்கும் மனம் விகாரப்படக்கூடாது என்பதே எனது எண்ணமும் ஆகும்.

இத்தேனை இங்கு எங்கும் பெற்றுக் கொள்ளமுடியும். யாவரும் நன்மை பெற்று இன்புற்று வாழ்வீர்.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு **: 416.939.2013**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)
Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician
LG.Ayurvedic Medical Services (SriLanka)



**NATYA SHETRA**

**Dance School**

புதிய நடன வகுப்புக்கள்
நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

*Bharatha Natyam, Modern Dance*
Diploma in Kalakshetra (India)
*Mrs. Niththiyananthan, (BA, DFA)*
*647.668.2111 / 647.998.5284*



# மூடர்களின் பாடசாலை

# ஓடும் நீர் உறைவதில்லை 72

ஒரு மனிதனது திறன் அல்லது திறன் இன்மையைப் பல்வேறு சொற்பதங்களால் நாம் வெளிப்படுத்துகின்றோம். அறிவுத்திறன் படைத்தவர்கள் என நாம் கருதுபவர்கள் அறிவாளிகள், புத்திசாலிகள், திறனாளர்கள், விவேகிகள் என்றெல்லாம் வருணிக்கின்றோம். மாறாக அறிவுத்திறன் குறைந்தவர்களை அறிவற்றவர்கள், அறிவிலிகள், புத்தி இல்லாதவர்கள், மூடர்கள், முட்டாள்கள் என்றெல்லாம் கூறுகின்றோம். ஆனால் ஒருவருக்கு நாம் எந்தப்பெயரைக் கொடுத்தாலும் அந்தப் பெயருக்குரியவர் சம்பந்தமான எமது மதிப்பீடுகளின் வெளிப்பாடகவே அது அமைவதை நாம் அவதானிப்பதில்லை.

ஒருவர் தனது நாளாந்த வாழ்வியல் நகர்வில் எத்தகைய விடயங்களை, எவ்வாறு முன்னெடுத்துச் செல்கின்றார் என்பது பற்றிய நமது கணிப்பீட்டுக்குக் காரணியாக அமைவது எது என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போமாயின் ஒரு ஒப்பீட்டு ரீதியிலான மதிப்பீடாகவே அது அமைவதைக் காணலாம். ஒருவரை புத்திஜீவி என்று நாம் கூறும்போது மற்றவர்களுடனான ஒப்பீட்டில் இவரது நிலை சிறிது உயர்வாக இருப்பதாக நாம் கருதுகின்றோம். அதுபோன்றே அறிவற்றவர் அல்லது புத்தியில்லாதவர் என்பது ஒப்பீட்டு ரீதியில் குறைவான மதிப்பீட்டைப் பெறுவதாகும்.

பேச்சுவழக்கில் நாம் சொற்பதங்களைப் பாவிப்பதன் மூலம் எமது எண்ணத்தின் வெளிப்படுத்தலை முன்வைக்கின்றோம். இவ்வாறான வெளிப்படுத்தல்கள் நேர்த்தியான கணிப்பீடுகளாக அமையும் போது அவை சிறந்த, முற்போக்கான, பாராட்டும் தன்மையைப் பிரதிபலிக்கும் விடயங்களாக அமைகின்றன. உதாரணமாக சிறந்த புத்திமான், அறிவாளி, சிந்தனையாளன் என்பதெல்லாம் ஒருவர் மீதான எமது நேர்த்தியான பார்வையாகும். இதனால் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்கள் அதற்குரியவரது எண்ணத்தில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவர் படிப்படியாக நேர்த்தியான சிந்தனைகளின் உரிமையாளராக்கப்படுகின்றார். இதனாலேயே உண்மையானதும் தரமானதுமான பாராட்டுதல்கள் ஒருவரது சுயமுன்னேற்றத்திற்கான அடிப்படைகளாகின்றன.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எம்மில் பெரும்பாலானவர்கள் எதிர்மறையான வார்த்தைகளின் வாத்தியாராகிவிடுகிறோம். எம்மால் பயன்படுத்தப்படும் சொற்களின் ஆழம் புரியாமல் பயன்படுத்துகிறோம். குறிப்பாக நாம் கூறும் வார்த்தைகளின் எதிர்மறையான தாக்கங்கள் எந்த அளவுக்கு எம்மையும் அதே நேரத்தில் மற்றவரையும் பாதிக்கின்றது என்பதை நாம் பொருட்படுத்துவதில்லை. இங்கு மிகமிக முக்கியமானதாகக் கருதப்படவேண்டிய விடயம் என்னவெனில் ஒரு வார்த்தை அதன் ஒலிவடிவம் பெறுமுன்னர் எம்மால் எமது மனக்காதால் கேட்கப்படுகின்றது என்ற உண்மையாகும். நம்மால் முன்வைக்கப்படும் ஒவ்வொரு வார்த்தையின் முதலாவது கேட்போர் நாம் மட்டுமே. அதன் பின்னரே அது ஒலிவடிவம் பெற்று மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. இதனால்தான் நாம் பயன்படுத்தும் வார்த்தைகளின் தரம் நமது வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்கின்றன என்பதை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியதாகின்றது.

இப்போது எதிர்மறையான சொற்களின் பயன்பாட்டைத் தவிர்ப்பது என்பது அத்தியாவசியமாகின்றது. நாம் வழக்கமாகப் பயன்படுத்தும் பெரும்பாலான எதிர்மறை அல்லது நேர்த்தியற்ற சொற்களின் பொருள் நமக்கே புரிவதில்லை என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். காலம் காலமாக அவை பயன்படுத்தப்பட்டு வருவதால் அதுபற்றிய ஆழமான பார்வை ஒன்று அவசியமாகத் தெரிவதில்லை. உண்மையில் அவ்வாறான சொற்களின் வெளிப்பாடுகள் பற்றிய தேவை ஏற்படுவதன் மூலம் அல்லது அவற்றின் ஆழம் எவ்வாறு தீர்மானிக்கப்படவேண்டும் என்பது பற்றிய புரிந்துணர்வின் மூலம் நாம் பொருள் புரியாமல் பயன்படுத்தும் நேர்த்தியற்ற பல சொற்களைப் பாவனையில் இருந்து அகற்றிவிடலாம். இது ஒவ்வொருவருக்கும் மிக அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படும் விடயமாகும். ஏனெனில் வார்த்தைகள் அவற்றைப் பயன்படுத்துபவரது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணிகளாகும்.

**KG Master-kgmaster@rogers.com**

இப்போது நாம் பேச்சுவழக்கில் மிக அதிகமாகப்பயன்படுத்தும் ஒரு சொல் 'முட்டாள்' என்பதாகும். ஒருவரது செயற்பாடுகள் மீதான நமது கணிப்பீட்டின்போது அவரது நடவடிக்கைகள் நமது அறிவுக்கும் அனுபவத்திற்கும் நகைப்பூட்டும் வகையில் அல்லது, கோபமூட்டும் வகையில் இருக்குமாயின் அவரை முட்டாள் என்று கூறிவிடுகின்றோம். இங்கே முட்டாள் என்ற சொல் வன்மையானதாக இருப்பினும் அதன் பொருள் மென்மையானது என்பதை விளக்குவதே எனது நோக்கமாகும். அறிவிலி, புத்தியில்லாதவன், மடையன், என்றெல்லாம் நாம் குறிப்பிடும்போது அவ்வாறு குறிப்பிடப்படுபவர் மீதான நமது மதிப்பீடுகளுக்கான புள்ளிகளாக அவை அமைகின்றன. ஒருவர் மீதான நமது கணிப்பீடுகள் நமது கணிப்பீடுகள் மட்டுமே.

அறிவில்லாதவன், புத்தியில்லாதவன் என நாம் கூறும்போது ஒருவர் ஒருவிடயத்தில் தன்னிடம் உள்ள அறிவை, புத்தியைத் திறம்படப் பயன்படுத்துவதில்லை என்ற பொருளைக் கொடுப்பதாக அமைகின்றது. ஏனெனில் ஒருவர் அறிவு அல்லது புத்தி இல்லாமல் தன்னை உளவியல் உடலியல் ரீதியாக நகர்த்த முடியாது. எனவே எல்லோருக்கும் அறிவு புத்தி இருக்கின்றது என்பது மறுக்கப்படுவதில்லையாயினும் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்துவதில் தவறி விடுகின்ற போது அறிவு இல்லாதவன், புத்தியில்லாதவன் என அடையாளப்படுத்தப்படுகின்றோம். இதே போன்று நமது அறிவு, புத்தி என்பன அன்புடன் இணைக்கப்படாமல் செயற்படுத்தப்படும்போது அறிவு கெட்டவன், புத்திகெட்டவன் என வரையறுத்து விடு கின்றோம். எனவே அறிவு இல்லாதவனும் அறிவு கெட்டவனும் வேறு வேறானவர்களாகிறார்கள்.

'முட்டாள்' என்ற சொல்லானது மேற்குறிப்பிட்ட இரண்டு வகைகளையும் உள்ளடக்குவதாகப் பயன்படுத்தப்படுவதால் அதிபெரும்பான்மையானவர்கள் மிக இலகுவாகப் பயன்படுத்துகிறார்கள். 'முட்டாள்' என்ற சொல் பேச்சுவழக்கில் அதிகமாகப் பயன்படுத்தப்படுவது போல் எழுத்துவழக்கில் பயன்படுத்தப்படுவதில்லை. இந்தச் சொல்லானது வன்மையான சொல்லாக இருப்பினும் அதன் பொருள் மிக மென்மையானது என்பதை நாம் அறிவது நம்மை நாமே அளவீடு செய்வதற்கு வாய்ப்பாக அமைகின்றது. ஏனெனில் நம்மில் பெரும்பாலானவர்கள் முட்டாள்களாகவுள்ளோம். யார் இந்த முட்டாள்கள்?

தனக்குத் தானே முட்டுக்கட்டை போடுகின்ற ஆள் முட்டாள் என்பது எனது விளக்கமாகும். அறிவியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, வாழ்வியல் ரீதியாகவோ எவர் ஒருவர் தனக்குத் தானே முட்டுக்கட்டையாக இருக்கின்றாரோ அவரே முட்டாளாகின்றார். எனவே முட்டாள் என்பது ஒருவரது சுய கணிப்பீடாகும். ஆனால் துரதிஷ்டவசமாக இந்தச் சுய கணிப்பீட்டை நாம் மேற்கொள்வதில்லை. இதனால் மேலும் நமக்கு நாமே முட்டுக்கட்டை போட்டு மேலும் மேலும் முட்டாளாகிவிடுகின்றோம்.

நடைமுறையில் நாம் ஒரு தவறைச் செய்துவிட்டதாக உணர்ந்ததும் என்ன முட்டாள்தனம் என்று நமக்கு நாமே கூறிக்கொள்கின்றோம். இதன் பொருள் என்னவெனில் ஒரு விடயத்தை சரியாகச் செயற்படுத்தக்கூடிய தகுதியிருந்தும் அவற்றைப் புறக்கணித்து செயற்படுவதனால் ஏற்பட்ட விளைவு என்பதாகும். இங்கே புறக்கணிப்பு அல்லது அலட்சியம் என்பது நமக்கு நாமே இட்டுக்கொள்ளும் தடையாகும். இன்னொரு வகையில் கூறுவதாயின் முட்டுக்கட்டைகளாகும்.

இப்போது நாம் மற்றவர்களைப் பார்த்து இப்போது அறிவில்லாதவர்கள், புத்தியற்றவர்கள், அறிவு கெட்டவர்கள், புத்தி கெட்டவர்கள் எனக் கூறுவது பொருத்தமற்றதாகி விடுகின்றது. ஏனெனில் இவையனைத்தும் ஒருவர் தனக்குத்தானே தனது சுய முன்னேற்றத்திற்கான தடைகளாகப் பயன்படுத்துகின்றாரா அல்லது இல்லையா என்பது அவரது சுய கணிப்பீட்டால் மட்டுமே தீர்மானிக்கப்படக்கூடியது. ஏனெனில் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் ஈடுபடும் போது அவரவர் எதிர்பார்ப்புகளுக்கேற்ப செயற்பாடுகளும் வேறுபடுவது இயல்பானதே. ஆனால் ஒருவர் முட்டாள் என்பதை மிக இலகுவாக இனங்காண முடியும்.

முட்டாள் (மூடன்) யார் என்பதை நாம் மிக இலகுவாக இனங்காண்பதற்கு அடிப்படையாகப் பயன்படுத்துவது என்ன? ஒருவர் ஒரே தவறை மீண்டும் மீண்டும் புரிதல், தவறு செய்து கொண்டிருக்கின்றோமே என்ற தெளிவின்மை, முடிவுகள் சாதகமாக இல்லை என்று தெரிந்து கொண்டும் போலியான சமூக அந்தஸ்துக்காக விட்டுக்கொடுக்காது செயற்படல். எந்தவிதமான ஆதாரங்களும் இன்றி அனுபவமும் இன்றி ஒன்றை ஆரம்பிப்பதும் அது தோல்வியில் முடிந்ததும் 'விழுந்தாலும் மீசையில் மண் படவில்லை' என்பது போன்ற செயற்பாடுகள் மிக இலகுவாக இனங்காண்பதற்கு வழிவகுக்கின்றன. ஏனெனில் இவர்களது பாடசாலையில் தரமான கற்பித்தலுக்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிது மட்டுமல்ல கற்றலுக்கான காலம் அதிநீண்டதாக இருப்பதால் கற்பவர்கள் பொறுமையிழந்து இடையில் கற்பதைக் கைவிட்டு விடுகிறார்கள்.

**ஆம் வாசகர்களே!**

அறிவியல் ரீதியாகப் பல திறமைகளின் உரிமையாளர்கள் கூடத் தவறான பாடசாலையைத் தெரிவு செய்வதால் வாழ்க்கையில் பல விடயங்களில் தோல்வி கண்டுவிடுகிறார்கள். ஒருவரது அனுபவக்கல்வியே அவரைப் புத்திசாலியா அல்லது தனக்குத்தானே முட்டுக் கட்டை போடும் முட்டாளா எனத் தீர்மானிக்கின்றது. புத்திசாலிகள் தாம் எடுக்கும் காரியங்களில் திடமான வெற்றியைப் பெறுபவர்கள். ஏனெனில் இவர்களது பாடசாலையானது மற்றவர்களது அனுபவங்கள் நிறைந்ததாகும். அந்த அனுபவங்களைக் கற்றுக்கொள்வதன் மூலம் சிக்கல்கள், தடைகள் என்பன மிகக்குறைந்த அளவில் அமைவதால் விரைவான வெற்றிக்கு வழிசமைக்கக்கூடியதாக அமைகின்றது. மாறாக மற்றவர்களது அனுபவத்தைப் புறக்கணித்து எல்லா விடயங்களிலும் எமது அனுபவத்தையே முற்று முழுதாகக் கற்று நடைமுறைப்படுத்த முயற்சிப்போமாயின் நமது வாழ்காலம் போதாது.

நமது அன்றாடவாழ்வில் எந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாலும் அது சம்பந்தமான மற்றவர்களது அனுபங்களும் அவற்றின் பெறுபேறுகளும் மிகவும் இலகுவான முறையில் தீர்மானங்களையும், செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு உதவுகின்றன. குடும்பம், குழந்தை வளர்ப்பு, பொருளாதாரம் போன்ற பல்வேறு விடயங்களில் சிறப்பான முறையில் தம்மை முன்னெடுத்துச் சென்றவர்களது சிறப்பான அனுபவங்கள் நமக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். இதுவே நமக்கான சிறந்த பாடசாலையுமாகும். அதுமட்டுமன்றி மற்றவர்களின் அனுபவங்கள் நிறைந்த பாடசாலையே புத்திசாலிகள் கற்றுக்கொள்ளும் பாடசாலையாகும். மாறாக மற்றவர்களது அனுபவப்பாடசாலையைப் புறக்கணித்துத் தனக்குத்தானே முட்டுக் கட்டைகளைப் போட்டுக்கொண்டு அவ்வாறான முட்டுக்கட்டைகள் இருப்பதையே உணராமல் சொந்த அனுபவத்தால் வாழ்க்கையை நகர்த்த முயற்சிப்பவர்களுக்கு வாழ்காலம் போதாமல் போய்விடுகிறது. ஏனெனில் இவர்களுக்கு சொந்தப் பாடசாலை (அனுபவம்) யைத் தவிர வேறு எதிலும் நம்பிக்கை இருப்பதில்லை அல்லது அக்கறை இருப்பதில்லை. இதனால் இவர்களது வாழ்க்கை 'நித்திய கண்டம் பூரண ஆயுள்' என்பதாக நகர்ந்து கொண்டிருப்பது துரதிஷ்டவசமானதாகும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு; வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3223 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3223

On TV

Saturdays at 10:30 am
Rogers Cable Channel - 20
Bell Expressvu Channel - 219

# புலிகள் வாழ்விடம் - களக்காடு



## தமிழ்நாடு சுற்றுலா இடங்கள்- 46

மூவர் share பண்ணிக்கொண்டிருக்கும் 4 அறைகள் வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Laundry, Cooking facilities. Avail. immediately. Close to bus, school, தமிழ் கடைகள், etc.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**DON MILLS & STEELES**
1 Bedroom in bsmt. for rent. Sep. entrance. Close to malls, TTC. Ladies preferred. No alcohol&smoking. Rent $325
தொடர்புகட்கு: 416.491.9364

**KENNEDY & ELLESMERE**
1 Room in condo for rent. Internet, cable TV. Close to bus, school, all mall, 401 Hwy. Ladies preferred.
தொடர்புகட்கு: 416.551.4539.

**MIDDLEFIELD & ELSON**
2 Rooms for rent. Attached washroom. Close to TTC, No Frills, school, tamil stores, Doctor. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.471.5340

**JANE & WESTON**
1 Bedroom in condo. for rent. Parking, cooking facilities. Close to all amenities. Ladies preferred. Avail. Novem. 1st, 08
தொடர்புகட்கு: 416.245.3446

**MARKHAM & STEELES**
1 Furnished Room in main floor. Furnitures, parking, laundry, cable, internet. Close to all shops. Avail. immediately
தொடர்புகட்கு: 416.726.0897

**NEILSON & TAPSCOTT**
Room for rent. Outdoor parking. Close to TTC, school, shopping. Rent $300. Avail. immediately. Ladies preferred
தொடர்புகட்கு: 416.951.2200

**DIXIE & PETER ROBERTSON BLVD - BRAMPTON**
Rooms for rent upstairs & downstairs. Parking. Close to bus, school, stores, hospital... பெண்கள் அல்லது வயதானவர்கள் விரும்பத்தக்கது. விரும்பினால் உணவும் காக்கப்படும். Avail. immediately.
தொடர்புகட்கு; 416.270.2677

**NEILSON & TAPSCOT**
1 Room for rent. Meals on request. Internet, parking. Cooking facilities. Close to Centennial College. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகட்கு; 647.500.6409

**MIDDLEFIELD & GOLDEN Ave.**
3 Bedrooms or room by room for rent. Near high school & Elementary school, mall. Available immediately.
தொடர்புகட்கு; 647.309.2350

**ORTON PARK & LAWRENCE**
2 அறைகள் கொண்ட Apt.இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது. Parking. Close to bus, stores, etc. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: 416.439.3568

**MORNINGSIDE & SHEPPARD**
1 large bedroom for rent - Main floor. Sep. washroom, sharing kitchen, parking, laundry, utilities. inclu. Avail. immediately. Ladies Preferred. Close to bus, shopping. ***Low rent***.
416.286.1282 / 647.409.1282

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom for rent. Kitchen, washroom. Parking, etc. Close to TTC, stores, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

**BRIMLEY & EGLINTON**
1 Room in bsmt. for rent. Sep. entrance. All utilities included. Convenient location.Close to TTC, mall. Avail. immediately. தொடர்புகட்கு; 416.264.4173

**DANFORTH & EGLINTO**
One Room in main floor for rent. Laundry, parking. Close to bus, stores, 5 minutes to Kennedy subway. Ladies preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.201.3111

**MARKHAM & EGLINTON**
One room available in a condo. Close to malls, tamil stores, 24hrs TTC free laundry, recreation.free laundry. Suitable for single female.
தொடர்புகட்கு: 416-546-8005

**MARKHAM & ELSON**
1 bedroom for rent. Parking, laundry. Avail. immediately. தனி நபர் விரும்பத்தக்கது. ஒரு நேரச் சாப்பாடு கொடுக்கப்படும். Rent $350. Close to bus, shopping, etc.
905.294.7026 /416.951.0034

**MARKHAM & ELLESMERE**
3 bedrooms for rent. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Sep.washroom, parking, Laundry, etc. Avail. immediately. Close to Bank, TTC, School.
தொடர்புகளுக்கு: 416.438.5249

**NEILSON & FINCH (wingarden)**
ஒறு அறை எல்லா வசதிகளுடனும் உடன் வாடகைக்கு உண்டு. பெண்கள் மட்டும்.
416.297.4100/647.239.4100

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும். Attached washroom, Double garage. Close to everything.
Call: 416.335.8055/905.294.2674

***விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு***
***www.vlambaram.com***

மேலும் பக்கம் 20

# HOUSE FOR RENT

**MIDDLEFIELD & PASSMORE**
3 Bedroom house for rent with basement. 6 Parking. Large front yard. All appliances. Close to Doctors office, TTC, school.Near factory area. Avail. immediately. வாடகை பேசித்தீர்க்கப்படும்.
தொடர்புகட்கு: 416.294.7459.

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom bungalow house for rent. Close to school, mall, TTC.
Also 2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. All facilities
Avail. December 1st, 2008
647.287.9546/416.350.6515

**McLEVIN & NEILSON**
4 Bedroom house for rent. 3 washrooms, parking, cable, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.206.3436
Also another 1 Bedroom bsmt. apt available for rent. Sep.entrance

**BIRCHMOUNT & EGLINTON**
3 Bedroom house. கனடா கந்தசாமி கோவில் அருகாமையில். சமையல் அறை வசதியுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு. முழுமையாகவோ அல்லது தனித்தனி அறையாகவோ கொடுக்கப்படும்.
தொடர்புகட்கு: 647.448.7798

**MARKHAM & STEELES**
4 Bedroom house for rent. 4 Washrooms, 2 Garages. Close to TTC, YRT, No Frills, school, mall. Available immediately
416.450.9152/905.294.3312

**MORNINGSIDE & MCLEVIN**
3 bedroom house for rent main floor. Parking. Small family preferred. Close to everything.
416.724.1837 / 416.297.8767

**ON KENNEDY NEAR EGLINTON**
2 Bedroom house for rent. Living, dining, kitchen & washer, parking & front yard. Close to subway, bank, school, grocery store. Very convenient location. Available immediately.
தொடர்புகட்கு; 416.264.3899

**NEILSON & MCLEVIN**
4 bedroom house for rent - main floor. 2½ washrooms, 4 parking. Avail. January 01, 09. Close to ttc, school, mall, etc.
416.724.7603 / 416.321.5638

# JOB JOB JOB

***MAVIS & HWY 401*** பகுதியில் வசிக்கும் முதிய ஆண் ஒருவரை வீட்டிலிருந்து அல்லது வந்து முழுநாள் வரை பராமரிப்பதற்கு ஆள் தேவை.
மேலதிக தொடர்புகளுக்கு:
905.232.5544 / 647.242.0595/

***YONGE & EGLINTON*** பகுதியில் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை 8 மணித்தியாலம் Flyers போடுவதற்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: Selva - 416.305.8738

**Etobicoke** இல் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றிற்கு அச்சுப்பாண், றோஸ் பாண், றொட்டி தயாரிக்க தெரிந்தவர்கள் தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் விரும்பத்தக்கது.
விபரங்களுக்கு: 416.744.7279

**மகப்பேற்றுப் பராமரிப்பு**
மகப்பேற்றுக்காலத்தில் தாயையும் சேயையும் பராமரிக்க வேண்டுமா? அழையுங்கள்
416.724.1837 / 416.297.8767

# CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்:
416.274.5495

# DAYCARE AVAILABLE

**MARKHAM & DENISON**
Well experienced, First Aid trained lady. Limited space. School drop-off & pick-up available. தொடர்புகட்கு: 905.209.7012

# CAR FOR SALE

2003 Honda Civic, auto, fully loaded, silver color wtth spoiler. 69,000 km. Mint condition. Brand new tyres.
$8950 / (Negotiable)
தொடர்புகட்கு: 416.400.1532

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# BUSINESS SPACE FOR LEASE OR SALE

## MARKHAM & STEELES

**Business Unit - 600 Sq. ft.** New Plaza. Occupation December 2008. SUITABLE FOR BUSINESS OR OFFICE
**Call 416-910-1287 for details**

# PALLET TRUCK OPERATORS WANTED

## MARKHAM & STEELES

சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் Manufacturing நிறுவனத்திற்கு Electric Pallet Truck வேலைக்கு ஆள் தேவை. 12 மணித்தியால வேலை.
Positions vacant for Electric Pallet Truck ( Dock Stocker BT end riders) operators. Working 12 hour shifts. Fax Resme to **416-609-3158**

***TIP TOP BINDERY LTD***

# சிரிப்பு மனப்பாங்கு தப்புக்கணக்கு

## நோய் விட்டுப்போகும் போன்ற கட்டுரை அல்ல.

வேறொரு அணுகுமுறை: அந்ததந்த வயதுக்கு வரும்போதுதான் சில சம்பவங்களுக்கு பொருள் புரியும். சம்பவங்கள் நடக்கும் போது அதன் பார்வையாளர்கள் சரியான வயது வித்தியாசத்தில் இருந்தால், தமது வயதுக்கேற்ற அறிவுடனேயே அவற்றை எடைபோடுவர். அது வகுத்த கொள்கையையோ மனப்பான்மை யையோ பொறுத்திருக்கும். ஓய்வாக இருந்து சிந்திக்கும் போதுதான், தப்புக்கணக்கின் உண்மை பளீரெனப் பொறிதட்டும்.

ஒருசிறு சம்பவம், அப்போது நமக்கு நடுத்தர வயதை அண்மிக்கும் காலம். பெண்கள் சம்பந்தமாக அமிர்தாம்பிகை சதாசிவம் எனும் ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவரைச் சந்திக்க கொக்குவிலுக்குப் போயிருந்தோம். வாகனத்தை நமது தோழி கனகா மயில்வாகனம் வீட்டில் நிறுத்திவிட்டு அவர்கள் வீட்டுக்கு நடந்து போனோம். வீட்டிலிருந்த உதவியாளர் அவர் கோவிலுக்குப் போயிருப்பதாகவும் பூசை முடிந்தபடியால் திரும்பும் நேரந்தான் என்று சொன்னார்.

அவரைச் சந்தித்துப் பேசிப்பேசியே வீட்டுக்கு வரலாம் என எண்ணித் தெருவைக் கடந்து தெற்குவீதியில் இறங்கிய போது நல்ல வெய்யில். ஆள்நடமாட்டம் குறைவு. கோவில் மதிலோடு ஒரு சிறுமரம் இருந்தது. பெரிதாகக் கிளைபரப்பிய மரம் அல்ல. அதன் சிறு நிழலில் ஐந்தோ ஆறோ முதியவர்கள் இருந்து கடதாசி விளையாடிக் கொண்டிருந்தார்கள். வெள்ளை வேட்டியுடன் இருவர் சட்டைகளும் மற்றவர்கள் சால்வையால் போர்த்துக்கொண்டோ தோளில் போட்டபடியோ கெக்கட்டம் விட்டுப் பெரிதாகச் சிரித்து மகிழ்ந்தபடி விளையாடுகிறார்கள்.

அவர்களை அண்மித்துக் கொண்டு இருந்தபோது ஒருவர் 'ஸ் ஸ் ஸ்' எனவும் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். நானும் பார்த்தேன். அங்கே மூலையால் அமிர்தாம்பிகை தெற்கு வீதிக்குத் திரும்பி வீட்டுக்கு வருகிறார். நடப்பதை நிறுத்தி அவர் வருவதை எதிர்பார்த்து நிற்கவும் ஒருவர் கீழ்க்குரலில் ஏதோ சொல்கிறார். எல்லோரும் பெலத்து சிரிக்க ஒருவர் முழந்தாளில் எழுந்து சொன்னவருக்கு எட்டிக்குட்டுகிறார். அம்மையார் கிட்டவரும்போது, பழையபடி மௌனமும் கடதாசி விளையாட்டும்.

இவர்கள் பகுதியைக் கடந்து என்னைப் பார்த்த படியோ அம்மையார் வந்தபோது, பின்னாலிருந்து 'என்ன கவனியாமல் போறியள்' என்ற குரல் எழுந்தது. இவர் நின்று திரும்பிப்பார்த்து முகத்திலே ஒரு வெட்கமும் கூச்சமும் பரவ ஒரு சிறு சிரிப்பைச் சிந்திவிட்டு என்னோடு வந்தார்.

எனக்குள்ளே ஒரு சீற்றம். இந்தக் கிழடுகள் எங்களைப் போல பகிடிவிடுகுதுகள். இரண்டு ஏச்சுக் கொடாமல் சிரிப்பு. அதிலும் அங்கீகரிப்பது போல ஒரு வெட்கம். நாங்கள்தான் காவாலிகளைக் கனம் பண்ணாவிட்டால் ஏதும் ஆபத்தை விளைவித்தாலும் என்று ஒரு கௌரவச் சிரிப்பைக் கொடுக்கிறோம். படித்தவர், ஒரு ஆசிரியை, அத்துடன் உயர்கல்வி கற்ற மதிப்புக்குரிய பெண் - வயது போன காலத்திலும் என்ன சிரிப்பு. கண்டது நிண்டது கள் வீட்டில் இடமில்லாது தெருவில் இருந்து கொண்டு குரங்குச்சேட்டை விடவா? என்னுள் இருக்கும் பெண்ணுரிமை கெம்பிப் பொங்குகிறது.

முன்னறையில் இருத்திவிட்டு உள்ளே சென்று குளிர்பானத்தோடு வந்த அம்மையாரிடம் என் குடுகுடுத்த வாய் சும்மா இருக்கவிடவில்லை. 'அவங்கள் யார்? ஏதோ சொல்லிச் சிரிச்சவங்கள்' எனக் கொட்டித்தள்ளினேன்.

படித்த பெண்கள் அந்தக்காலத்தில் பெரிதாகச் சிரிக்கமாட்டார்கள். சிறிது பல்லுத்தெரியச் சிரித்த அம்மையார்,

"இவர்களெல்லாம் என்னோடு படித்தவர்கள். இப்போது ஓய்வு பெற்று ஊரோடு வந்து விட்டார்கள். இவர்களில் இருவர் பொறியியலாளர். ஒருவர் பட்டதாரி ஆசிரியர், மற்ற இருவரும் பத்தாம் வகுப்போடு இலிகித சேவைக்குச் சென்றவர்கள். அவர்களில் ஒருவர் எனது மச்சான் முறையானவர். 'மேற்படிப்பு படிக்காததாலை கோட்டை விட்டிட்டியேடா' என்று என்னைக் கண்டால் அவனைக் கேலி பண்ணுவார்கள்" எனச்சொல்லி மேலும் சிரித்தார்.

வயதுக்கும் அறிவுக்கும் இந்த மலினமான பகிடிகள் எப்படி ஒத்துவரும் என்பது எனது அன்றைய பிரச்சினை.

படிக்கிறகாலத்தே எனக்கொரு நண்பி இருந்தார். அவர் எந்நேரமும் கவலையாகக் காணப்படுவார். எம்மைச் சுற்றி ஒரே சிரிப்பும் விளையாட்டுமாக இருக்கும். ஒருநாள் மிகக்கவலையாக இருந்த அவர் 'உமக்கென்ன நீர் பணக்காரி, சரஸ்வதி பூசைக்குக் காசு கொடுக்க என்னிடம் இல்லை. அப்பு மிளகாய் செத்தல் கொண்டு சுன்னாகம் சந்தைக்குப் போய்விட்டார். ஏதும் விற்றால்தான் வீட்டிலே சோறும் காய்ச்சுவினம், எனக்கும் காசும் தருவினம். திருப்பித் திருப்பிக் கேட்டால் படிச்சது போதும். வீட்டிலை இருந்து உதவி செய் என்பினம். சிந்தித்தேன், நகைச்சுவைக்கும் பணத்துக்கும் ஏதும் தொடர்புண்டோ? - இல்லை என்னுடன் மூன்றாம் வகுப்பில் படித்த ஒரு சிறுமி. எங்கள் வளவில் வேலை செய்யும் குடும்பத்தவள். என்னமாதிரி ஆடிப்பாடி அசரவைப் பாள். கற்பலகையில் எழுதிக் கொடுக்க அதனைப் பாட-மாக்கி விளையாடும் போதோ வேலைசெய்யும் போதோ ஏற்ற உணர்வுகளோடு சொல்லிச்சொல்லி சிரிக்கவைப்பாள். அது அவள் பெயரும் அவளது குறிச்சியின் பெயரும்தான்.

'கந்தன் வைரவன் காடியவத்தை கானா வானா உமக்கும் எழுதுமன் என்பாள். நீட்டுப் பெயர்கள் ஒரு லயம் அமைய எழுத முடியவில்லை. எந்நேரமும் புன்னகையும் சிரிப்பும் தவழும் முகம். பிறரைச் சிரிக்கவைக்கும் வார்த்தைகள் இதழுட்டுவாள் செல்வி.

இப்போது எனக்கும் வயதுபோய்விட்டது. ஆனால் நகைச்சுவை உணர்வு போகவில்லை. வாழ்க்கையில் ஒரு தலைமைப்பதவியில் இருக்கும்போது முகத்தை உணர்ச்சிகள் பொங்காதவாறு கட்டிக்காக்க வேண்டும். அந்த நடிப்பு அடிக்கடி நிகழும். இப்போதெல்லாம் அந்தக் கட்டுப்பாடு இல்லை.

அறிந்தவர் தெரிந்தவர் போனால் நானாகவே அழைத்து "என்ன காணாதது போலப் போறியள், இந்தப் பெரிய உருப்படியை கண்ணுக்குக் தெரியவில்லையோ?" என்பேன். சிலர் அசந்து போவார்கள். சிலர் கௌரவம் தருவார்கள். இன்னும் சிலர் இவ பகிடி விடுவாவோ ஏதோ சீரியஸ் ஆன விடயத்தை சிரிச்சுக் கொண்டு சொல்கிறார் எனக் குற்றவுணர்ச்சி கொள்வார்கள். சிறுவயதில் என் நினைத்தது போலவே.

ஒரு தடவை ஒரு அன்பர் என்னிடம் புத்தகமோ, பத்திரிகையோ அல்லது வேறு வேறு பொருள்களோ கைமாற்றாக வாங்கிப்போய் திருப்பித் தந்துவிடுவார். நீண்ட நாட்களாக தொடர்பு இல்லாமல் போய்விட்டது. வேறு வீடு வாங்கிப் போய்விட்டர். இடைக்கிடை தொலை பேசி அழைப்பும் நமது அசண்டையினால் விடுபட்டது.

ஒருநாள் ஒரு பொதுவைபத்தில் அவரைக் கண்டேன். 'என்ன கண்மண் தெரியாமல் போறீர்' வசதியாக மறந்து விட்டீரா. என்னையும் கொஞ்சம் கவனியுங்கோ' என முறுவலித்து மகிழச்சியைக் காட்டினேன். வெலவெலத்துப்போனார்.

'ஐயையோ, ஒருநாளைக்கு ஒருதரமாயினும் நாங்கள் கதைப்பம். ஆனால் பிள்ளைகளைப் புதுப்பள்ளியில் சேர்த்ததால் அவர்களை அழைத்து செல்லவும் வரவும் தான் நேரம் சரியாகின்றது.

ஐந்து நிமிடம் அவர்களோடு பேசிவிட்டு வந்தேன். அருமையான பிள்ளைகள். அந்தக் குடும்பத்தின் பிரிவுகூட அந்த நாட்களில் ஒருவெறுமையை உணரவைத்தது. மறுநாள் அழைத்தார்.

'ஏன்டாப்பா நினைவூட்டியதும் ஒவ்வொருநாளும் பேசவேண்டும் போல் இருக்கிறதோ',
'இல்லையம்மா இரவுமுழுவதும் உங்கள் யோசனைதான். உங்களோடை மனம் விட்டுப்பேசச் சொல்லி மனிசி சொல்லிச்சு.
'ஏன் ஏதும் பிரச்சினையோ? சொல்லும். இயலுமானால் உதவி செய்கிறேன்.
நான் உங்களுக்கு ஏதும் பிழை செய்தனானோ எதையும் தரமறந்தேனோ? அதைத்தான் நினைப்பூட்டினீங்களோ என்ற சந்தேகம்.
'விசரா விசரா, அது பகிடிக்கு. நீர் பகிடியாக நினைக்காதது பிழை. அப்படி இருந்தாலும் ஒருபொது இடத்திலை அநாகரிகமாக நடப்பேனோ? நானும் காணாத மாதிரி இருந்திருப்பேனே தவிர அற்பத்தனமாக நடந்திருக்கமாட்டேன். அவர் நிம்மதியாய் விட்டார்.

என் பகிடியின் விலைஎன்ன?
பகிடியைப் பாம்பு கடிக்கும் என்பது சரிதானோ?
நகைச்சுவைக்கும் மனப்பான்மைக்கும் ஒரு தொடர்பு உண்டு. நாலுபேர் மத்தியில் ஒரு நகைக்குரிய செய்தி சொன்னால் ஓரிருவரைத் தவிர மற்றவர்கள் சிரிப்பார்கள். சிரிக்காதவர்கள் மனதிலே ஒரு காழ்ப்புணர்ச்சி இருக்கலாம் அல்லது புரிந்து கொள்ளும் தன்மை குறைவாக இருக்கலாம். ஆசிரியர் அறையிலே ஏதோ பகிடிவிட எல்லாரும் பெலத்து சிரிசிரி என்று சிரித்தார்கள். முத்தம்மா ஆசிரியர் கேட்டார். 'இப்போது உமக்கு என்ன வயது?

முப்பத்தாறு. ஏன் பதின் மவயதுப் பொட்டையள் போல எல்லாரையும் சிரிக்க வைக்கிறீர். நீங்கள் எல்லாம் ஆசிரியர்களல்லவா. இவதான் என்றால் நீங்களுமா?

'என்ன லொஜிக் இருக்குது இதிலை'
'யோசித்துப் பாரும்'
முத்தம்மாவின் மனப்பாங்கு ஆசிரியராகி விட்டால் பகிடிகள் விடக்கூடாது. பகிடிகளுக்கு சிரிக்கக் கூடாது. அக்காலத்தில் நமது மனப்பாங்கு முதியவர்கள் பகிடி விடக்கூடாது.
வயது ஏறஏற இயல்பாகவே இருக்கும் நகைச்சுவை குறையப் போவதில்லை. அந்த வயது வந்ததும்தான் நாம் தப்புக்கணக்கு போட்டது புரிந்து விடும். ஐம்பது வருடங்களாக சந்திக்காத கலா-சாலை ஆசிரியமாணவியாகிய நண்பியை தொடர்பு கொண்டேன். அவரைப் 'பாரோ என்றழைப்பது வழக்கம். தொலைபேசி எடுத்ததும் பாரோ என்று அழைத்தோம்.
யாரது? யாரது?
கண்டுபிடியும்.
ஒரே ஒருவர்தான் இப்படி அழைப்பவர்.
சொல்லுங்கோ...
குறமகளின் மகளோ?
'ஏன் தாயாக இருக்கக் கூடாதோ'
ஒரே சிரிப்பு
'வயது போயும் குரல் சற்றும் மாறவில்லை.
'பழையகதைகளைச் சொல்லிச்சொல்லி அமர்க் களமான வாய்விட்ட சிரிப்பு. மனது கூட அந்த இளமைக்காலமாகிவிட்டது. ஒரு சிறுபிள்ளையின் குரல்கேட்டது. 'டிலானி ஓடியா ஓடியா அம்மம்மா சிரிக்கிறா சிரிக்கிறா வந்துபார்' வாய்விட்டு சிரித்ததை இன்றுதான் கண்டிருக்கினம் என்றார்.

மக்களின் மனப்பான்மையைப் பொறுத்து நகைச்சுவை வாழும். துன்பத்தின்மேல் துன்பம் வந்தால் அதில் தேய்வு தொடரும்...



**வள்ளிநாயகி இராமலிங்கம்**



# பேரண்டக் கதை

04ஆம் பக்கத்தொடர்ச்சி

எண்ணம் கொப்பநிக்சிற்கு, அவர் மாணவனாக இருந்த காலத்தில் இருந்தே இருந்தது. 1507ஆம் ஆண்டு, அவரின் 34வது வயதில் 6 பக்கங்கள் கொண்ட ஒரு கையெழுத்துப் பிரதியை எழுதி அதனைத் தனது விஞ்ஞான நண்பர்களிடையே கொடுத்திருந்தார். அதில் பிரபஞ்சத்தின் அதாவது பேரண்டத்தின் மத்தியில் பூமியல்ல, ஞாயிறே இருக்க வேண்டும் என்ற கருத்தினை அனுமானமாக கூறியிருந்தார். பூமியும் மற்றைய கோள்களினைப் போன்றே தன் அச்சில் தன்னைத்தானே சுற்றுவதுடன் சூரியனையும் வலம் வருகின்றது எனக் கூறியிருந்தார். தண்டனைகளில் இருந்து தப்புவதற்காவே தமது கருத்துக்களை கையெழுத்துப்பிரதியாக நண்பர்களிடையே கொடுத்திருந்தார் கொப்பநிக்கஸ். 1515ஆம் ஆண்டளவில் இவரது கருத்தானது எல்லோராலும் அறிந்து கொள்ளப்பட 1530இல் திருச்சபையானது இதற்கான விளக்கத்தினை இவரிடம் கேட்டது.

வான்பொருட்கள் பற்றிய கொப்பநிக்கசின் பெரும் உழைப்பு அவரது De Revolutionibus Orbium Coelestium என்ற நூல் ஆகும். பல ஆண்டு கால அவரது திருச்சபைக்குத் தெரியாத உழைப்பு அந்நூலில் இருந்தது. அக்கால கட்டத்தில்தான் மாட்டின் லூதர் கத்தோலிக்கத் திருச்பையினரைப் பற்றியும் அவர்களது போதனைகள் பற்றியும் கடுமையாக விமர்ச்சித்துக்கொண்டு இருந்தகாலம். எனவே திருச்சபையிற்கு மேலும் சிக்கல்களைக் கொடுக்க கொப்பநிக்கஸ் விரும்பவில்லை. அதைவிட, திருச்சபையின் தண்டனைக்கும் மிகவும் பயப்பட்டுக்கொண்டு இருந்தார். இந்தக் காரணங்களுக்காக தனது நூலை, தாம் இறக்கும் வரையும் பதிப்பதற்கான அனுமதியை அவர் தரவில்லை. 1543இல் அவர் இறப்பதற்கு ஒருவருடம் முன்னதாக அதுவும் தான் இனி இறக்கப்போகின்றேன் என்பதைத் தெரிந்து கொண்ட பின்னரே அனுமதியளித்தார். முழுமையான தனது நூலை கொப்பநிக்கஸ் காணவேயில்லை.

கொப்பநிக்கஸ் தனது புத்தகத்தில் பிரபஞ்சத்திற்கான புதிய ஒரு மாதிரியைத் தந்திருந்தார். கொப்பநிக்கசின் இந்தப் புதியமாதிரியும் திருத்தமானதல்ல. தொலமியின் மாதிரியில், சூரியனும், பூமியும் இடம் மாற்றப்பட்டு இருந்தனவே தவிர வேறு ஒரு விடயமும் அதில் புதியதாக அவரால் சேர்க்கப்படவில்லை. கோள்களின் பெருவட்டம், சிறுவட்டம் ஆன இயக்கங்கள் இன்னமும் அவரது மாதிரியில் காணப்பட்டதுதான். ஆனாலும் அவரது பிரபஞ்ச மாதிரிக் கொள்கையானது எவ்விதம் அவரைத் தொடர்ந்து வந்த விஞ்ஞானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதுதான் இன்னமும் தெரியவில்லை என்கின்றார்கள் ஆய்வாளர்கள். இதனை கொள்கை என்பதனைவிட அனுமானம் என்றேதான் கூறவேண்டும்.

ஞாயிறுதான் பிரபஞ்சத்தின் மத்தியில் இருக்கவேண்டும் என்ற கொப்பநிக்கசின் அனுமானமானது புதிய ஒன்றல்ல. இவருக்கு பல நூற்றாண்டுகளின் முன்னரே சில கிரேக்க விஞ்ஞானிகளும், இந்திய விஞ்ஞானிகளும், குறிப்பிட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனாலும் கொப்பநிக்கஸ் தனது அனுமானத்திற்கான காரணங்களை தமது கையெழுத்துப்பிரதியிலும், தமது நூலிலும் தெளிவாகக் கூறியிருந்தார். இதுதான் ஒருவேளை பின்நாளில் வந்த விஞ்ஞானிகளைக் கவர்ந்திருக்கலாம் என்று எண்ணுகின்றேன். மேலும் கொப்பநிக்கசின் சூரியமையப் பேரண்ட அனுமானமானது பல சிக்கல்களுக்குத் தெளிவினைக் கொடுத்து செவ்வாய், வியாழன், சனி ஆகிய கோள்களின் பின்நோக்கிய நகர்விற்கான விளக்கத்தினைக் கொடுத்தது. அதுமாத்திரமல்லாது முழுத்தொகுதியுமே ஒருவித சமச்சீர்த் தன்மையைக் காட்டியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவை போன்ற பல சிறப்பான தன்மைகள் கொப்பநிக்கசின் அனுமானத்தில் (ஆம், அனுமானம் என்றேதான் கூறவேண்டும்) இருந்தபோதும், பூமியானது நிலையாக நில்லாது மற்றைய கோள்களைப்போல் படுவேகத்தில் வான்பரப்பில் சுழன்றுகொண்டு செல்கின்றது என்பதனை எந்தவொரு மதத்தலைவராலோ ஏற்றுக்கொள்ளப்பட முடியவில்லை. பல விஞ்ஞானிகள் கூட அக்காலத்தில் இக்கருத்துக்கு முரணாகவே இருந்தார்கள்.

சூரியன்தான் பிரபஞ்சத்தின் மையத்தில் உள்ளது என்ற கொப்பநிக்கசின் கருத்தானது அனுமானம் என்றேதான் கூறப்பட்டது. ஏனெனில் அதற்கான நிறுவல்களை கொப்பநிக்கஸ் தமது தெளிவுரைகளில் காட்டவில்லை. இன்ன இன்ன காரணங்களினால், ஞாயிறுதான் பிரபஞ்சத்தின் மத்தியில் இருக்கவேண்டும் என்பதனைத் தாம் அனுமானிப்பதாகவே அவர் கூறியிருந்தார் என்கின்றனர் ஆய்வாளர்கள். ஆனாலும் அவரது அனுமானமானது நவீன வானவியலின் கதவினை திறந்து விட்டது என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. மேலும் விஞ்ஞான முடிவுகள் நிறுவப்பட வேண்டும் என்ற உறுதியான முடிவானது பின்னாளில் வந்த கலிலியோ கலிலியின் காலத்தின் பின்னரே கடைப்பிடிக்கப்பட்டது. எனவே, கொப்பநிக்கசும் தனது அனுமானத்தினை நிறுவிக்காட்டியிருக்க வேண்டும் என அதிக அக்கறை எடுக்கவில்லைப்போலும்.

கொப்பநிக்கஸ் பற்றி இத்துடன் முடித்துக் கொள்ளுவோம். மறுமுறை சந்திக்கும்போது கொப்பநிக்கஸ் விட்ட இடத்தில் இருந்து எப்படிப் பேரண்டக்கதை வளர்ந்தது என்பதனைப் பார்ப்போம்.



**- கனி -**


# Credit Recovery Point

உங்கள் கடன் (Credit) பிரச்சினையால் வாழ்க்கையில் ஏற்படும் சுமையை நாங்கள் இறக்கி விடுகின்றோம்.

உங்களுடன் தமிழ்மொழியில் உரையாடி உங்கள் துன்பத்தை துரத்தி விடுகின்றோம்.

**சகல ஆலோசனைகளும் இலவசம்**

உங்களுக்கு உடன் உதவிட நாம் தயார்!
நீங்கள் தயாரா? எங்களது விசேடமான உதவிகள்

வங்குறோத்து (Bankruptcy) அடையாமல் உங்கள் கடனை இலகுவழியில் தீர்க்க சட்டதிட்டங்களுக்கு அமைய வழிமுறைகளைக் கையாளுதல்.

அழியாச்சொத்தை வைத்துக் கொண்டு மற்றைய கடன்களிலிருந்து விடுபட உதவிபுரிதல்

நீங்கள் கடன் பெற்ற நிறுவனத்தின் தொலைபேசி அழைப்புகளால் உங்களை மனவழுத்தலுக்கு செல்லாமல் தவிர்த்தல்

உங்கள் மேல் சட்ட நடவடிக்கையெடுத்து உங்கள் வருமானத்தை இடைநிறுத்துவதை வென்றெடுத்தல்

உங்கள் பல கடன்களை ஒன்றாக்கி மாதாமாதம் சிறு தொகை கட்ட ஒழுங்கு செய்தல் மேலும் கூடுதலான வட்டியை நிவர்த்தி செய்தல்

உங்கள் கடன் அறிக்கையில் (Credit Report) உள்ள பழைய தகவல்கள்/தவறுகளையகற்றிட உதவிபுரிதல்

மீண்டும் நீங்கள் கடன் பெற வழிசமைத்தல்

CREDIT RECOVERY POINT

**WE PROVIDE FREE & PROFESSIONAL ADVISE IN TAMIL & ENGLISH**

We are the Pioneers of credit Recovery for our Community. Others Imitate we Create.

**OUR SPECIAL SERVICE**

**MORTGAGES** - 1st & 2nd (Bank & Private)
Commercial Mortgages - 1st & 2nd ( Bank & Private)
Refinancing & Consolidation ( Bank & Private)
Mortgage Renewal - Real Estate Needs
Buy and Sell Homes & Investment Properties
Line of Credit & Credit Cards

**BANKRUPTCY ADVICE** - How to avoid
Consumer proposal & Credit Counseling advice
Credit Repair - Credit Rehabilitation

**VARIOUS IMMIGRATION MATTERS**
Legal Advice - Criminal, Civil & Family Matters
CRA - Revenue Canada Tax Issues
OSAP - Student Loans Matters
Traffic Violations - Criminal & HWY Traffic Act

Apex Creation-416-297-0707

www.crpoint.ca **CR Point**

Tel : 416-412-6363
Cell : 416-856-5154
Fax : 416-412-1206
5200 Finch Ave. East, Suite 300, Scarborough, ON.
Email : crpoint300@gmail.com

Saba Inthiran
Financial Advisor

**ALL CONSULTATIONS ARE FREE**

# திருவள்ளுவர் பிறந்த ஊர்

அந்த செய்தியை கேட்டதும் உடனே புறப்பட்டோம். “திருக்குறளை எழுதியது திருவள்ளுவர் அல்ல ஆச்சாரியர் சிரீ குந்த குந்தர் என்பவர்தான் குறளை எழுதினார். வந்தவாசிக்கு அருகே இருக்கும் பொன்னூர்மலை என்ற சின்ன கிராமம்தான் அவர் சித்தியடைந்த இடம். அங்கே அவருக்கு கோயில் இருக்கிறது. இன்றும் பூஜைகள் நடக்கின்றன” என்பதுதான் அந்த செய்தி.

சென்னையில் இருந்து மூன்று மணி நேர பேரூந்து பயணத்தில், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிறது வந்தவாசி. மிட்டாய் கடைகளில் பரப்பி வைக்கப்பட்டிருக்கும் இனிப்புகளும், அதைவிட அழுத்தமான நிறங்களில் சேலையணிந்த பெண்களும், தொடைக்கு மேல் தூக்கிக் கட்டிய வேட்டியுடன் பேரூந்துக்கு காத்து நிற்கும் கிராமத்து ஆண்களுமாக களையுடன் இருந்தது வந்தவாசி பேரூந்து நிலையம். அங்கிருந்து அரை மணி நேர உள்ளூர் பேரூந்து பயணத்தில் வந்தது பொன்னூர் மலை.

பொன்னூர் மலை பேரூந்து நிறுத்தத்தில் இறங்கி, பக்கத்தில் இருந்த தேநீர் கடையில் தேநீர் அருந்திவிட்டு, ஆச்சாரியர் கோயிலை விசாரித்துவிட்டு நடக்கத் தொடங்கினோம். சிறிது தூரம்தான் சென்றிருப்போம், ஜடை முடியும் பல வருடங்களாக குளிக்காத அழுக்குமாக துண்டு ஆடைகூட இல்லாமல் நிர்வாணமாக எங்களைக் கடந்து சென்றார் அந்த மனிதர். நாங்கள் அதிர்ந்து அவரையே பார்த்துக்கொண்டிருக்க, கிராமத்தவர்களோ அதை மிக இயல்பாக எடுத்துக்கொண்டு எங்களைக் கடந்து சென்றார்கள். விசாரித்தபோது... “சமண முனிவர்கள் அவர்கள் எப்பொழுதும் இதுபோல் நிர்வாணமாகத்தான் இருப்பார்கள். கோயிலில் இன்னும் நிறைய நிர்வாணச் சாமியார்கள் இருக்கிறார்கள்” என்றார்கள்.



“தமிழகத்தில் காஞ்சிபுரம், செஞ்சி, திருவண்ணாமலை, ஆரணி, விழுப்புரம், திண்டிவனம், வந்தவாசி போன்ற இடங்களில் சமணர்கள் இன்று வாழ்ந்து வருகிறார்கள். எங்கள் சித்தாந்தப்படி, திருக்குறளை இயற்றியவர் குந்தகுந்தர் எனப்படும் எங்களுடைய ஆச்சாரியர் ஆவார். அவர் கிறிஸ்து பிறப்பதற்கு 52 ஆண்டுகளுக்கு முன்பே பிறந்து கிறிஸ்துவுக்கு பின்னால் 45 ஆண்டுகள் வரை வாழ்ந்திருக்கிறார். மொத்தம் 96 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவர். அவருக்கு பத்மநந்தி, வக்கிரகிரிவர், ஏலாச்சாரி யார் போன்ற பெயர்களுமுண்டு. அவரைப் பற்றிய பாடல்கள் சிலாசாசனமாக சிரவணபெல கோலாவிலுள்ளது. இப்போது கடலூர் என்று அழைக்கப்படும் ஊர் அந்நாட்களில் திருப்பாதிரிப் புலியூர் என்றழைக்கப்பட்டது. அன்றைய பாடலிபுத்திரத்திலிருந்த திருப்பாதிரிப்புலியூர் சமண மடத்தின் குருபீடத் தலைவராகவும் குந்தகுந்தர் இருந்துள்ளார். மிகப்பெரும் அறிஞரான அவர் பிராகிருத மொழி யில் பல நூல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் பஞ்சாஸ்தி காயம், பிரவசனசாரம், ஸமயசாரம் என்ற மூன்று நூல்கள் மிகச் சிறந்தவையாகும். அம்மூன்றும் “பிருப்ருதத்திரம்” என்று அழைக்கப்படுகிறது.

“குந்தகுந்தர் தமிழில் ஒரே ஒரு நூல் இயற்றியுள்ளார். அதுதான் உலகப்பொதுமறை என்றழைக்கப்படும் திருக்குறள். குந்தகுந்தர்தான் திருவள்ளுவர் திருக்குறள் முழுக்க முழுக்க சமண சமயத் தத்துவத்தை பிழிந்தெடுத்து வார்க்கப்பட்டிருக்கும் நூல். குந்தகுந்தர் பொன்னூர் மலையில் தங்கியிருந்த காலத்தில்தான் திருக்குறளை இயற்றினார். பின் இங்கு முக்தியடைந்தார்” என்றார்கள் அங்கு நாங்கள் சந்தித்த சமணர்கள்.

எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். பொன்னூர்மலையின் அடிவாரத்தில், தங்கும் வசதியுடன் கூடிய வழிபாட்டுத்தலம் உள்ளது. சில வட இந்திய மார்வாடிகளை குடும்பமாகக் காண முடிந்தது. இங்க வர்த்தமான மகாவீரரும் ஆச்சாரி யார் குந்தகுந்தரும் வழிபடும் தெய்வங்களாக இருக்கின்றனர். மலையடிவாரத்தில் சமய தத்துவத்தின்படி அமைந்த ஒரு ஸ்தூபி உள்ளது. அதன் நாலாபுறங்களிலும் திருக்குறள் செதுக்கப்பட்டுள்ளது. மலையடிவாரத்திலிருந்து மேலே செல்ல நல்ல படி வசதிகள் உள்ளன. ஆனால், மிகவும் செங்குத்தான மலை என்பதால் சிறிது தூரம் சென்றதுமே களைப்பு ஏற்பட்டு விடுகிறது. மெதுவாக ஏறினாலும் இருபது நிமிடத்தில் உச்சியை அடைந்து விடலாம். பாதிதூரம் ஏறியவுடன் உட்கார்ந்த நிலையிலுள்ள திருவள்ளுவரின் சிலை அகர முதல என்ற குறளுடன் காணப்பட்டது. உச்சியில் ஒரு சிறிய

> திருக்குறளில் எந்த ஒரு சமயக்கடவுளின் பெயரும் குறிப்பிடாதபடியால் காலத்திக்குக் காலம் வெவ்வேறு சமயத்தவர்கள் திருவள்ளுவர் தங்கள் சமயத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவதும் அதை மறுத்து இன்னொருவர் அறிக்கை விடுவதும் வழமையாகி விட்டது.

**- கிருஸ்ணன் -**

மண்டபம். அங்கே கல்லில் செதுக்கப்பட்ட இரு பாதங்கள் இருந்தன. அவை திருவள்ளுவருடையது என்றார்கள்.

பாதச் சுவடுகள் அருகே வர்த்தமானரின் சிறிய அளவிலான, நுணுக்கமான வேலைப்பாடமைந்த நிர்வாண சிலை காணப்பட்டது. மண்டபத்தைச் சுற்றியிருந்த மலைப்பிரதேசங்களில் குந்தகுந்தர் வாழ்ந்ததாக கருதப்படும் குகைகள் சில உள்ளன. மெல்ல, கீழே இறங்கி வந்து, மலையடிவாரத்தில் முன்னர் கண்ட வழிபாட்டுத்தலத்திற்குள் நுழைந்தோம். அங்கே 40 முதல் 80 வயது வரை மதிக்கத்தக்க ஏழு, எட்டு நிர்வாணச் சாமியார்கள் வஜ்ராசனத்தில் அமர்ந்திருந்தனர். சிலர் மொட்டைத் தலையுடனும் சிலர் நீள்முடி, தாடியுடனும் காணப்பட்டனர். வெள்ளை ஆடை தரித்த பெண் சாமியாரினிகளும் சிலர் இருந்தனர். அவர்கள் “மாதாஜி” என்றழைக்கப்பட்டனர். அவர்களைச் சுற்றி வடநாட்டுச் சமணர்கள் சிலர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். சூழ்நிலைக்கு சிறிதும் சம்பந்தமற்ற எங்களைத் திடீரென்று கண்டபோதும், அவர்கள் எந்தவிதமான சலனத்தையும் காட்டவில்லை. மிக இயல்பாக எங்களைப் பார்த்து புன்னகைத்து, தங்கள் பேச்சை தொடர்ந்தனர். சுற்றியிருந்த பக்தர்கள் கூட்டத்தில் பல இளம் பெண்களும் இருந்தனர். ஆயினும் வெகு சகஜமாகவே அவர்கள் பழகினர்.

காலச்சக்கரத்தில் பின்னோக்கிப் பயணித்து கி.மு.க்குச் சென்று திருவள்ளுவரின் சீடர் குழுவினருடன் கலந்துவிட்டு, மீண்டும் நிகழ்காலத்துக்குள் நுழைந்தோம். பேரூந்தில் திரும்பும் போது எங்கள் கண்கள் மீதே நம்பிக்கையற்று, நாங்கள் கண்டவை அனைத்தும் கனவா நனவா என்ற மயக்கத்துடனேயே இருந்தோம். பேரூந்து சென்னையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

• • •

## திருக்குறளை எழுதியது யார்? - அறிஞர்கள் என்ன சொல்லுகிறார்கள்.

“ஆச்சாரியர் சிரீ குந்த குந்தர் பிராகிருத மொழி யில் 52 நூல்கள் எழுதியுள்ளார். அவர் எழுதிய ஒரே தமிழ் நூல் திருக்குறள். அவரது சீடர்களிலேயே நுண்ணிய அறிவுடையவரான திருவுள்ளம் நயினார் என்பவர் மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றப் பட்டது என்பது சமண மரபு கூறும் கதை. இதை நம் காலத்தில் அறிஞர்கள் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

கி.பி.3ம் நூற்றாண்டுக்கு முன்பு வரை தமிழகத்தில் சமணர்கள் ஆட்சிதான் நடந்து வந்திருக்கிறது. அதன்பிறகு அவர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள் என்பதற்கும் கழுவேற்றிக் கொல்லப்பட்டார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன. சிலப்பதிகாரம், பெரியபுராணம், திருக்குறள் உள்பட தமிழ் மொழியின் பெருமைக்குரிய பல நூல்கள் சமண மரபில் எழுதப்பட்டவைதான். திருக்குறளில் வரும் கடவுள் வாழ்த்துக் குறளான “ஆதிபகவன் முதற்றே உலகு” குறள் இதற்கு மிகச்சிறந்த ஒரு உதாரணம். சமண மரபில் அமுத சரணம், சித்த சரணம், சாது சரணம் என்ற நான்கு முறைகள்படி கடவுளைத் தொழுவது வழக்கம். இந்த நான்கு முறைகள்படிதான் திருக்குறள் கடவுள் வாழ்த்து முற்றிலும் அமைந்துள்ளன.

காஞ்சிபுரம் தி.க. அனந்தநாத நயினார் என்பவர் 1932ம் ஆண்டு திருக்குறளுக்கு சமண மரபில் உரைகள் எழுதியிருக்கிறார். கவிராஜ பண்டிதவர் என்பவர் எழுதிய இன்னொரு சமண உரை 1947ம் ஆண்டு சமண அறிஞர் பேராசிரியர் சு. சக்ரவர்த்தி நயினார் என்பவரால் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், “திருக்குறள் - ஜைன உரை” எனப்படும் நூலொன்றை 1991ம் ஆண்டு தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியிட்டுள்ளது.

திருக்குறளின் ஆசிரியர் குந்தகுந்தர்தான் என்ற வரலாற்று உண்மை, வைதீக மரபில் திருக்குறளை வைத்து பரிமேலழகர் பொருள் உரைத்ததன் விளைவாக மறைக்கப்பட்டது” என்கிறார் பேராசிரியர் அ. மார்க்ஸ்.

ஆனால், சமணத்தில் ஆராய்ச்சிகள் செய்திருக்கும் ஆராய்ச்சியாளர் தமிழ் செல்வன் இதனை மறுக்கிறார். “தமிழ்நாட்டு வரலாற்றைப் புரிந்துகொள்வது சிக்கலான ஒன்று. முறையாக எழுதப்படாமலும், தரவுகள் திரட்டப்படாமலும் தமிழ் நாட்டு வரலாறு உள்ளது. அதனால்தான் ஒரு நூலை அது எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்று விவாதிக்கும் நிலை வந்துவிட்டது. திருக்குறளைப் பல்வேறு சமயப் பிரிவினரும் தங்களுடைய நூல்தான் என்று உரிமை

**தொடர்ச்சி 25ஆம் பக்கம்**

**APARTMENTS FOR RENT**



***In a NEWLY Renovated High-Rise Apartment Building***

***Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

# புலிகள் வாழ்விடம்...

14ஆம் பக்கத்தொடர்ச்சி



இந்தக் காட்டுப் பகுதிகளில் அவை ஆனந்தமாக வாழ்கின்றன. சமீபத்திய வனத்துறையினர் கணக்கெடுப்பில் அறுபதுக்கும் மேற்பட்ட புலிகள் களக்காட்டில் உள்ளதாக தெரியவந்துள்ளது. இத்தனை புலிகள் இருந்தாலும், ஒரு புலிகூட நம் பார்வைக்கு வராது. சில வருடங்களுக்கு முன் சேர்வலாறு மலைப் பகுதியில் சர்வேக்காகச் சென்றிருந்தபோது, 50 அடி தூரத்தில் ஒரு புலி நின்றுகொண்டு இருந்ததைப் பார்த்தேன். நல்ல வளர்ச்சி அடைந்த புலி! கிட்டத்தட்ட பத்து நிமிடங்களுக்கும் மேலாக அது அங்கேயே நின்று கொண்டு இருந்தது. எங்களுக்கெல்லாம் மிகவும் ஆச்சரியம்! வேறு எந்த இந்தியக் காடுகளிலேயும் புலிகளை இந்தளவுக்கு அமைதியாக நான் பார்த்ததில்லை. தனக்கு உகந்த சூழ்நிலையில்தான் புலிகள் இத்தனை அமைதயாக இருக்கும். களக்காட்டில் அந்தச் சூழல் இருக்கிறது போலும்!" என்கிறார் ஒரு வனத்துறை அதிகாரி.

புலிகளை பார்க்கமுடியாவிட்டாலும், களக்காட்டின் அமைதியும் ஏகாந்தமும் நம்மை இறுகக் கட்டித் தழுவிக்கொள்கிறது. "எத்தனைக் கோடி இன்பம் வைத்தாய் இறைவா" எனக் கேட்கத்தான் தோன்றும். அந்தளவுக்கு ஒரு இனிமையான அனுபவம், களக்காடு!

## எப்போது செல்வது, எப்படி செல்வது? எங்கே தங்குவது?

திருநெல்வேலியில் இருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ளது களக்காடு. ஒரு மணி நேர பேருந்து பயணம். அடிக்கடி பேருந்து வசதிகள் உள்ளன. களக்காட்டில் தங்க நல்ல விடுதிகள் இல்லை. எனவே, திருநெல்வேலியில் அறை பதிவு செய்துக்கொள்வது நல்லது. மார்ச் மாதம் 20, 21, 22 ஆகிய நாள்களிலும், செப்டம்பர் 20, 21, 22 ஆகிய நாள்களிலும் சூரியனின் கதிர்கள் களக்காடு சிவன் கோயில் சுவாமி மீது படும் அற்புதக் காட்சி கண்டு மகிழத்தக்கது. மேலும், இம்மாதங்களில்தான் மழை கொஞ்சம் குறைவாகவும் இருக்கும். எனவே, இம்மாதங்களிலேயே செல்வதே புத்திசாலித்தனமானது. களக்காடு - முண்டந்துறை புலிகள் சரணாலயம் செல்ல வனத்துறையினரின் அனுமதி பெறவேண்டும்.

**வழிப்போக்கன்**

# திருவள்ளுவர்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

கொண்டாடுவது போல் சமணர்களும் தங்கள் நூல் என்று உரிமை கொண்டாடுகிறார்கள். இது நீண்ட நாட்களாக உள்ள சர்ச்சைதான்.



திருக்குறளில் சமணம் சார்ந்த கருத்துகள் இருப்பதைப் போல் பௌத்தம் சார்ந்த கருத்துகளும் இருக்கின்றன. அசீவக மதத்தின் நியதி தத்துவம் திருக்குறளின் "ஊழ்" அதிகாரத்தில் அப்படியே இருக்கிறது. இந்த "ஊழ்"கொள்கை, சமணவினைக் கோட்பாட்டிற்கு நேரெதிரானது. பிறகெப்படி திருக்குறள் சமண நூலாக இருக்க முடியும்? மேலும் மார்க்ஸ் குறிப்பிடும் இரண்டு சமண உரைகளும் செவ்வியல் மரபைச் சேர்ந்த உரைகள் அன்று. இந்த இரண்டு உரைகளிலும் சமணத் தத்துவத்திற்கு எதிரான உரைகள் உண்டு. ஆகவே, திருக்குறளைச் சமண நூல் எனக் குறிப்பிடுவது எவ்வகையிலும் பொருந்தாது" என்கிறார் தமிழ் செல்வன்.

*நன்றி- சமணர்கள் படம் விக்கிமீடியா தளத்தி இருந்து எடுக்கப்பட்டது.*






# நகைச்சுவைத் தொடர் 198
# ராசம்மா ராச்சியம்
### கலகலப்பு தீசன்




காலங்கள் மாறுவதுடன் நேரமும் மாறுகிறது. கடிகாரத்தை ஒரு மணி நேரம் குறைக்க மறக்காதீர்கள். நேரத்தை வீணாக்காதீர்கள்.

நீங்கள் கந்தசஸ்டி பிடியுங்கோ பின்லாடனை அமெரிக்கன் ஆமி பிடிக்கட்டும்



'தினம்தினம் தினம் தீபாவளி'
'நீ சிரித்தால் தீபாவளி நான் சிரித்தால் தீபாவளி'
வானொலிகளில் ஒலித்துக்கொண்டிருந்தன.



ஆனால் பலர் மனதில் உள்ளுக்கு ஒலித்தபாடல் இதுதான்
'உன்னைக்கண்டு நான் வாட என்னைக்கண்டு நீவாட
கண்ணீரும்.. கதை.. சொல்லும் தீபாவளி..'

சீனவெடி கொழுத்தி கொண்டாடிய தீபாவளிகள் போய்
கொட்டும் மழையிலும் இடியிலும் விமானத்தால் கொட்டும் வெடி குண்டுடன் தீபாவளி.
ஆடடித்துப்பங்கு போட்ட காலம் போய் ஆளை அடித்த நிலத்தைப்பங்கு போடும் காலமிது.

பங்கரில் பாம்பு கொத்த..
வெளியிலே பொம்மர் குண்டு கொட்ட
உலகநாடுகள் கண்டும் காணாதிருக்க

செக்கண்ட்புளோர் செல்லம்மா கையில் கந்தசஸ்டி கவசத்தை வைத்து காக்க காக்க என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தா. ஐப்பசி வெள்ளி, கந்தசஸ்டி காலமும் நேரமும் ஓடிக் கொண்டிருக்கிறது. எங்களையறியாமல் வயதும் ஓடிக்கொண்டிருக்கிறது.



ரூபன் இரண்டு கைகளிலும் மரக்கறி பழங்களுடன் தலையை ஆட்டிக் கதைத்துக்கொண்டு வந்தான். என்ன ரூபன் உடம்பெல்லாம் வயறிங்செய்தபடி வாறாய் என்று சிரித்துக்கொண்டு ஆட்டிலறி அன்னம்மா கேட்க அன்னம்மா




அன்ரி! யு நோ கார் ட்றைவ் பண்ணேக்கை செல்போன் பாவிச்சா 500 டொலருக்கு ரிக்கற் குடுக்க சட்டம் வரப்போகுதாம்.. என்று சொல்ல ஓம் அன்னம்மாக்கா கனபேர் அக்சிடெண்ட் படுறது செல்போன் பாவிச்சுக்கொண்டு கார் ஓடறதால தானெண்டு நானும் எங்கையோ வாசிச்சனானெண்டு தன்ரை உலகறிவை அவிட்டுவிட்டா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



உலகண்ணை ஓபாமாவை சுடத்திரிஞ்ச பெடியள் 2 பேரை அமெரிக்கப்பொலிஸ் பிடிச்சுப்போட்டினம். அதுசரி அன்னம்மாக்கா உந்த ஆயிரக்கணக்கான அமெரிக்கன் ஆமி ஈராக்கிலும் அப்கானிஸ்தானிலையும் போய் இன்னும் பின்லாடனைப் பிடிக்கெல்லியோ எண்டு கேட்க ரூபன் சிரித்தக்கொண்டு செல்லம்மாக்கா நீங்கள் கந்தசஸ்டி விரதத்தைப்பிடியுங்கோ பின்லாடனைப் பிடிக்கிறதைப்பற்றி லெக்சன் முடிய ஓபாமா யோசிக்கட்டும் என்று சொல்ல எல்லோரும் சிரிக்க...



உலகர் உலகப்போரில் உயிர்நீத்த ராணுவத்தினரின் நினைவுதினத்தைக் கலண்டரில் பார்த்துக்கொண்டிருக்க அவரின் மனம் ஈழப்போரில் உயிர் நீத்தவர்களை நினைத்துக்கலங்கியது.




யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

HOMELIFE/GTARealtyInc., Brokerage*



Seelan Siva Aiyadurai
Real Estate Broker
Direct: 416-451-0271
Email:seelansiva@gmail.com
Web:www.sivahomes.com

HOMELIFE HIGHER STANDARDS

Uthayan Aiyadurai
Sales Representaive
Direct: 416-999-3555
Email:aiya14@gmail.com



"THANK YOU FOR YOUR SUCCESSFUL REFERRALS"

IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

HERE IS YOUR CHANCE TO WIN

$349,900

Neilson/Mclevin
Beautiful Detached with 2b/r Bsmt Apt.
Granite Counter top, Freshly Painted
Good Location

$249,000


Markham/Mclevin
Good Location, Prestigious Neighborhood
3+1 Bedrooms, 2 Washrooms
New Kitchen (2008),
New Windows(2007), Roof(2006),




$354,900


Bovaird/Hwy7
Well Maintained, Full Brick
4 Br Detached, Lovely Open Concept
Minute Walk To Catholic And Public Schools, Good Location

$195,900


Middlefield/Finch
Open Your Own Business
Good Location, Busy Intersection
480 Sqft with Parking & Locker
Plenty of parking

$314,900

Neilson/Mclevin
Well Maintained, Full Brick
4 Br Detached, Finished Bsmt
Engineered Hardwood, Good Location

$164,900

Neilson/Mclevin
2 Bedroom Condominium
corner Unit, 24 Hr Security
2 Parking Spaces , Good Location

$189,900

Mccowan/Steeles
Well Maintained
2 +1 Bedroom Condominium
2 full Washrooms,Beautiful Lay Out
Parking Spaces , Good Location

$319,000

Wellesley/sherbourne
Very Good Location
1+1 Bedrooms, Built by Tridel
Prestigious Neighborhood, Granite counter Top
Close To All Amenities

$345,000


9thl ine/16th Ave
Good Location, Few Years New.
Open Concept,
Hardwood on Mainfloor,
Breakfast Area

1711M cCowanR d, Suite2 06, Toronto, ONM 1S-3Y3 Bus:(416)321-6969

*IndependentlyO wneda ndO perated *SomeC onditions Apply
Thisis n otin tendedto s olicit properties currentlyli stedfo rs ale.


நிரு
பிராண்ட்
Niru BRAND®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
Niru BRAND®

# எதையும் எனக்குக் கொடுக்காது, பிறருக்கு வழங்குவது கடினம்

எதையும் முதலில் எனக்குக் கொடுக்க முன்பு, அதை என்னால் பிறருக்குக் கொடுத்து உதவிட முடியும் என இதுவரை நம்பியதற்காக என்னை மன்னித்திட நான் இப்போ உடன்படுகிறேன்.

ஒருவர், உனக்கு ஏதோ பிழை செய்ததற்காக அவரை மன்னித்திட முயன்றும், முடியாது இன்னமும் நீ அவருடன் கோபமாய் இருந்தால் உனது மனநிலையைக் கொஞ்சம் அவதானித்துக் கொள். மன்னிக்க விரும்பாது, பழிக்குப் பழியாக வஞ்சம் தீர்க்கத் தான் நீ விரும்புகிறாயா? உண்மையில் பழிக்குப்பழி வாங்கவே நீ உத்தேசித்தால் மன்னிப்பதனால் உனது மனச்சுமை ஒருபோதும் குறையாது. இரக்க உணர்வுடன் நீ மன்னிக்கும்போது மட்டுமே உனது மனப்பாரம் மறையும்.

எதிர்மறை செயல்களான, வேண்டாம் எனத் தள்ளி வைத்து ஒதுக்குதல், கைவிடுதல், காட்டிக்கொடுத்தல் போன்ற பாரிய தாக்கங்கள் வாழ்வில் ஏற்படும்போது கோபம் ஏற்படுவது இயல்பு. முதலாவதாக குற்றம் புரிந்தவர் மேல் சினம். பின்பு, ஏன் எனக்கு இது நடந்தது என இறைவன் மீது கோபம். இக்கோபம் தணிவதற்கு உனக்கு மன்னிப்பு அத்தியாவசியம். இத்தனை மனவேதனையை ஏற்படுத்திய உனது எண்ணங்களை உணர்வுகளை வெளிப்படுத்தாது, மனதிற்குள் அடக்கி வைத்துக் கொதித்துக் கொண்டிருந்ததற்கு உனக்கு நிச்சயம் மன்னிப்பு வேண்டும். கடவுள் உனக்கு உதவி செய்யாதபடியால், உனது கோபத்தையும் துவேசத்தையும் வளர்த்து, நிச்சயம் நீ பழிவாங்கத்தான் வேண்டும் என நம்பியதற்காக உனக்கு மன்னிப்பு அவசியம். உன்னை ஏமாற்றியவர்களை மன்னிப்பதனால் அவர்களைக் கட்டவிழ்த்து விடுகிறாய் என நம்பியதற்காக உனக்கு மன்னிப்பு தேவை. ஆனால் உண்மை என்ன தெரியுமா? உனது எதிரிகளை மன்னிக்காத போது, நீ தான் கட்டுப்பட்டுத் துன்பம் அநுபவிக்கிறாய்.

மன்னிப்பது உனக்குக் கஷ்டமாக இருந்தால் மனநிம்மதி பெற்றிட, பரிவு நிறைந்த இரக்க உணர்வுடன் செயற்பட்டுப்பார். இப்படிக் காயப்பட்டுத் துன்பம் அநுபவிக்கின்றேனே என்ற உணர்வுகள் உனக்குள் மேலோங்குவதற்காக உன்னை மன்னித்து விடு. உனது எதிர்மறை உணர்வுகளைக் கைவிட முடியாமல்



இருப்பதற்காக உன்னை மன்னித்துவிடு. துன்பத்தைத் துடைத்திடும். குடும்பத்துடன், பிறரின் மனத்துயரை உணர்ந்து புரிந்துகொள்ளும் மதிநுட்பம் தான் இரக்கம். இந்த எதிர்மறை உணர்வுகளின் தாக்கத்திலிருந்து விடுபட்டு, நான் குணமடைய வேண்டும் என்ற உனது ஆசை, உனது கோபத்தைவிடக் கூடியதாக பெருகும்போது, இரக்கமிகு மன்னிப்பின் கதவை நீ திறப்பாய்.

பழிக்குப்பழி வாங்கி வஞ்சம் தீர்ப்பதையே இன்றுவரை நீ உனது குறிக்கோளாகக் கொண்டிருக்கலாம். எனது மனத்துயரத்தைத் தீர்ப்பதை விட வஞ்சம் தீர்ப்பதா பெரிது என உன்னையே நீ இப்போ கேட்டுக்கொள். பழிக்குப்பழி வாங்கவே நீ விரும்பினால், உன்னை சாந்தப்படுத்திக் குணமாக்கிட நீ இன்னும் ஆயத்தம் இல்லை. ஆகவே உனக்கு உதவிட இரக்கத்தை நீ அழை. மன்னிப்பதை மறுதளித்து கோபத்தைத் தேர்ந்தெடுத்ததற்காக உன்னை நீயே மன்னித்து விடு.

மன்னித்தல் எனும் மாபெரும் இரக்க மனப்பான்மையை எனக்குள் முதல் உணர்ந்து, வளர்த்து, வெளிப்படுத்தி இனிமேல் அதை அனுபவித்திட நான் இன்று கங்கணங்கட்டிக் கொள்கிறேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 136


மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி






AIR LINK TRAVEL LTD.

5200 FINCH AVE. E., #115, SCARBOROUGH, ON., FINCH & MIDDLEFIELD

TEL: 416.292.6200 FAX: 416.292.7478



Anton Jeeva, P.Eng.
Real Estate Broker
Principal Mortgage

RE/MAX

வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க

எந்தவித அடமானக் கடன்களும் பெற

Direct - 416.575.5055

Condo. for sale $306,900



- 361 Front St W 603
- Front/Blue Jays Way
- 1 +1 Bedrooms
- 1 Washrooms
- Hardwood Flooring
- Indoor Pool, Gym, Sauna, Rec Room...

Condo. for sale $159, 990



- 45 Sunrise Ave 1011
- Victoriapark/Eglinton
- 3 Bedrooms
- 2 Full Washrooms
- Fridge, stove, washer, dryer, all elf

HOUSE FOR SALE $315,000



- 93 Griffiths Dr.
- Ajax
- 2 - Storey
- 4 + 1 Bedrooms
- 3 Washrooms
- 2 Parking
- part finished bsmt

HOUSE For Sale $229,900



- 695 Birchmount Rd N 9
- Birchmount/St.Clair
- Bedrooms: 3 + 1
- Washrooms: 2
- Finished bsmt
- 2 fridge, stove, blt dish-washer, Dryer, All Elf

HOUSE FOR SALE $349,900
48 Jaffray Rd.
McCowan & Denison



- 2 - Storey
- 3 + 2 Bedrooms
- 3 Washrooms
- Huge Backyard
- Finished Bsmt, Sep. Ent
- Fridge, Stove, washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE $209,900



- 3650 Kingston Rd 411
- Markham/ Kingston st.
- 2 +1 Bedrooms
- 1 Washroom

HOUSE For Sale $354,900



- 29 Sawdon Dr. Burns/Thickson,
- Whitby
- Bedrooms: 4 + 2
- Washrooms: 4
- 2 parking
- Finished BSMT
- Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. for sale $135,888



- 2466 Eglinton Ave 517
- Kennedy/Eglinton
- 1 + 1 Bedrooms
- 1 Washroom
- Fridge ,Stove ,Washer,dryer

HOUSE For Sale $348,900



- 23 Parsonage Dr.
- Morning Side/Mcclele
- Bedrooms: 3 + 1
- Washrooms: 4
- 2 Stoves
- 2 Fridges , Washer , Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO

REMAX VISION REALTY INC.

Specciallized in Power of Sale Homes



NuTek COMPUTERS
www.nuTechComputer.com

- Virus Removal
- Internet Sharing
- Computer Tune Up
- Computer Repair

அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்

416.587.1619
techsupport@nutechcomputer.com

Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional

SALES - SERVICE - UPGRADES

KEITH APPLIANCE SERVICE

Heating & Air Condition



Service, All makes repair installation for central A/C & furnace.

தொடர்புகளுக்கு: கேதீஸ்

416-786-6790 / 416.787.4715



ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880